# தற்பர ஒளி



அமரர்
அப்புத்துரை தற்பரானந்தன் J.P
S.L.E.A.S III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## அப்புத்துரை தற்பரானந்தன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

15.07.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமர்ப்பணம்



அன்பின் விடிவிளக்காய்
ஆளுமையின் அணிகலனாய்
இன் சொல்லின் இலக்கணமாய்
பொறுமையின் பொக்கிஷமாய்
சிரிப்புடன் வலம் வந்து
அன்புடனே எமை எல்லாம்
அரவணைத்து வழிகாட்டி
அகிலத்தில் வாழ வைத்த
எம் அன்புத் தெய்வத்தின்
பொன்னடியில் காணிக்கையாக
இம் மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# அப்புத்துரை தற்பரானந்தன் J.P

S.L.E.A.S III

தோற்றம்
03.01.1943

மறைவு
05.06.2012

## திதி வெண்பா

வாழ்கின்ற நந்தன வைகாசித் திங்களில்
சூழும் அபரத் துதியை நாள் - ஈழத்துக்
கந்தரோடை சேர் தற்பரானந்தன் வற்றாக்கைச்
சிந்தையுடன் சாந்தி பெற்றார் சேர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்ச தோத்திரம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

அங்கமும் ஆதியும் நான்முகினும்
அறவனையார்க்கும் அருப்பரிய
மந்திரவேதங்கள் ஓதும் நாவர்
மருகநிலாவிய மயிந்த சொல்லால்
செந்தமிழோர்கள் பரவியேற்கும்
சீர்க செங்காட்டும் குடியதனில்
கங்கமத்தி குகையே கமலும்
கணபதீச்சரம் காமுறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்த எம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய்ச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலே யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன்
கண்டாய் வருக என்னருள் புரியாயே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பாய் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுது அருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைத்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## திருப்புகழ்

தனன தான தத்த தனதான
தனன தான தத்த தனதான

எதிரிலாதபக்தி தனைமேவி
இனிய தாணினைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிரகாம வெற்பி லுறைவோனே
குனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மணிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம், கந்தரோடை அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

இலங்கையின் வடபால் சரித்திரப் பிரசித்திபெற்ற கந்தரோடை ஊரிலே கோப்பாய் அரசகுலகுமார சூரிய முதலி வழிவந்த வெற்றிவேலுமணியம் அம்பலவாணர் சின்னத்தம்பி மனைவி தங்கமுத்துவுக்கும் மகனாய் பிறந்த இந்து போர்ட்டில் கணக்காளராக இருந்த திரு.அப்புத்துரை அவர்களுக்கும் சங்கானை மனுநீதிபல்லவ முதலி வழிவந்த சின்னத்தம்பி அம்பலவாணர் தமிழ்க் கந்தையா உபாத்தியாயருக்கும் மனைவி கந்தரோடை தெய்வானைப் பிள்ளைக்கும் ஒரே மகளாகப் பிறந்த சேதுநாயகி அம்மையாருக்கும் மூத்த மகனாக 1943 தை மாதம் 3ம் திகதி தற்பரானந்தன் அவர்கள் பிறந்தார்.

அப்புத்துரை சேது நாயகி தம்பதிகளுக்கு மூத்த மகனாக தற்பரானந்தனும் அவருக்கு உடன் பிறப்புகளாக நித்தியானந்தன், சர்வானந்தன், குலகுணேஸ்வரி, குலகுணராணி, குலகுணசக்தி, தேவானந்தன் ஆகியோர் பிறந்தார்கள்.

கல்வி நலன் சிறந்த குடும்பத்தில் பிறந்து இவ்வாறு இனிய இளைய சகோதரங்களோடு சேர்ந்து ஒழுங்காக வளர்க்கப்பட்டுவந்த அமரர் தற்பரானந்தன் அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை யா.இராமநாதன் கல்லூரியிலும் தமது தாய்வழிப்பாட்டன் அமரர் கந்தையா உபாத்தியாயர் நிறுவிய கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையிலும் கற்றார். இடைநிலைக் கல்வியைக் கந்தரோடை ஸ்கந்த வரோயதயாக் கல்லூரியில் கற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் G.A.Q பரீட்சையிலும் Dip in Commerce பரீட்சையிலும் சித்தி ஏய்தினார்.

ஒரே காலத்தில் எழுது வினைஞர் சேவைக்கும், ஆசிரிய சேவைக்கும் அழைப்புக் கிடைத்த போது அமரர் அவர்கள் ஆசிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையினையே தேர்ந்தெடுத்தார். 2.5.1960 ல் யாழ் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1962 யிலிருந்து திருநெல் வேலிசைவாசிரிய கலாசாலையிலும், கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லாரியிலும் ஆசிரிய பயிற்சி பெற்று 1964ல் பண்டாராவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். 1966ல் கொழும்பு-தெற்கு கதீட்றல் கல்லூரியிலும் 1967ல் வெள்ளவத்தை சி.சி.தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியராக இருந்தார். பின்பு 1969ல் அதிபர் தரம் IV பதவியுயர்வு பெற்று பம்பலப்பிட்டி இந்துக் கல்லாரியில் 1974 வரை பணியாற்றினார். 1974ல் புலத்கொகுப்பிடியாவில் அதிபராக பணியாற்றினார். 1975ல் நுகோகொடை தமிழ் மகாவித்தியாலத்தில் அதிபராகவும் இருந்து 1976ல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு கனிஸ்ட பிரிவு பொறுப்பான ஆசிரியராக பதவி ஏற்றார் 1978ல் அதிபராக பதவி உயர்வு பெற்று கந்தரோடை கந்தையா வித்தியாசாலையில் அதிபராக பதவி ஏற்றார்.1982 இல் அதிபர் தரம் I ஆகப் பதவி உயர்வு பெற்றார்.

அமரர் தற்பரானந்தன் அவர்களுக்கு பெற்றோர் பேசி நிச்சயித்த கருகம்பனை சோதிநாகரத்தினம் (Audit Office) மாமாங்கம் தம்பதிகளுக்கு இரண்டாவது மகளாகப் பிறந்த விஞ்ஞான ஆசிரியையான நகுலாம்பிகைதேவியை 6.7.1979ல் திருமணம் செய்து இல்லறவாழ்வில் பகுந்தார். தமது பிறந்த ஊரான கந்தரோடையிலேயே தமது இல்லற வாழ்வையும் தொடர்ந்து வந்தார். அவரது சகோதரன்களில் நித்தியானந்தன் (நிலஅளவையாளர்) மயிலிட்டி கேமாங்கினியைத் திருமணம் செய்து அர்ச்சுதன் என்ற மகனும் அடுத்த சகோதரன் சர்வானந்தன் (எரியூட்டுனர் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை) அராலி சித்திராவை திருமணம் செய்து சிவகரன், சிவஜீவன் சிந்துஜா ஆகிய பிள்ளைகள் உள்ளனர். சகோதரிகளில் மூத்த சகோதரி குலகுணேஸ்வரி தொல்புரம் சண்கந்தையா (பொதுசனநூலக நூலகர்) அவர்களை திருமணம் செய்து குமுதினி ஜபாலினி, துவாகரன், மைதினி, மாதினி ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் உள்ளனர். இவர்களில் குமுதினி (ஆசிரியை கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாலயம்) அவர்கள் மைத்துனராகிய விஸ்வநாதனை திருமணம் செய்து கந்தரோடையில் வசிக்கிறார். அடுத்த மகள் ஜபாலினி பிரணவனை விவாகம் செய்து அட்சயா அகரன் ஆகிய இரு பிள்ளைகளுடன் கனடாவில் வசிக்கிறார்.

அமரரின் அடுத்த சகோதரி குலகுணராணி சுன்னாகம் செல்வக்குமாரன் அவர்களை (அதிபர்) திருமணம் செய்து கஜானன், சாம்பவி, சர்வகா ஆகிய பிள்ளைள் உள்ளனர்.இளைய சகோதரி திருமதி குலகுணசக்தி கனடாவில் வசிக்கிறார். கடைசிச் சகோதரன் தேவானந்தன் (பொறியிலாளர்) அமராராகிவிட்டார்.

அமரர் தற்பரானந்தனின் மனைவியின் சகோதரர் தில்லைநடராசா (லண்டன் B.Sc) செல்வராணியை திருமணம் செய்து கேதாரணி, பவதாரணிகுமரன் ஆகிய பிள்ளைகளும் மனைவியின் சகோதரி வடிவாம்பிகாதேவி பொன்னம்பலம் (மேலதிக மாவட்டப் பதிவாளர்) அவர்களைத் திருமணம் செய்து நிகேதினி, சிவமயூரன் ஆகிய பிள்ளைகள் உள்ளனர்.

1991ல் அதிபர் தரம் உயர்வு பெற்று கந்தரோடை ஸகந்தவரோதயக் கல்லூரிக்கு பிரதி அதிபராக கடமையாற்றி 1993ல் பதவிவுயர்வு பெற்று தெல்லிப்பளைக் கோட்டக்கல்வி அதிகாரியாக பணியாற்றினார்.

1994ல் சங்கானைக் கல்விக்கோட்டத்தின் பதில் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற அமரர் தற்பரானந்தன் அவர்கள் 1997ல் அக்கோட்டத்தின் கல்விப்பணிப்பாளராக அங்கீகரிக்கப்பட்டார். தொடர்ந்து 1997 உடுவிற் கல்விக் கோட்டங்களிலும் கல்விப்பணிப்பாளராகப் பணிபுரிந்த அமரர் அவர்கள் 2002 ல் S.L.E.A.S. Class IIIல் நியமனம் பெற்றார். 2003ல் ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும், அப் பணியாற்றுங்காலத்தில் தாம் மேற்கொண்டிருந்த கல்வி, சமய, சமூகப் பணிகளை முழு நேரப் பணியாக தொடர்ந்து ஆற்றி வந்தார்.

சுங்கானைக் கோட்டக் கல்விப்பணிப்பாளராய்ப் பணிபுரிந்த காலத்தில், சைவ, தமிழ்ப் பண்பாடுகளை மாணவர்களிடையே வளர்க்கும் நோக்குடன், தமிழ்மொழித்தினம், திருமுறை விழாக்களை நடத்த வழிகாட்டினார். சிறப்பு நிகழ்ச்சியாக பாடசாலை அமைந்துள்ள ஊரில் உள்ள கோவிலிலிருந்து திருமுறை ஏடுகளை பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர் சூழ ஊர்வலமாக எடுத்துவந்து பாடசாலை மேடையில் வைத்து விழா நடத்தப்படும். ஆண்டுக்கு ஒரு பாடசாலையில் இந்நிகழ்ச்சி இடம்பெறும். மேலும், கோட்ட மட்டத்திலான தொண்டுபடு செயல்முறை என்னும் நிகழ்ச்சியினூடாக, அமரர் தற்பரானந்தன்அவர்கள் பாடசாலைகளில், தோரணம் பின்னுதல் பூமாலை கட்டுதல், கோலம் போடுதல், நீதி நூல் மனனம், பண்ணிசை, புராணபடனம் என்பனவற்றிலான போட்டிகளை மாணவரிடையே நடத்திப் பரிசில்கள் வழங்கவும் ஆவன செய்தார். இவ்வாறே உடுவில் கோட்டத்தில் பணிபுரிந்த காலத்தில் அங்கும் இச்செயற்பாட்டை நடைமுறைப்படுத்தினார். இவரை பின்பற்றிப் பின்னால்வந்த பணிப்பாளர்களும் நடந்து வந்ததால், நடந்து வருவதால் இக்கோட்டங்களின் மாணவர்கள் சைவத்தமிழ்ப்பண்பாட்டில் ஊறிவளர அமரர் அவர்கள் வழிவகுத்தார்கள்.

N.P.T.A சகாய நிதிச்சங்கத்தின் செயலாளராக 2003 வரை சங்கத்தைச் செவ்வனே வழிநடத்தினார். மேலும் வடஇலங்கைச் சங்கீத சபையின் செயலாளராகப் பத்து ஆண்டுகளுக்குமேல் தொண்டாற்றிய அமரர் இக்காலப் பகுதியில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரிக்கும் K.K.S வீதிக்கும் மேற்குப்புறமாக ஒரு காணியை தமது நண்பரிடமிருந்து குறைந்த விலையில் இச்சங்கீத சபைக்கு வாங்கிகொடுத்து, இச்சபைக்குச் சர்வதேசரீதியில் அங்கீகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்திருந்தும் ஒரு நிரந்தரக் கட்டடம் இல்லாத குறையைப் போக்க வழி செய்தார். அலுவலகம், கலையரங்கம், மகாநாட்டு மண்டபம், எனத்தோற்றம்பெறும் விதத்தில் ஒரு கோடி ரூபா செலவில் கீழ்த்தளம் அமைக்கப்பட்டு அது நிறைவுபெறும் நிலைக்கு அதனை வளர்த்தும் உள்ளார். சபையின் 80 ஆண்டுப்பணி நிறைவைமுன்னிட்டு அமுதமலர் வெளியிடும் ஏற்பாட்டிலும் உழைத்து வந்தார். இந்த ஆண்டு சங்கீதசபையின் ஆசிரியதரம் தேர்விற் சித்தியடைந்த மாணவர்களுக்குக் 'கலாவித்தகர்' பட்டமளிப்பு விழாவை நடாத்தி மகிழ்ந்திருந்தார்.

மேலும் 2004-2010 வரை சைவவித்தியா விருத்திச்சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றினார். அத்தோடு இந்துபோட் இராசரத்தினம்-காலமும் வாழ்வும் என்னும் நூலையும், சைவ வித்தியாமலர் என்னும் நூலையும் வெளியிட்டார். கொழும்பில் கற்பித்தகாலத்தில் கொழும்பு விவேகானந்தசபையில் உறுப்பினராகப் பணியாற்றிய அமரர், திருக்கேதீச்சர ஆலயத்தின் அறங்காவற்சபையின் ஆயுட் கால உறுப்பினராக இருந்து அரும் பணியாற்றிவந்துள்ளார். உடுவில் நடுவர் சபையின் தலைவராக பணியாற்றியதோடு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தில் பல பதவிகளை வகித்ததால் பல சர்வதேசக் கருத்தரங்குகளிலும் பங்குபற்றினார். சுன்னாகம் நகர அபிவிருத்திச்சபையின் தலைவராக இருந்து சுன்னாகம் தபாலகத்திற்குத் தேவைப்பட்ட காணிவாங்குவதில் பெரும்பங்காற்றினார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி தற்போது இயங்கிவரும் கோப்பாயிலுள்ள காணி அதன்பொருட்டு நன்கொடையாகப் பெற்றுக்கொள்வதற்கு கொள்வனவு செய்யப்படுவதற்கு பெரிதும் உழைத்தார். கந்தரோடை ஸ்ரீசுப்பிரமணிய வாசிகசாலையின் தலைவராகவும் பணிபுரிந்தார். கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலயத்தின் திருப்பணிச்சபைத் தலைவராகப் பதவி வகித்து, தனது உரிமையான அக்கோவிலில் அலங்கார உற்சவங்களையும் பின்னர் மகோற்சவங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து சிறக்கும் வண்ணம் செய்து, அதன் தேர்த்திருவிழாவையும் தமது குடும்ப உபயமாக ஆண்டுதோறும் செய்து வந்துள்ளார்.
இலங்கை இந்து கலாச்சார அமைச்சு 2005ல் நடத்திய சேக்கிழார் மாநாட்டில் சித்தாந்த வித்தகர் என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட அமரர் தற்பரானந்தன் அவர்கள் மதுரை தருமை ஆதீனத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த ஆராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றி நிவைவுச்சின்னம் வழங்கப்பெற்றார். ஓய்வு பெற்ற பின்னும் ஓயாதுழைத்த அமரர் யாழ்ப்பாணம் ஓய்வூதியர் சங்கத்தலைவராகவும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமரர் ஆசிரியா அதிபர், கல்விப்பணிப்பாளர் அப்புத்துரை தற்பரானந்தன் பல்லாயிரம் மாணவச்சேய்களை வளர்த்தெடுக்கும்பொறுப்பு வழங்கப்பெற்றதால் அவருக்கு என்று தனியாகக் குழந்தைச் செல்வங்கள் இல்லாவிட்டாலும் எல்லோரையும் தன் பிள்ளைகள் போல கல்வி அறிவில் சிறந்தோர்கள் ஆக்கி ஆனந்தமடைந்தார். ஆயினும் அமரரின் சகோதரிகள் பெற்ற பிள்ளைகளையும் அதாவது நித்தியானந்தனது சேய் ஆச்சுதனையும், சர்வானந்தனின் சேய்கள் சிவகரன், சிவஜீவன், சிந்துஜாவையும், குலகுணேஸ்வரியின் பிள்ளைகள் குமுதினி ஜபாலினி துவாகரன் செல்விகள் மைதினி, மாதினி ஆகியோரையும் அடுத்த சகோதரி குலகுணராணியின் பிள்ளைகள் கஜானன், சாம்பவி, சர்வகா ஆகியோரையும் அமரர் தற்பரானந்ததனன் தன் சொந்தப்பிள்ளைகள் என்று அக்கறை காட்டிக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் முன்னேற்றி மகிழ்ந்தார்.

பேரப்பிள்ளைகளாக மருமகள் ஜபாலினி பிரணவன் (பிரபு) பிள்ளைகளான அட்சயா, அகரனையும் கொஞ்சி மகிழ்ந்தார்.

இவ்வாறு கந்தரோடை வீரகத்திப் பிள்ளையார், அருளானந்தப் பிள்ளையார், வற்றாக்கை அம்மன் அருளால் சீரும் சிறப்புமாக வாழ்ந்துவந்த அமரர் தற்பரானந்தன் கடந்த இரு ஆண்டுகளாக கொடுநோயால் பீடிக்கப்பட்டிருந்து, அக்கறைமிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வைத்தியர் பராமரிப்பினையும் கடந்து திருகேதீச்சர நாதர் தேர்பார்த்து மறுநாள் கந்தரோடை அருளானந்தப் பிள்ளையாரின் தேர் மகோற்சவம் காணப்புறப்பட்டு வந்து தனது பிறந்த வீடான கந்தரோடை அமராரின் தாயாரின் வீடு சென்றடைந்தார். மறுநாள் கடந்த ஐ/ன் மாதம் 5ம் நாள் கந்தரோடை அருளானந்தப் பிள்ளையாரின் கழலடிக்கு அர்ச்சனை மலராக ஏற்றப்பட்டார்.

அன்னாரின் பிரிவால் துடிதுடிக்கும் மனைவி, குடும்பத்தார் அவரது அருள்நிழல் ஆறுதலை இழந்த பொதுநலத் தொண்டர்களின் மனங்களும் அமரரின் ஆன்மாவும் சாந்திபெற அருளானந்த விநாயகனையும் கந்தரோடை வற்றாக்கை பதி விசாலாட்சி சமே விஸ்வநாதப் பெருமானையும், கந்தரோடை வீரகத்தி விநாயகனையும், திருக்கேதீஸ்வர நாதனையும் வேண்டுவோமாக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி....

ஓர் ஆசிரிய நண்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலாக அதிபராக் கடமையாற்றிய புலத்தொகுப்பிட்டிய கே/வெற்றிலையூர் அரசினர் தமிழ்வித்தியாலயத்தின் முதற்பரிசளிப்பு விழாவுக்கு மாண்புமிகு அமைச்சர் N.M பெரேரோ அவர்களை முதன்மை விருந்தினராக அழைத்துச் செல்கின்றார்.



திருமண வைபவத்தில் தாய் தந்தையுடன்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ மகன

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கு இணங்க பண்டைய இராசதானியாக விளங்கிய கந்தரோடைப் பதியில் பிறந்து புகழுடன் வாழ்ந்து ஊருக்கும் சமூகத்திற்கும் குறிப்பாக மாணவர்களுக்கும் தன்னலம் கருதாது சேவை புரிந்து எல்லோராலும் மிகவும் மதிக்கப்பட்ட தற்பரானந்தன் அவர்கள் திடிரென மறைந்து விட்ட செய்தி எமக்கெல்லாம் மிகவும் அதிர்ச்சியைத் தந்துவிட்டது.

எமது ஆலயத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்புடன் எல்லா உற்சவங்கள் மற்றும் திருப்பணி வேலைக்கு ஊர் மக்களோடு இணைந்து தானே முன்னின்று உட்சாகம் ஊட்டி செயற்படுத்துவார். அத்தோடு பாடாசலை மாணவர்களுக்குக் கல்விப்பணி புரிந்து அவர்களை உயர்த்தி விட்ட ஓர் பண்பாளர் ஆவார்.

சைவ பரிபாலன சபை, வட இலங்கை சங்கீத சபை போன்ற நிறுவனங்களைத் தன்னுடைய ஆளுமையால் பரிபாலித்து நிர்வகித்தவர்.

அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமியின் பாதார விந்தத்தை அடைந்து சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
கா.சதானந்தசர்மா
ஆதீனகர்த்தா
ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத
விஸ்வநாத சுவாமி கோவில்
கந்தரோடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல சிந்தனையாளர்

கல்வியிலே சிறந்து விளங்கி அவ் வண்ணமே வாழ்ந்து வந்த திரு.தற்பரானந்தன் அவர்களின் திடீர் மறைவு மிகவும் துயரைத் தருகிறது. தம்பதிகளாக இணைந்து கல்விக்கும் ஆத்மீகத்துக்கும் அவர்கள் செய்த சேவைகள் மறக்க முடியாது.

அவர் அதிபராக யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் இருந்த காலங்கள் மறக்க முடியாது. கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி ஓய்வு பெற்றாலும் கூட அவர் சமூக சேவைகளில் இருந்து ஓயவில்லை. ஆலயப் பணிகளில் மிகவும் அக்கறை கொண்ட அவர் அவ்வண்ணமே செய்வதில் சமர்த்தர்.

கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலய தேர்த் திருவிழாவை மிகவும் சிறப்பாகவும் சிரத்தையோடும் செய்து முடிப்பார். அது மட்டுமல்ல திருக்கேதீஸ்வர சிவராத்திரி காலத்தில் என்னையும் வரும்படி கேட்டு அங்கே நாம் தங்கி சிவாலய தரிசனம் செய்வதற்கு துணை செய்தார்.

எங்கு கண்டாலும் எந் நேரமும் எம்முடன் சிறிது நேரம் நின்று புதினங்கள் கதைத்து விட்டுத் தான் மறுவேலை பார்ப்பார். ஆன்மீகத்தோடு மட்டுமல்ல கந்தரோடையிலே நடை பெறுகின்ற அனைத்து சமய சமூக விழாக்களில் சமய ஆசார முறைப்படி முதல் வரிசையில் இருப்பதை அனேக மக்கள் மறந்திருக்க முடியாது. தனது இயலாமைத் தன்மையிலும் கூட கந்தரோடை மண்ணுக்கு சேவை செய்வதை மட்டும் பாக்கியமாகக் கொண்டவர்.

ஒரு காலத்தில் விழிப்புக்குழு இருந்த நேரம் அதன் தலைவராக இருந்து இரவு முழுவதும் சுற்றிப் பார்த்துத் தான் தன் வீடு செல்வார். இப்படியான காலங்களில் எங்களுடைய வீட்டில் வந்து ஆறுதலாக இருந்து எல்லாப் புதினங்களும் பேசி என்னுடைய பிள்ளைகளுக்கு ஒரு தந்தை போல் கதை சொல்லிப் பழமொழிகள் பல சொல்லி அவர் வீடு செல்ல பதினொரு மணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக நல்ல வழியிலே நாட்டம் கொண்டு அதையே கடமையாக கொண்டு அன்னையாய், தந்தையாய் நல்லாசிரியனாய் வாழந்து வந்த எமது அன்புக்குரிய அமரர்.அ.தற்பரானந்தன் அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கியது மறக்க முடியாத ஒன்றாகி விட்டது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதோடு அவரின் பிரிவால் துயரடையும் அன்பு மனைவி சகோதர சகோதரிகள் மற்றும் உறவினர்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து உங்கள் துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல மருதடியானைப் பிரார்த்தனை செய்கின்றேன்.

சிவஸ்ரீ.ப.ஜெயக்குமாரக் குருக்கள்
மருதடி விநாயர் ஆலயம்
மானிப்பாய்

**"கற்கக் கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பிகை துணை

**கீரிமலை ஸ்ரீநகுலாம்பிகா சமேத ஸ்ரீநகுலேஸ்வரசுவாமி கோவில்**

**KEERIMALAI SRI NAGULAMBIGA SAMETHA SRI NAGULESWARA SWAMY TEMPLE**

*Rajarajasri K. Naguleswara Kurukkal* J.P.
Governing Authority & Chief Priest,
Naguleswaram, Keerimalai.
Kankesanthurai.
Sri Lanka
Phone:- 0217900470
0213212440



இராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம்,
கீரிமலை,
காங்கேசன்துறை.
ஸ்ரீலங்கா

# சைவத்தின் காவலன்

கந்தரோடையை பிறப்பிடமாகவும் கீரிமலையை வதிவிடமாகவும் கொண்ட அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் அவர்கள் வேளாண்மரபில் ஒரு சைவப்பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் உதித்தார்.

மிகவும் நேர்மையாகவும், கண்ணியமாகவும் சேவை மனப்பாங்குடனும் கடமையாற்றியமையால் அதன் பயனாக பல பதவியுயர்வுகளையும் பட்டங்களையும் பெற்றவர்.

சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டாற்றக் கூடிய இத்தகைய ஓர் அன்பர் இவ்வாலயத்திற்கு அண்மையில் வசிப்பிடத்தைக் கொண்டிருந்தது கீரிமலையில் நடைபெறும் எல்லாச் சைவ விழாக்களுக்கும் பேருதவியாக இருந்தது.

கீரிமலைச் சிவநெறிக் கழகத்தின் ஓர் அங்கத்தவனாக இருந்து அக்கழகம் கோயிற் சூழலில் நடாத்திய தொண்டு படு செயல்முறைப் போட்டிகள், பண்ணிசைப்போட்டிகள் பேச்சுப் போட்டிகள் நடாத்துவதற்கு உறுதுணையாக நின்றதோடு கோவிலில் நடாத்தப்பட்ட சைவ சித்தாந்த வகுப்புக்கள் சைவ சமய வகுப்புகள் யாவற்றிலும் பங்கு கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலை நாடி வரும் அடியார்கள் பலருக்கும் உணவு உறைவிடம், தாக சாந்தி செய்வதில் மகிழ்ச்சியடைவார். நகுலேஸ்வரத்தில் அவரது மனைவி வழியினர் நடாத்தி வந்த கார்த்திகை விளக்கீட்டு உற்சவத்தினை அவரது மைத்துனர் தில்லை நடராசா நடாத்தி வந்தார். மைத்துனரால் நாட்டுச் சூழ்நிலை காரணமாக சமூகமளிக்க முடியாத சந்தர்ப்பங்களிலும் எல்லாத் தடைகளையும் தாண்டி சமூகமளிப்பார். இவரது திருமணத்தையும் மனைவியின் குடும்பத்தவர்களின் திருமணங்களையும் நானே நடாத்தி வைத்தேன்.

கீரிமலையிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து செல்லும் வரை அனேகமாக தினமும் எனது வீட்டில் இரண்டு மூன்று மணிநேரம் அளவளாவிச் செல்வார். நாம் உலக நடப்புகள் பலவற்றையும் அந்நேரம் அலசுவதுண்டு.

அன்னாரின் மறைவு, ஏனைய சைவ தமிழ் அன்பர்களுக்குப் போன்று எமது ஆலயச் சூழலில் உள்ளோர்க்கும் பேரிழப்பாகும்.

ஒருவரின் பிறப்பில் அன்றே இறப்பும் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. எல்லாம் சிவன் செயல். அவரது மனைவி, சகோதரர்கள், குடும்பத்தினர் அனைவர்க்கும் மனம் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மகாராஜஸ்ரீ.கு.நகுலேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தா
நகுலேஸ்வர தேவஸ்தானம்,
கீரிமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருள்மிகு அருளானந்தப் பிள்ளையார் ஆலயம்

இ. சோமேஸ்வரசர்மா
அருளானந்தப் பிள்ளையார் ஆலயம்
ஆதினகர்த்தா

கந்தரோடை,
சுன்னாகம்.
.................2000

# ஆழ்ந்த பக்தன்

கந்தரோடையின் முதுபெரும் புலவர் கல்விக்கோர் இலக்கணமாக வாழ்ந்து வந்தவர் அமரர்.அ.தற்பரானந்தன் அவர்கள். தமிழ்க்கந்தையா பாடசாலையின் புகழ் பூத்த அதிபராகவும் பின் கோட்டக்கல்விப் பணிப்பாளராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். எமது அருளானந்தப் பிள்ளயைாரின் மீது அளவு கடந்த பக்தி நிறைந்தவர். திருவிழாக்கள் நடைபெறுகின்ற சமயத்தில் ஒவ்வொரு நாளும் ஆலயம் வந்து தரிசனம் செய்வதை வழக்கமாகக் கொண்டவர். அண்மையில் நடைபெற்ற மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவிலும் தனது இயலாமைத் தன்மையோடுகூட தனது துணைவியாருடன் வந்து இறைவழிபாடு செய்ததை மறக்கமுடியாதது. கடந்த மாதம் நடைபெற்ற மஹோற்சவ காலத்திலும் கூட அமைதியாக வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தமை இப்பொழுதும் எம் மனதில் நிழலாடுகிறது. இவ் வண்ணமாக வாழ்ந்து இறைவன் திருவடியில் அமைதி கண்ட அமரர். அ. தற்பரானந்தன் அவர்களுடைய ஆத்மா சாந்தி பெறவும் அவரது பிரிவால் துயரடையும் மனைவி, சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இ.சோமேஸ்வரசர்மா
அருளானந்தப்பிள்ளையார் ஆலயம்
ஆதினகர்த்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

நல்லூர் யாழ்ப்பாணம் - இலங்கை

# Nallai Thirugnanasambantar Atheenam

NALLUR, JAFFNA - SRI LANKA.

PHONE ௨௧௧௧870

திகதி 09|00|2012.

---

திரு. தற்பரானந்தனுடைய மறைவை அறிந்து மன வேதனை அடைந்தோம. பண்பாளன், சிந்தனையாளன், தெளிந்த மனமுடையவர், சிந்தித்து செயற்படுபவர் எடுத்த விடயத்தில் செயலாற்றுபவர், நேரானபார்வை, சீரான நடை, எளிமையானவர், உயரிய கல்வி, சமய விழுமியம் அனைத்தையும் சீராக பேண நினைத்தவர். பலபணிகளை ஆற்றியவர். எங்களோடும் நிறைவான அன்பை உடையவர். எல்லோரும் மதிக்கத்தக்க தற்பரானந்தனுடைய மறைவு அதிசயிக்கத்தக்கது. இவருடைய வாழ்க்கை அனைவருக்கும் உதாரணமாக அமைந்தது. தற்பரானந்தனுடைய ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நல்லை ஆதினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MR.N.SATHASIVAIYER**
ADDITIONAL REGISTRAR GENERAL
Re.Address:
No.108,6/2A W.A.Silva Mawatha
Colombo 06.

REGISTRAR GENERAL'S DEPARTMEN
No.234, A3 Denzil Kopekaduwa
Mawatha
Battaramula
Sri Lanka

Tel : 0112 889494(O&Fax) , 0113 150623 (R), 0718293766 (M)
e mail : sathasivaiyer@yahoo.com

# திருமதி நகுலாம்பிகை தற்பரானந்தன் அவர்கட்கு

தங்கள் கணவர் அப்புத்துரை தற்பரானந்தன் அவர்கள் அமரரான செய்தி அறிந்தேன் எமது ஆழ்ந்த அனுதாபங்கள் அன்னாரை நான் நீண்டகாலமாக அறிவேன.

சமய சமூக தொண்டுகளில் முன் நிற்பவர். மக்களுக்கு உதவி செய்வதற்காக எம்மிடம் அடிக்கடி வருவார். நான் கொழும்பு வந்தபின்பும் கூட என்னுடன் தொடர்புகொணடு பலருக்கு உதவிகள் செய்தமை நினைவு கூரக்கூடிய விடயமாகும்.

அன்னாரின் வெள்ளை வேட்டியும் சட்டையும் சால்வையும் கம்பீரமான தோற்றமும் என்றும் எல்லோரையும் மதிப்புக் கொள்ளவைக்கும்.

சமய சமூக நிறுவனங்களில் அன்னாரின் பணி ஆலமரம் போல் விரிந்து பரந்ததாகும்.

அன்னாரின் மறைவு இந்து சமயத்திற்கு பேரிழப்பாகும்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

ந.சாதசிவ ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்க முடியுமா தங்கள் கல்விப் பணியை

கல்வித் தானம் வழங்கிய குடும்பத்தில் பிறந்து
கல்விக்காக ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக
அதிபராகக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக
வட இலங்கைச் சங்கீத சபையின் செயலாளராக
சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவராகக்
கடமையாற்றிய தாங்கள் இவையெல்லாவற்றையும்
மறந்து மீளாத் துயில் கொண்டதேனோ?

எந்த நோய் வந்தாலும் கடமை செய்வதைக்
கருத்தாகக் கொண்டு ஓடி ஓடிக்
கல்விக்காகத் தொண்டாற்றிய தற்பர் ஐயா
மீண்டும் கல்வித் தொண்டாற்றப்
பிறக்க வேண்டும்.

எங்களுடன் நல்ல கதைகள் பேசிச்
சிரிக்க வைத்து, சீரிய நோக்குடன்
செயற்பட்ட பெருந்தகையீர் மீண்டும்
எம்முடன் பேச வருவீர்களா?

போக்குவரத்து இல்லாத காலத்தில்
மண்ணெண்ணெயில் இயங்கிய தங்கள்
மோட்டார் சைக்கிளில் பின்னே இருந்து
பாடசாலைக்கு, அலுவலகத்திற்குச்
சென்ற காலத்தை மறக்க முடியுமா?

தங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**வே.தி.செல்வரத்தினம்**
**ஓய்வு நிலை பிரதிச் செயலாளர்**
**வடமாகாணக்கல்வியமைச்சு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் முழுவதும் ஓய்வடையாத தற்பர்

அ.தற்பரானந்தன் அவர்களை முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் சங்கர் அச்சகத்தில் சந்தித்தேன். சுதந்திரன் பத்திரிகையில் பிரத ஆசிரியராக இருந்து பல எழுத்தாளர்களை உருவாக்கிய நண்பன் ஐ.சங்கர் அவர்கள் தற்பரானந்தன் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். இந்த அறிமுகத்தில் ஆரம்பமாகிய எங்கள் உறவு வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் நான் கடமையாற்றிய காலத்தில் தரமாக வளர்ச்சியடைந்தது. நான் குறிப்பிடுகிற அக்காலம் ஒரு சாதாரண சூழல் நிறைந்த காலமாகும். மானிட வாழ்க்கைக்கும் சமூக வாழ்க்கைக்கும் அவசியமான பொறிமுறைகள் கிடைக்கப்பெறாத காலமாகும். அதனால் வடக்குக் கிழக்கு பிரதேசத்தில் கல்விப் புலம் சார்ந்த சிலரினை உள்வாங்கி அவர்கள் மூலமாக எனது கடமைகளை நிறைவேற்றினேன். அதில் குறிப்பிடத்தக்கவர் அமரர் தற்பரானந்தன். அவருடைய மானிட நேயமும் கடமையுணர்வும் தொடர்பாடல் முறையும் என்னை வலுவாகக் கவர்ந்தன. அதனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் எனது தொழில் சார் நடவடிக்கைகளில் ஒரு மையப்புள்ளியாக அமரர் அவர்களைப் பயன்படுத்தினேன்.

அமரரை நான் அறிந்த வகையில் அவரிடம் இருந்த சமூக உணர்வு பெரிதும் பாராட்டத்தகதாகவும் ஆசிரியராக, அதிபராக நாட்டின் பல பகுதிகளில் அவர் கடமையாற்றியது அவரது பரந்த நோக்கிற்கு வித்திட்டன எனக் கூறலாம். தெல்லிப்பளையிலும், சங்கானையிலும், உடுவிலிலும் கோட்டக்கல்வி அதிகாரியாக இருந்து அவர் செய்த சேவைகளை பலரும் மெச்சியுள்ளார்கள். தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தின் அதிபராக அவர் கடமையாற்றிய காலம் அக்கல்லூரியின் வளர்ச்சிக் காலமாகும். புகழ் பெற்ற பல பாடசாலைகளை முட்டி மோதி தமிழ்க்கந்தையா வித்தியாலயத்தை முன்னுக்குக் கொண்டுவந்த பெருமை அவரைச் சார்ந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக உணர்வும் சமூக சேவையும் நிறைந்திருந்த அமரர் பல்வேறு சமூக ஸ்தாபனங்களோடு கிராமமட்டத்திலிருந்து வடமாகாணம் வரை தொழிற்பட உதவினார். வட இலங்கை சங்கீத சபை, சைவ வித்தியாபிவிருத்திச் சங்கம், சுன்னாகம் நகர அபிவிருத்திச் சங்கம் என்பவை அவரினால் பெருமை கொண்டன.

அவருடைய சேவையின் மகுடம் தான் வட இலங்கை சங்கீத சபை அவரின் முயற்சியின் விளைவே மருதனார்மடத்தில் அமைக்கப்பட்டுள்ள வட இலங்கை சங்கீத சபையின் பணிமனையாகும். தற்பர் இருந்து விடாவிடில் இப்பணிமனை பலரது மனங்களில் ஆகாயக் கோட்டையாகவே அமைந்திருக்கும்.

தற்பரது ஆளுமைத்திறனைப் பார்த்துப் பல சமயங்களில் நான் வியந்துள்ளேன். பல்வேறு வகையில் எனது கல்வியில் கடமைகளுக்கு உதவிய நண்பன் தற்பரானந்தனின் இழப்பு தனிப்பட்ட முறையில் எனக்கு பெரும் இழப்பேயாகும்.

தற்பர் தனிமரமாக சாதனைகள் படைக்கவில்லை. இச்சாதனைகளுக்கு அவரது குடும்பப் பின்னணியும் பாரம்பரியப் பரிமாணமும் உதவின. அவரின் பாரியார் நகுலாம்பிகாதேவி ஒரு பலமான உதவும் கரமாக தற்பருக்கு கிடைத்திருந்தமை அவர் செய்த பாக்கியமே

பலர் வாழ்நாள் முழுவதும் ஓய்வு நிலையிலும் தூங்கு நிலையிலும் இருப்பர். ஒரு சிலர் மட்டும் இவ்வுலக வரவிலிருந்து முடிவு வரை ஓய்வுகொள்ளல் இவர்களுக்கு நண்பன் தற்பர் ஒரு குறிகாட்டியே அவரை இழந்து உதவுகரமின்றி தனிமரமாக நிற்கும் அவரின் பாரியார் நகுலாம்பிகாதேவி அவர்களுக்கு எனது மனப்பூர்வமான ஆறுதல் வார்த்தைகளை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர்
வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்லுவலர்,
விளையாட்டுத்துறை அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

மருதனார்மடம், சுன்னாகம்
මරුදනාර්මඩම චුන්නාකම්
Maruthanarmadam, Chunnakam
☎-021 3215545
✉: npdeplan@yahoo.com


எனது இலக்கம் / මගේ අංකය / My No

உமது இலக்கம் / ඔබේ අංකය / Your No

Date:-.21.06.2012

## இரங்கற் செய்தி

**நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்**
**பெருமை யுடைத்துஇவ் உலகு**

அமரர் திரு.அ.தற்பரானந்தன் அவர்கள் நல்லாசிரியனாய் அதிபராய் கோட்டக்கல்வி அதிகாரியாய் கல்விப் புலத்திற்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன. சேவை செய்வதற்கே தோன்றி மறைந்த பேராளன் இன்று எம்மத்தியில் இல்லாமை ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அவரது சங்கீதத் துறைக்கான சேவை என்றும் நிலைபெற்று இசை விற்பனர் மத்தியில் நீங்கா இடம் பெற்றமை அவரது பல்துறை பாண்டியத்தை பறை சான்றுகின்றது. அவரது நேர்மை கடமையுணர்வு கண்ணியம் கட்டுப்பாடு என்பன அவருக்கென்றே தனியுரிமை பெற்று “மக்கள் சேவை மகேசன் சேவை” பாடசாலை கிராமம் நகரம் நாடு என்ற அனைத்து இடங்களிலும் சமாதான நீதவானாக என்றும் அழியாப் புகழுடம்பை எமக்கு அளித்துச் சென்றமை எமது பெரும்பேறாகும். ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறும் இச் சந்தர்ப்பத்தில் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ப.விக்னேஸ்வரன்**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்,**
**வடமாகாணம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்த பணிகளால் நெஞ்சங்களில் நிறைந்துள்ளார்

ஆசிரியராய், அதிபராய் கோட்டக்கல்விப் பணிப்பாளராய் 30 வருடங்களுக்கு மேல் கல்விப் புலத்தில் கடமை புரிந்து தடம்பதித்துள்ள அமரர் அ.தற்பரானந்தன் அவர்கள் பலரது நெஞ்சங்களில் நிறைந்துள்ளார். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத தொன்றாகும்.

அமரர் அவர்கள் கல்விப்புலத்தில் வாழ்ந்து கொண்டு எண்ணற்ற பணிகளைச் சமுதாயத்திற்காக ஆற்றிச் சான்று பகரும் எச்சங்களை விட்டுச் சென்றிருக்கின்றார்.

எடுத்த காரியத்தை எண்ணியவாறு செய்து முடிப்பதோடு தனது சேவையால் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரது அன்பையும், மதிப்பையும், பெற்றுத் தன்னோடு வேலை செய்தவர்களிடையே கடமையுணர்வு, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய ஒழுக்கப்பண்புகளை வளர்த்து கல்வி நிர்வாகத்தில் அனுபவ ரீதியான ஆழ்ந்த புலமையைக் கொண்டு விளங்கியமையால் எல்லோரது கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

தனது சேவைக்களால் உயர் அதிகாரிகளின் உள்ளங்களில் இடம்பிடித்ததோடு பல்வேறு கூட்டங்களில் அவருடைய பேச்சிற்கு அங்கீகாரம் இருந்தது. அதனால் ஏராளமான நண்பர்களைத் தேடிக் கொண்டமையால் எந்தவொரு விடயத்தையும் விரைவாகச் செய்து முடித்து வருவார். யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தை நல்ல முறையில் வளர்த்த எடுக்கவேண்டும் என்ற அவாக் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணக் கல்வியியல் கல்லூரி அமைக்க நிலம் தேவைப்பட்டபோது அதனைப் பெற்றுக் கொடுக்கக் கடுமையாக உழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கைச் சங்கீத சபையில் நீண்ட காலம் கௌரவ செயலாளராகக் கடமை புரிந்து அரும் பெரும் பணியாற்றி அனைவரது அன்பையும், மதிப்பையும் அகில இலங்கை ரீதியில் பெற்றுள்ளார். அத்துடன் திருநெல்வேலியில் அமைந்துள்ள வித்தியா விருத்திச் சங்கத்தில் அங்கத்தவராக இருந்து அநாதைச் சிறார்களின் வாழ்வாதாரத்திற்கு உழைத்துள்ளார்.

வாழ்வின் இறுதிவரை சமுதாயத்திற்காக உழைத்த சமூக, ஆன்மீகவாதியான அமரத்துவம் அடைந்த அ.தற்பரானந்தன் அவர்கள் செய்த பணிகளால் வலிமை பெற்று பலரது உள்ளங்களிலும் நிறைந்து நிற்கின்றார்.

அமரர் தற்பரானந்தம் அவர்களை இழந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

***"துறந்தார் பெருமை துணைகூறின் வையத்து***
***இறந்தாரை எண்ணிக் கொண்டற்ற"***

வீ. இராசையா
ஓய்வு நிலை மாகாணக் கல்விப்பணிப்பாளர்.

**"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர்**
**பழுதுண்டு வேறோர் பணிக்கு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைக்கோர் தற்பரானந்தன்

சிறந்த கல்விப் பாரம்பரியமும் சமூக உணர்வும் கொண்ட பரம்பரையில் உதித்தவர் தான் காலஞ்சென்ற அ.தற்பரானந்தன் கந்தரோடை தமிழரின் ஆதிக் குடியிருப்புப் பிரதேசம். அங்கு வாழ் சிறார்க்கு சிறந்த கல்வியை தமிழும் சைவமும் சேர்ந்த பின்னணியில் வழங்கவென அமைக்கப்பட்ட கந்தரோடை தமிழக்கந்தையா வித்தியாசாலை இவரின் முன்னோரால் அமைக்கப்பட்டது. அப்பாடசாலை தனது பணியைச் சிறப்பாகச் செய்து உடுவில் கோட்டத்திலேயே முதன்மைப் பாடசாலையாக மிளிர்ந்தது என்றால் மிகையாகாது. அதன் வளர்ச்சிக்கு உழைத்தவரக்ளில் அமரர் தற்பரானந்தன் அவர்களும், அவரது மைத்துனர் திரு.க. செல்வக்குமரன் அவர்களும் என்பதை நானறிவேன்

அமரர் தற்பரானந்தன் ஆசிரியராக, ஸ்கந்தாவின் பிரதி அதிபராகவும் பின்னர் கோட்டக்கல்விப்பணிப்பாளராக தெல்லிப்பளை, சங்கானை, உடுவில் ஆகிய கோட்டங்களில் கடமையாற்றி ஓய்வு பெற்ற பெருமகன்.

கடைசிக்காலத்தில் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவராகவும் விளங்கிக் கல்விப்பணிபுரிந்தார். அவரின் காலத்தில் திருநெல்வேலி முத்துத்தம்பிப் பாடசாலையோடு இணைந்த விடுதிகள் பல கட்டடங்களையும் ஏனைய பௌதிக வள விருத்தியும் கண்டதோடு, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும் பெரும் விருத்தி கண்டது. அத்தோடு இணுவில் பிரதேசத்தின் காணியைப் பெற்று கட்டடங்களையும் அமைத்து வர ஏற்பாடு செய்தவர். அவரது சமூகப்பணி தமிழ்ச்சமூகம் என்றென்றும் மறவாது.

சிரித்த முகமும் தேசிய உடையும் கடின உழைப்பும் சிறந்த பேச்சாற்றலும் கொண்ட அவரின் மறைவானது தமிழ் கல்விச் சமூகத்திற்கு பெரிய இழப்பு என்றே கூறவேண்டும். இலங்கை அதிபர் சேவை தரம் I ஐ அலங்கரித்த தற்பரானந்தன் மறைந்த செய்தி எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்ச்சிக்குள்ளாகியது. அவரது பணிகள் அத்தகையது. கடைசிக் காலத்தில் புற்றுநோய் சிகிச்சை பெற்றுக்கொண்டே சைவவித்தியா விருத்திச் சங்கப் பணிகள் முன்னெடுத்ததை நானறிவேன். கடின உழைப்புக் கொண்ட தனக்காக மட்டுமல்ல ஏனைய கல்விச் சமூகத்திற்குமாக விருந்ததை நான் பணிப்பாளராக விருந்த காலத்தில் கண்டு அவதானித்துள்ளேன்.

அன்னாராது இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல முழுச் சமூகத்திற்குமே துக்கமானது. அவரது ஆத்மா சாந்தி பெற கடவுளை வேண்டுகிறேன்.

சாந்தி சாந்தி சாந்தி

ச.சுப்பிரமணியம்
இளைப்பாறிய மேலதிக மாகாணக்கல்விப்
பணிப்பாளர்
வடக்கு, கிழக்கு மாகாணம்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தணியாது சேவையீந்த தற்பரானந்தன்

ஈழத்தமிழன்னை ஈன்ற புறந்தந்த இன் கலைக்கோயில் அமரர் தற்பரானந்தன் அவர்கள் புகழோடு தோன்றிய அதியற்றபுத ஆத்ம சிருஷ்டி மனித உருவிலே இம் மண்ணிலே மலர்ந்து சேவையையே தன் இலட்சியமாக வரித்த செழுந்தமிழச் செம்மல்

அபூர்வமான நாமத்தைக் கொண்டவர் அமரர் தற்பரானந்தன் தன் நாமத்தின் முதலெழுத்தை அகரமாக்கி, வல்லினத்தில் தொடங்கி மெல்லினத்தில் முடிவுறும் நாமத்தை அவர் பூண்டவர். அவர் இறுதியாக சங்கமித்த அமரரின் முதலெழுத்தும் அகரமாகவே இருப்பதைக் காணலாம். இத்தகு அபூர்வமான பிறவியாக அமரர் மிளிர்வதை காணலாம்.

அமரர் தற்பரானந்தன் அவர்களின் பரிமாணங்கள் பல்துறைசார்ந்தவை. கல்விப் புலத்திலே மாணவர் மனங்கவர் ஆசானாக, நல்லதிபராக நற்பணி செய்தவர் அமரர் தற்பரானந்தன். தமிழ்க் கந்தையாவின் தளர்விலா வளர்ச்சிக்குத் தளராது உழைத்த முதல்வர்களில் முதன்மையானவர் அமரர் தற்பரானந்தன். ஆசானாய், அதிபராய் அமரர் ஆற்றிய அளவிடற்கரிய பணியே அவரை உடுவில் கோட்டத்தின் காவலனாக உயரவைத்தது. கோட்டத்திலடங்கிய பாடசாலைகளின் கல்வியை மேம்படுத்த அமரர் தற்பரானந்தன் அயராது உழைத்தவர். அமரரின் சேவை கல்விப் புலத்திற்கு வெளியேயும் விசாலித்தது. அமரர் தற்பரானந்தனின் தரிசனத்தால் கூர்படையாத புலங்களே இல்லை.

வடஇலங்கை சங்கீத சபை கலைகளை அகிலமெங்கும் வளமாக்கி வளர்க்கும் ஓர் கலாலயம். இவ்வாலயத்தின் வலுவான வளர்ச்சிக்கும் வழிகாட்டியவர். அமரர் தற்பரானந்தன். சபையின் செயலாளராகப் பதவியேற்று அமரர் சபையினூடாகக் கலைகளை வளர்க்கப் பாடுபட்டார். தனக்கென இல்லிடமின்றித் தத்துப் பிள்ளையாக வாழ்ந்த சபைக்கெனத் தனியான இவ்விடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்க அமரர் அயராது உழைத்தார். சபைக்கென அமைக்கப்பட்ட கட்டிடத்தையும் அமுதவிழாவையும் காணும் அவாவுடன் பணிகளை முன்னெடுத்தார்.

முதுமையும் கொடுநோயும் அவரது சேவைக்குத் தடைக்கல்லாக விளங்கியபோதும், அதனை அவர் புறந்தள்ளினார். சங்கீத சபையின் புதுமனைப்புகுவிழா, அமுதவிழா ஆகிய இரண்டையும் அவருடன் இணைந்து காணும் ஆவலோடு இருந்த நாம் அவரது இறுதி நாள் விழாவையே காணவேண்டியதாயிற்று அமரர் தற்பரானந்தன் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் அவரது எண்ணங்களை முன் கொண்டு செல்வோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைக.

வ.செல்வராசா
தலைவர்
வடஇலங்கை சங்கீத சபை
வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

**“முயற்சி திருவினையாக்கும் முயன்றின்மை இன்மையுள் புகுத்தி விடும்”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லதோர் கலைக்களஞ்சியம் தற்பர் அண்ணர்

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவம் இயம்பிதற்கிணங்க வாழ்ந்து காட்டியவர் அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் அவர்கள். அவரின் மறைவு எமக்கு மட்டுமல்ல அவர் சார்ந்த சமூகத்திற்கு பேரிழப்பாகும். ஆளுமையின் அகராதியாகத் திகழ்ந்து அறிவிற்கே அர்த்தம் சொன்ன ஆசான். சிறந்த நிர்வாகி, தன்னலம் கருதாத் தலைவன், இடர்படும் போது ஆலோசகர், இன்னல்களைகையில் சமூகத் தொண்டன். என இன்னும் நீள்கின்றது. அவரின் பல்பரிமாண வகிபாகங்கள் தகவல் வங்கியாகத் திகழ்ந்த இவரிடம் இருந்து முகிழ்த்த கல்விமான்கள் இதற்கு நல்லதோர் சான்றாக திகழ்கின்றனர்.

சமூகத்தினை சிறப்பானதொரு சீரிய வழியிற் கொண்டு செல்ல அரசியலும் அவசியம் என அறிந்திருந்த அவர் அரசியலிலும் அதக ஆர்வம் கொண்டு செயற்பட்டார். எனது தந்தையார் 1960 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட போது அவரின் வெற்றிக்காக தீவிரமாக செயற்பட்ட செயல்வீரன். எமது வீட்டில் மாலைநேரங்களில் கூடி அரசியல் சார் விடயங்களை பரிமாறிக் கொள்வது மிகச் சுவாரசியமானது. இப்பண்புகள் யாவும் என்னையும் அவரின் பால் கவர்ந்திழுத்ததில் வியப்பேதும் இல்லை. அமரர் தற்பரானந்தனிடம் பொதிந்திருந்த அரசியல் அறிவு எனக்கு பல சந்தர்ப்பங்களில் பேருதவியாக இருந்தது. அரசியற் பின்னணிகள் தொடர்பான பல தகவல்களைக் கேட்டவுடன் வழங்கும் அவரின் திறன் என்னை வியப்பில் ஆழ்த்தியது. அவரிடம் எதையும் எந்நேரமும் கேட்டு அறியக் கூடிய கலைக்களஞ்சியமாகவே திகழ்ந்தார்.

எம் தாய் மொழியாம் தமிழ் மொழி மீது அதிக பற்றும் ஈடுபாடும் கொண்டிருந்த இவர் அம்மொழி சிதைவுபடாமல் இருப்பதில் அதிக கவனம் கொண்டு செயற்பட்டதனை நானறிவேன். எந்தவொரு இடத்திலும் எழுத்து, சொல், மொழி நடை எல்லாம் திருத்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டும் இல்லையேல் அந்த இடத்திலேயே அதனைச் செம்மைப் படுத்தி மொழிச் சிதைவைத் தடுத்து தலை நிமிர்ந்த தமிழுணர்வாளன் இயல் இசை நாடகம் என்றும் இயம்பிடும் முத்தமிழிலும் அறிவுச் செறிவு கொண்டிருந்தனை நாம் அறிவோம். பல பேச்சாளர்களை உருவாக்கிய தலைமைப் பேச்சாளன் பல கல்வி மான்களை உருவாக்கிய கல்வியாளன் எமை விட்டுப் பிரிந்தார். என்பதனை ஏற்க முடியவில்லை. என்றும்

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**வெருமை உடைத்தில் வுலகு"**

எனும் பொய்யா மொழியை உயர்ந்து தேறுவோம். அன்னாரின் ஆன்மா சாந்தி பெறுவதாக.

**தர்மலிங்கம் சித்தார்ந்தன்**
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்**
**வன்னி மாவட்டம்**

**"என்பிலார் எல்லாம் தமக்குரியர்**
**அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J.P பட்டம் கிடைத்தபோது மக்களின் வரவேற்பு



உடுவில்கோட்டப் பாடசாலைகளின் சைவத்திருமுறை விழா ஒன்றின்போது......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு.அப்புத்துரை தற்பரானந்தன்

வலி தெற்குப் பிரதேச செயலகத்தில் நான் கடமையாற்றிய காலப்பகுதியி நல்ல பல சமூக சேவையாளர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தது.

சமூகத்தின் தலைமை என்பது தலைவலியானது எனக்கருத வேண்டிய சூழ்நிலை நிலவிய போதிலும் சமூகப்பொறுப்புக்களில் இருந்து நாம் விலகி நிற்க முடியாது என்ற உறுதிப்பாட்டுடன் திகழ்ந்தவர் திரு.அப்புத்துரை தற்பரானந்தன் அவர்கள்.

விபூதியும் சந்தனமும் புன்னகையும் தரித்து பொலிவுடன் திகழும் அந்தப் பெருமகன் பேசும் போது கனிந்து வரும் கண்ணியம் நான் குறித்துக் கொண்ட மிக முக்கிய விடயமாகும்.

சமயாசாரங்களில் கொண்ட விடாப்பிடியான நம்பிக்கை, தமிழின் மீதும் கலை கலாசார விழுமியங்கள் மீதும் கொண்டிருந்த அதீத அக்கறை அவரை எம் மனதில் நிரந்தரமாக் குடிகொள்ள வைத்த சிறப்பான விடயமாகும்.

அவரது ஆரோக்கியம் எமது சமயத்திற்கும், மொழி, கலை கலாசாரம் ஆகியவற்றுக்கும் கிடைத்த ஊக்கமருந்தாக நாம் எண்ணியிருந்த வேளையில் அவரது இழப்பு ஈடு கொடுக்க முடியாத இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது என்பது நிதர்சனமாகும்.

அவருடன் பழகிய நாட்களையும் அவரது மதிப்பிட முடியாத சமூகப்பணிகளையும் மனிதில் நிறுத்தி வாழ்வாங்கு வாழ்ந்த அந்த மானுடம் என்றும் சிறந்திருக்க எல்லாம் வல்லோனை பிரார்த்திப்போம்.

**சிவகுருநாதன் திருவாகரன் (இ.நி.சே)**
**பிராந்திய திட்ட முகாமையாளர்**
**வறுமை ஒழிப்பு நுண்கடன் திட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறந்தும் இறவாதவராய் உள்ளத்துள் நிற்பவர்

எமது கந்தரோடைக் கிரமாமம் ஒரு தலைசிறந்த பெரியாரை இழந்துள்ளது. அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் அவர்கள் இன்று எம்மத்தியில் இல்லை

"குடம்பை தனித்து ஒளியப் புள் பந்தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு"

என்பதற்கொப்ப அவரது உடலில் இருந்து உயிர் பிரிந்துவிட்டது. பிறப்புண்டேல் இறப்புண்டு என்பது இயற்கையின் விதி சிலர் வாழும் போது காட்டிய பரிவு, வாழ்ந்த முறை கடைப்பிடித்த ஒழுக்கநெறி, ஆற்றிய பணிகள், ஆன்மீகப் பண்புகள் என்பன அவர்களை இழக்கும் போது ஈடு செய்ய முடியததாகவும் மனதுக்குத் துயரத்தை ஊட்டுவதாகவும் ஏற்பட்டுவிடுகிறது. அந்த வகையில் அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் அவர்களின் இழப்பு அவர்களது குடும்பத்தைப் பொறுத்த வரையில் மட்டுமல்லாது எமது வித்தியாசாலை மற்றும் எமது கிராமம் அனைத்துக்கும் ஈடுசெய்ய முடியாததொன்றாக அமைந்துவிட்டது. எமது வித்தியாசாலையின் நிறுவுநர் அம்பலவாணர் கந்தையா அவர்களின் பேரன் அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் அவர்கள் இவ் வித்தியாசாலையில் மாணவனாக, ஆசிரியராக, அதிபராக இருந்துள்ளார். அவர் அதிபராக சேவையாற்றிய 15.09.1978 முதல் 20.10.1991 வரையான 13வருட காலப்பகுதி இவ்வித்தியாலயத்தைப் பொறுத்த வரை ஒரு பொற்காலம் எனலாம். அவர் அதிபராகச் சேவையாற்றிய காலத்திலேயே வகுப்பறைக் கட்டடங்கள் மாடிக்கட்டடங்கள் அதிபர் அலுவலகம் திறந்த வெளி அரங்கு எனப் பல வழிகளில் பௌதிக வள ரீதியாக இவ்வித்தியாசாலை விருத்தியுறத் தொடங்கியது மட்டுமல்லாமல் முன்பு இவ் வித்தியாசாலையில் செயற்பட்டு வந்த இடைநிலைப்பிரிவு தரம் 6 முதல் தரம் 11 வரை இடைப்பட்ட காலத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் அமரர் அப்புத்துரை தற்பரானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பெருமுயற்சி செய்து 1980ஆம் ஆண்டில் இருந்து மீளவும் செயற்படவைத்தது. மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ததுடன் கல்விப் பெறுபேறுகளிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் பல்சாதனைகளை நிகழ்த்த வழிவகுத்தார். அவர் அதிபராக இருந்த காலப் பகுதியில் தரம் I முதல் தரம் 11 வரை தொடர்ந்து இவ்வித்தியாசாலையில் கல்வி கற்ற பலர் இன்று மிக உயர்ந்த பதவிகளில் பணிபுரிந்து வருகின்றமை அவர் ஆற்றிய பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

> ***"யாக்கை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற யாக்கையால் ஆய பயன்கொள்க - யாக்கை மலையாடும் மஞ்சுபோல் தோன்றி மற்றங்கே நிலையாது நீத்துவிடும"***

என்பதற்கேற்ப அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் அவர்கள் இவ்வுலகில் பிறநது ஆசிரியர் பிரதிஅதிபர், அதிபர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எனக் கல்விப் புலத்தில் ஓய்வின்றிப் பணியாற்றியதுடன் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர், வடஇலங்கைச் சங்கீத சபையின் செயலாளர், சமாதான நீதிவான் என்று இன்னோரன்ன பல பதவிகளையும் வகித்து இறக்கும் வரை பலசமூகப் பணிகளையும் ஆற்றி இவ்வுலகில் பிறந்ததற்கான தனது பங்களிப்பை நல்கியுள்ளார்.

உலகம் நிலையில்லாதது வாழ்வு நிலையற்றது பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு இன்றிருந்தார் நாளை இருப்பார் என்று எண்ண முடியாது ஒரு மனிதன் சமூகத்தோடு எவ்வாறு வாழுகின்றான் என்பதை பொறுத்தே அவனது சமூக மதிப்பும் எடைபோடப்படுகிறது "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்ற கொள்கையிற் பணி புரிவோரும் உளர். இந்த வகையில் பணிபுரிந்தவர் அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் அவரது பிரிவுத்துயரில் தமிழ்க்கந்தையா வித்தியாசாலைச் சமூகத்தரவாகிய நாமும் பங்கு கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திக்காக இறைவனை பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கேளாதே வந்து கிளைஞராகி பிற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள் - வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து"

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

கா.சசிதரன்
அதிபர்
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை
கந்தரோடை, சுன்னாகம்.

"கண்ணுடையா என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றிருந்தார் இன்றில்லை

தனது ஆளுமைப் பண்பாலும் செயற்றிறனாலும் நேற்று வரை மனிதப் பண்புடையவர்களைக் கவர்ந்த தற்பரானந்தன் சேர் இன்று எங்களுடன் இல்லை. வட இலங்கைச் சங்கீத சபைச் செயற்பாடுகளினால் என்னுடன் நெருங்கிப் பழகிய அமரர் தற்பரானந்தன் அவர்களிடம் பெறுமதியான பல பண்புகளைக் கண்டேன். அதனால் அவர் மீது தனியான அன்பும் மதிப்பும் ஏற்பட்டது.

சிந்தனை, சொல், செயல் மூன்றும் இணைந்து செயற்படுவதைக் கண்டேன். வட இலங்கைச் சங்கீத சபையின் ஒரு சதம் கூட வீண் விரயமாகக் கூடாது. என்ற எண்ணத்தோடு செயற்பட்ட உயர் நிலையைக் கண்டேன். காத்திரமான செயற்பாடுகளைச் செய்வதற்கு ஆதரவு தேடி ஏங்கி நின்ற நிலையைக் கண்டேன். தட்டிக் கொடுத்தேன் பிரகாசித்தது சங்கீத சபை. இறையருளால் அமரர் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் சங்கீத சபைக்கென கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டிடம் எழுந்தது. அமுத விழாவிற்கான மலர் உருப் பெற்றது. அதற்கு அன்பர்களின் ஆதரவும் கிடைத்தது. தியாகராஜர் உற்சவங்கள் பல்வேறு மண்டபங்களில் செழிப்புற நடைபெற்றது. பட்டமளிப்பு விழாவும் பல்வேறு பரிணாமங்களைக் கண்டது. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சாத்திகள் தொகையும் பல்வேறு திசையிலும் அதிகரித்தது. மெய் வருத்தம் பாராது இறுதி நேரம் வரை தனது இயலாமையையும் வெளிப்படுத்தாது அரிய சேவையாற்றி உறங்கிய அமரர் தற்பரானந்தனுக்கு நிகர்யாருண்டு.

அமரர் உறங்கினாலும் அவர் விட்டுச் சென்ற உயரிய பண்புகளை அவருடன் கூடப்பணி செய்தோர் பின்பற்றி அரும் பணியாற்றுபவர், என்பதில் ஐயமில்லை.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி

திருமதி.அ. வேதநாயகம்
ஓய்வு பெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தையா உபாத்தியாயரின் பேரன்

தன் வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் ஆசிரியர் பாடசாலை அதிபர், கல்லூரிப் பிரதி அதிபர், உதவிக் கல்விப்பணிப்பாளர் போன்ற தொழில் சார் பதவிகளை வகித்தும், கொழும்பு விவேகானந்த சபைச் செயற்குழு உறுப்பினர், திருக்கேதீஸ்வர ஆலயம் பரிபாலன சபை உறுப்பினர் வட இலங்கைச் சங்கீத சபைச் செயலாளர் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர், வலிகாமம் தெற்கு மத்தியட்ச சபை உறுப்பினர், கந்தரோடை சனசமூக நிலையம் - ஸ்ரீசுப்பிரமணிய வாசிகசாலை ஆகியவற்றின் தலைவர் கந்தரோடை வற்றாக்கை அம்பாள் ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவர் போன்ற தொண்டு சார் பதவிகளை வகித்தும் கல்விப் பணியும் செய்து பல தரப்பட்ட மக்களின் பாராட்டையும் நன்றியையும் பெற்று, தான் பிறந்த ஊரான கந்தரோடைக்குப் பெருமையும் சேர்த்தவர். அமரர்.திரு.அப்புத்துரை தற்பரானந்தன் அதே வேளை தான் கந்தரோடை தமிழ்க்கந்தையா அவர்களின் பேரன் என்பதை எந்த நாளும் நெஞ்சில் நிறுத்தி அப் பெருமகனார் தொட்ட பணிகளை முன்னெடுத்து அவரின் புகழையும் பெருமையும் நீடிக்கச் செய்வதில் நிறைவும் அடைந்தவர்.

சிரேஷ்ட பாடசாலையாக இயங்கி வந்த கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை இவர் அதிபராகப் பதவியேற்ற போது ஆரம்பப் பாடசாலையாக இருந்தது. சில ஆண்டுகளின் பின்னர் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் இடை நிலைப் பாடசாலையாக மீண்டும் உயர்த்தி க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுட் பலரைப் பெரும்பாலான பாடங்களில் அதிதிறமைச் சித்தி பெற வைத்தமை, எடுத்தகாரியத்தை சிறப்பாக செய்து முடிக்கும் இவருடைய ஆற்றலுக்கு எடுத்துக் காட்டு, வைத்திய கலாநிதி பொறியியலாளர், அரச தனியார் துறை அதிகாரி போன்ற நிலைகளில் உயர்ந்து நிற்கும் அந்த மாணவர்கள் "எங்கள் அதிபர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உரிமையுடன் இவரைக் கண்ணியப்படுத்துவதில் என்றுமே பெருமை கொள்கின்றனர்.

கல்வித் திணைக்கள விதிகள் நடைமுறைகள் சுற்று நிருபங்கள் சம்பந்தமான பூரண அறிவும் ஞாபக சக்தியும் கடமையுணர்ச்சியும் ஒரு சிறந்த கல்வி அதிகாரியாக அடையாளங் காட்டின.

பலவிதமான கடமைகள் பொறுப்புகளுக்கு மத்தியிலும் கந்தரோடையில் நடைபெற்ற எல்லாப் பொது நிகழ்ச்சிகளிலும் குடும்ப வைபவங்களிலும் தவறாமற் கலந்து கொண்டு ஊர் மக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்றார்.

இத்தகைய பெருமகனாரின் மறைவு ஏற்படுத்திய வெற்றிடத்தை நிரப்புவது கடினம் இம் மண்ணின் மைந்தனாகத் தன்னை என்றும் அடையாளப்படுத்திய இவருடைய ஆன்மா சாந்தியடைய வற்றாக்கை விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

கந்தரோடை
சுன்னாகம்

சி.சிவசரவணபவன் (சிற்பி)
ஓய்வு பெற்ற அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த கல்வியியலாளரும் சமூகசேவையாளருமாகிய அமரர் தற்பரானந்தன் அவர்கள்

சிறந்த சமூகசேவையாளரும் உன்னதமான கல்வி யியலாளருமான அமரர் தற்பரானந்தன் அவர்களது மறைவுச்செய்தி அறிந்து துயரமும் அதிர்ச்சியுமுற்றேன். அன்னாரது மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது எமது ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அமரர் தற்பரானந்தன் அவர்கள் நீண்டதோர் கல்விப் பாரம்பரியத்துக்குட்பட்டவராக கல்விப்புலத்தில் ஆற்றிய பணிகள் போற்றத்தக்கவையாகும். கந்தரோடைப் பிரதேசத்தில் இவரது பேரனார் அமரர் கந்தையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் நிலைபெற்று விளங்கும் கந்தரோடை தமிழகக்கந்தையா வித்தியாலயம். இவரது பரம்பரை வழிவந்த கல்விச்சேவைக்குச் சான்று பகர்வதாகும். அமரர் தற்பரானந்தன் அவர்கள் தமது வாழ்வியலின் பெரும் பகுதியினை எமது சமுதாயத்தின் கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணித்து சிறந்ததோர் ஆசியராக, அதிபராக, உதவிக்கல்விப்பணிப்பாளராக அளப்பரிய பணிகளை ஆற்றியதோடல்லாமல் தனது ஓய்வுக்குப் பின்னரான காலங்களில் கூட தனது சேவைகளைத் தொடர்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தவகையில் யாழ்மாவட்ட இந்துசமயப்பேரவை, வடஇலங்கைச் சங்கீதசபை மற்றும் ஏனைய சமூகநிறுவனங்களில் தனது காத்திரமான பங்களிப்பினை வழங்கியதனூடாக சமய, கலாசாரம், கலை, இலக்கிய மேம்பாடுகளுக்கான இவரது ஆர்வத்தையும் சேவையினையும் காணமுடியும்.

சிறந்த சேவைமனப்பாங்குடைய அமரர் தற்பரானந்தன் அவர்கள் எப்பொழுதும் வெள்ளைவேட்டி சட்டையுடன் கூடிய பண்பாட்டுக் கோலத்தினராய் சிறந்த ஆளுமையும் நாவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையுமுடைய பேச்சாளராக திகழ்ந்தார். இன்முகத்துடன் அனைவரையும் வசீகரிக்கும் பாங்கும் சிறந்த நற்குணமும், மாறாத பண்பாட்டு விழுமியங்களையும் கொண்டு விளங்கிய அமரர் தற்பரானந்தனது இழப்பு அனைத்து.உள்ளங்களுக்கும் வேதனையை தருவதாக அமைந்துவிட்டது.

எமது பிரதேசத்தில் நிலவிய போர்ச்சூழல்களின் போதும் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்த காலங்களில் கூட இவரது சமூகப்பணிகள் குறைவிலாது தொடர்ந்தமையை அறியலாம்..

மக்கள் வங்கியுடன் நெருங்கிய உறவினை பேணிய அமரர் தற்பரானந்தன் அவர்கள் உடுவில் கல்விக்கோட்டத்தை உள்ளடக்கிய சிசுஉதான சேமிப்பு மேம்படுத்தல்கள், மற்றும் கடன் வழங்கல், அறவீடுகள் போன்ற நிதிசார் செயற்பாடுகளுக்கும் மிகுந்த ஒத்தாசையினை வழங்கி வந்தமையினை இவ்வேளையில் நினைவு கூர்கின்றேன்.

இங்ஙனம் எமது சமுதாயத்துடன் பின்னிப்பிணைந்து தனது சேவை நிறைந்த வாழ்வியலை எமக்காக அர்ப்பணித்து இறைவனடி சேர்ந்த அன்னாரது ஆன்மா சாந்தி பெற பிரார்த்திப்பதுடன் அவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து எனது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகின்றேன்.

த.க. ஆனந்தராசா
ஓய்வுநிலை உதவி பொதுமுகாமையாளர்
மக்கள் வங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர்.அப்புத்துரை தற்பரானந்தன் - கல்வியின் பண்பாளர்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கைத் தனது வாழ்வியல் நோக்காகக் கொண்டவர். 1987களில் அமைதி காக்க வந்தவர்களின் அட்டூழியங்களின் அனர்த்தங்களினால் தற்பரானந்தனும் நானும் நண்பர்களானோம். அந்த அரிய நட்பு தற்பரானந்தனின் நடத்தியல் உலகை விட்டு நீங்கும் வரையில் நீடித்திருந்தது.

எழுபதுகளில் ஆசிரியத்துறை மகத்துவத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். தனது ஆற்றல் காரணமாகவும் அறிகை ஆற்றல் காரணமாகவும் 28 ஆண்டுகள் பள்ளி முதல்வராக ஒரு பள்ளி சிறந்த ஆளுமை மிக்க மனித வளத்தைத் தாய் நிலத்திற்கு வழங்கியது.

கந்தரோடையில் பிறந்து வாழ்ந்து, முதல்வர் தரம் I ஐப் பெற்று அதன் அடுத்த நிலையான கல்வி நிர்வாக சேவையிலும் தேறி வடக்கு மாகாணத்தில் சேவையாற்றினார்.

எப்போதும் சமூக சேவையும் பயன்கருதாப் பங்கேற்பு முகாமையும் கொண்டிருந்த தற்பரானந்தன் சிறந்த சமயோசித புத்திக்கூர்மை கொண்டிருந்தவர். இதனை எனது வாழ்க்கையில் அவர் பழகிய காலத்தில் நான் கண்டு ஆச்சரியப்பட்டதுண்டு.

ஒரு சமூகம் மேம்பாடடைய வேண்டுமாயின் கல்வி மேம்பாடு ஒன்று தான் ஆரோக்கியமான நீடித்த அபிவிருத்தி என்பதைக் கருத்திற் கொண்டிருந்தவர் அதனை வாழ்நாள் சாதனையாக நிகழ்த்தியும் காட்டியவர். தற்பரானந்தனின் இழப்பு தேடிச் செல்கின்ற கல்வித் திட்டமிடலின் பேரிழப்பாகும். குறுகிய வட்டச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகளுக்கு அப்பால் விரி சிந்தனை கொண்டு சகலவற்றினையும் பார்க்கும் "பெருநோக்கு" கொண்டவர்.

கல்வி எதனைக் கொண்டிருக்க வேண்டுமென்று அனுப ஆய்வுகள் கூறுகின்றனவோ, இவற்றையெல்லாம் தன்னகத்தே இவரின் இறப்பு நியதியெனினும் நிதர்சனத்தில் ஜீரணிக்க முடியாது. கல்வியில் பண்பாளர் தற்பரானந்தன் தரணிப் புகழுக்குரியவர்.

அன்னாரின் ஆத்மா ஆறுதலடைவதாக.

பேராசிரியர்
க.சின்னத்தம்பி

## நம் வாழ்வில் தெரிந்திருக்க வேண்டியவை

தாயும் தந்தையும் - கண்கண்ட தெய்வம்
அன்னையின் ஆசியில் ஆண்டவனை காணலாம்
நல்லகுரு வாய்த்தல் ஆண்டவன் கொடை
நல்ல மனைவி அமைதல் - ஆண்டவன் கருணை
நல்ல நட்புக் கிடைத்தல் - பிறவியின் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது நினைவில் என்றும் நிலைத்திருக்கும் அமரர் தற்பரானந்தன் அவர்கள்

அமரர் தற்பரானந்தன் அவர்களுக்கு அரச சேவையில் எழுது வினைஞராக இணைந்து பணியாற்றுவதற்கும் ஆசிரியராக இணைந்து பணியாற்றுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்த போது அவர் தேர்ந்தெடுத்த வழி ஆசிரியத் தொழிலாகும். கல்விச் செல்வத்தை சமுதாயத்திற்கு வழங்கும் இத் தொழில் ஒரு தன்னலமற்ற தொழிலாகும். என்பதை தமது வாழ்க்கை மூலம் எடுத்துக்காட்டியவர் தான் அமரர் அவர்கள். முழு நேர ஊழியனாக தமது சேவை மூலம் ஒழுக்கமுள்ள ஒரு இளைஞ் சமுதாயத்துக்கு வழி காட்டுவதில் இவர் சாதனை படைத்தவர். சேர்.பொன், இராமநாதன் அவர்களின் பரோப காரத்தில் உருவாகிய இராமநாதன் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய அமரர் அவர்கள் ஆசிரியனாக யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றித் தென்னிலங்கையில் பண்டாரவளை, பம்பலப்பிட்டி போன்ற இடங்களிலும் சேவை செய்து தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிலைகளிலும் பணிபுரிந்து ஈற்றில் கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்ந்து ஓய்வு பெற்றவர் ஆவர்.

சங்கானை, உடுவில் ஆகிய கல்விக் கோட்டங்களில் பணிபுரிந்த காலத்தில் தமிழ், சைவம் ஆகியனவற்றைப் பேணிப் பாதுகாத்து இவற்றின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். இவரது அயராத உழைப்பினால் தமிழ் மொழித்தினம், திருமுறை விழாக்கள் ஆகியன பாடசாலைகளில் முன்னிலை பெற்றன. இருந்தும் அவரது பணிகளுக்கு மகுடம் வைத்தாற் போல வட இலங்கைச் சங்கீத சபைக்கு இவர் ஆற்றிய சேவை அமைந்திருந்தது. நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்காகக் காணி கொள்வனவு செய்யப்பட்டு கட்டிடப்பணிகள் ஒப்பேறிக் கொண்டிருக்கும் நிலையில் இவர் நம்மை விட்டுப் பிரிந்தது துர் அதிஷ்டமே.

தாம் உண்டு தமது குடும்பம் உண்டு என்ற சித்தாந்தம் தலைதூக்கிக் காணப்படும் இன்றைய கால கட்டத்தில் இதற்கப்பால் சிந்தித்து சமூகத்தை நோக்கித் தமது சேவையை விரிபுபடுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமகன் இவர் என்றால் மிகையாகாது. சைவப் பெருவள்ளலின் இராமநாதன் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினை பெற்ற நல்ல அடித்தளச் சிந்தனை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் இவரை இணைத்து இதன் துணைத் தலைவராகவும், தலைவராகவும் கடமை செய்து ஆதரவற்ற நிர்கதியிலுள்ள கொழும்பு சைவச் சிறார்களுக்குப் பணி செய்ய வழி வகுத்தது. கொழும்பு விவேகானந்த சபை, திருக்கேதீஸ்வரம் அறங்காவலர் சபை ஆகியவற்றிலும் இவரது பணிகள் விரிவடைந்தன. இவரது இப்பணிகளுக்கெல்லாம் துணையாக நின்று ஊக்கம் கொடுத்து வந்த இவரது துணை வியாரையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருவது பொருத்தமானது.

சுருங்கச் சொல்லின் "நம்கடன் பணி செய்வதே" என்ற தூய சிந்தனையுடன் நிறைவான வாழ்வை வாழ்ந்தவரே அமரராவார். தொண்டு என்பதும் சேவை என்பதும் நம்மத்தியில் அருகி வரும் இக்காலத்தில் இவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை. மறக்க முடியாதவை. வெள்ளைச் சட்டை அணியும் இவரது வாழ்க்கை எத்தகைய கறுப்புப் புள்ளியும் பெற்றிராத வாழ்க்கை என்றால் மிகையாகாது. அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம் பொருளை வணங்குவோமாக.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்
ஓய்வு நிலை தகைசால் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வறியாப் பணிக்கு ஒருவர்

கந்தரோடை, உடுவில் சங்கவேலி, மானிப்பாய், அளவெட்டி, சண்டிலிப்பாய், ஏழாலை முதலியவை விவசாயம் செழித்தோங்கிய கிராமங்கள். இந்தக் கிராமங்களைச் சேர்ந்த “விவசாயிகள்” பிள்ளைகள் கல்வி கற்று மேனிலையெய்யத ஸ்கந்தவரோதயக் கல்லூரியையும், தமிழ்க் கந்தையா வித்தியாசாலையையும் நிறுவியவர்கள் கந்தையா உபாத்தியாயர்கள் இவர்களுள் தமிழ்க்கந்தையா உபாத்தியாயர் தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் ஸ்தாபகர். இவரின் மருமகன் S.M அப்புத்துரை ஆறுமுகநாவலர் கனவை நனவாக்க அயராதுழைத்த இந்து போட் இராசரத்தினத்தின் வலக்கரமாகச் செயற்பட்டவர்.

இந்த மரபில் வந்த அமரர் தற்பரானந்தன் கல்விப் புலத்தோடு காலமெல்லாம் தொடர்புபட்டிருந்தும், இறுதி மூச்சுவரை சைவ சமயத்திற்கும் கலைத் துறைக்கும் உழைத்ததும் புதுமையல்ல

“தற்பர்” ஆறு வருடம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராகவும் இரண்டு வருடம் உபதலைவராகவும் அரும் பணியாற்றினார். பெரியார் இராசரத்தினத்திற்கு உறவினராகவும் அணுக்கராகவும் இயங்கி அவர் பெற்ற அனுபவம், சங்கப் பணிகளைச் சாதுரியமாக முன்னெடுக்க உதவியதை நன்றியோடு குறிப்பிட விரும்புகின்றேன். அவருடைய தலைமையில் இந்து போட் இராசரத்தினம் - காலமும் வாழ்வும் என்ற நூலும் சைவ வித்தியா மலரும் முக்கிய பதிவுகள் ஆகின.

உயிர் உண்ணும் நோய் பிடித்த பிறகும் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக தாம் செய்ய வேண்டிய பணிகளை எவ்வித சோர்வுமின்றிச் செய்து வந்த “தற்ப” ரின் மனத் திண்மை போற்றற்குரியது. மருந்துகளால் பயனில்லை என்பதை மருத்துவர் சூசகமாகத் தெரிவித்த பிறகும் திருக்கேதீச்சரப் பெருமான் தேரில் வரும் கோலத்தைத் தரிசித்து விட்டு ஊர் திரும்பிய அமரரின் ஆத்மா அப்பெருமானின் திருவடிக் கீழ் அமைதி பெறுக!

சோ.பத்மநாதன்
தலைவர்
சைவ வித்தியா விருத்திச் சங்கம்
திருநெல்வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரணி பாராட்டும் தற்பரானந்தன்

ஆன்றமைந்த அறிவுடையார் வாழும்
ஆதியாம் வரலாறு பேசும்
சான்றோர்கள் இன்று நின்று கூடும்
தரமான கந்தரோடை தனிலே
தோன்றி வளர் மரபுதித்த அறிஞர்
தூயவராம் அப்புத்துரை மகனாம்
ஈன்றிலங்கும் தற்பரானந்தன்
எல்லோரும் போற்ற வாழ்ந் திருந்தார்

சுற்றமாய்த் தம்மரப்பள்ளிக்கூடம்
தூய தமிழ்க் கந்தையாவில் சேர்ந்து
வற்றாத ஆசிரியர் அதிபராக
வாண்மையுடன் தொண்டாற்றி மீண்டு
பற்றாகக் கந்தவரோதயந் தனிலே
பதவியில் உப அதிபராய் பின்பு
மற்றுடுவில் கோட்ட உதவிப் பணிப்பாளராகி
மாண்பின் பணிப்பாளராகி ஓய்ந்தார்

தம் மரபில் குலக்கொடியா யுள்ள
தையலான ஆசிரியை தனையே
செம்மையுறத் துணைவியாய்க் கைப்பிடித்து
சீரான வாழ்விலே சிறந்தே
இம்மையிலே வாழ்வாங்கு வாழ்ந்து
தம்மையும் மறந்து தொண்டாற்றி நல்ல
தற்பரானந்தன் சாந்தி பெற்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூட மாணவர்கட் காக
பற்றாத நாவலர் வழியில்
வள்ளிதாக அன்னவரைட்பயிற்சி
வளர்த்துச் சைவ வாழ்வில் நடாத்தி
புள்ளியாய் இந்து போட் அநாதை இல்லம்
போற்றியே வளர்ந்திடவும் நின்றார்
வள்ளலாம் இராசரத்தினம் நினைவாய் அவரின்
வரலாற்று நூலும் வெளியிட் டாரே

வட இலங்கைச் சங்கீத சபையின்
வாய் மாய் பெரும் உறுப்பினராகி
திடமுடனே பாடுபட்ட வள்ளல்
திறம் வாய்ந்த தற்பரானந்தன் வாழ்க
கடமையிலே கண்ணாகி யிருந்த
கடவுளும் மதித்திடவே வாழ்ந்த
புடமிட்ட பொன்மாலை யாய் விளங்கி
புவி போற்ற வாழ்ந்து சென்றார் சாந்தி

கீரிமலை சிவநெறிக் கழகத்தின்
சேர்ந்து ழைத்து ஆண்டு பதினைந்தாக
நேரியதாய்ச் சைவ மாணவர்க்காய்
நேர் பரீட்சை மத்தியஸ்தம் செய்தார்
சாரி சாரி யாக மக்களுக்காக
சமாதான நீதிவானு மாகி
பாரெல்லாம் போற்றி பெயர் பதித்தார்
பண்பில் ஒருவரெனப் பாராட்டப் பெற்றாரே

இந்துபோட்டில் அமரர் அப்புத்துரையுடன் (20ஆண்டு) மகன் தற்பரானந்தனுடனும் பழகிய ஆசிரியர்

இணுவில்

முதுபெரும் புலவர், கலாபூஷணம்
புலவர் மணி வை.க.சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த சமூக சமய தமிழ் பண்பாளர் அமரர்.அப்புத்துரை தற்பரானந்தன்அவர்கள

அமரர் தற்பரானந்தனின் தந்தையார் திரு.சி.மு அப்புத்துரை அவர்கள் கந்தரோடையில் சீரும் சிறப்பும் மிக்க குடும்பத்தை சேர்ந்தவர் "இந்துபோட் இராசரத்தினம் அவர்களின் உறவினர். கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையின் தாபகராகிய திரு கந்தையா அவர்களின் மகளை மணந்து அவ்வித்தியாலயத்தின் முகாமையாளராகவும். இருந்தவர் இந்துபோட் இராசரத்தினம். அவர்களின் வலக்கைபோல் இருந்து சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் நிர்வாகத்துக்கு நெடுங்காலம் பணிபுரிந்தவர் இதனால் இந்துபோட் அப்புத்துரை எனவும் அழைக்கப்பட்டவர் திரு. தற்பரானந்தன் இவரது மூத்த மகனாவார்.

திரு.தற்பரானந்தன் தாம் தேர்ந்தெடுத்த ஆசிரியயத் தொழிலில் சிறந்து விளங்கியதுடன் சமய, சமூகதேவைகளிலும். ஆர்வமுடையவராக விளங்கினார் ஆசிரியராக அதிபாராக கோட்டக் கல்விப்பணிப்பாளராக அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்று பின்பும், தமது சமூக சமய சேவைகளைத் தொடர்ந்து செய்து வந்தார் கோட்டக்கல்விப் பணிப்பாளராக இருந்த போது சைவத் தமிழ்ப் பண்பாடுகளை மாணவர்களிடையே வளர்க்கும் நோக்குடன் பல செயற்பாடுகளை ஏற்படுத்தினார். தமிழ் மொழித் தினம், திருமுறை விழாக்கள் சரியைத் தொண்டுகள் (பூமாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், கோலம் போடுதல்) புராணபடனம், பண்ணிசை, நீதிநூல் மனனம் முதலியவற்றில் போட்டிகள் நடாத்தி பரிசில்கள் வழங்கவும் ஒழுங்கு செய்தார். இந்த நிகழ்வுகளை இவரின் பின் வந்த பணிபாளர்களும் தொடர்கின்றனர்.

கந்தரோடை ஆலடி வீரகத்தி வினாயகர் ஆலயம் வற்றாக்கை அம்பாள் ஆலயம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தவர். அரசாங்க, ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவராக 4 ஆண்டுகள் சேவை செய்துள்ளார். உடுவில் பிரதேச மத்தியஸ்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் தலைவராகவும் சில ஆண்டுகள் சேவை புரிந்துள்ளார். அவ்வாறு பல துறைகளிலும் சமூக சமய மேம்பாட்டுக்கு உதவியாக இருந்துள்ளார் இதனால் இவர் அரசாங்கத்தால் 1998 இல் அகில இலங்கை சமாதமான நீதவானக (ஜே.பி) நியமிக்கப்பட்டது.

இவர் எனது உறவினர் ஆதலால் இவரின் குணாதிசயங்களை அறியும் வாய்ப்ப எனக்கு நிறைய ஏற்பட்டது. குடும்பத்தின் மூத்த மகன் என்ற வகையில் தனது தந்தையாரின் மறைவின் பின் தன் சகோதர சகோதரர்களின் நல் வாழ்வுக்கான பெறுப்பை ஏற்றுக் கொண்டார். அவர்களும் தந்தையாராகவே இவரை மதித்து நடத்தினார். இவரது துணைவியாரான நகுலாம்பிகைதேவி ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். தமது கணவரின் சேவைகளுக்கெல்லாம் உறுதுணையாக இருந்துள்ளார்.

கொழும்பில் இவர் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் சேவையாற்றிய போது இவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இந்து மாமன்றச் செயற்பாடுகளில் ஊக்கத்துடன் பங்குபற்றி உதவினார். எனது மகன் அரவிந்தன் அவரது பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்தமையால் இவரை அடிக்கடி சந்திப்பதுண்டு. அவர் சிறுவர்களுக்கு ஏற்ற முறையில் திறமையாகக் கற்பித்து வந்ததை அவதானித்தேன். ஆரம்ப ஆண்டுகளில் அரவிந்தன் பெற்ற கல்வி பின்பு கல்வியில் சிறப்படைவதற்கு மிகவும் உதவியாக இருந்தது.

திரு.தற்பரானந்தன் பற்று மிக்கவர் கோயில் வழிபாட்டில் ஊக்கத்துடன் ஈடுபட்டு வந்தார். தென்னிந்தியாவிலுள்ள ஆலயங்களுக்கும் திருக்கேதீச்சரத்துக்கும் அடிக்கடி சென்று வருவார் சென்ற ஆண்டு (2011) சுகயீனமுற்றிருந்த போதும் சிதம்பர தரிசனம் செய்ய விரும்பி தனது துணைவியாருடன் சிதம்பரம் சென்று ஆருத்திரா தரிசனம் செய்து திரும்பினார். திருக்கேதீச்சர ஆலயத்தில் வருடந்தோறும் நடைபெறும் திருவிழாவலும்.மகாசிவராத்திரி விழாவிலும் பங்குபற்றித் தொண்டு செய்யும் பழக்கத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைப்பிடித்து வந்தார். இவ்வாண்டு கடும் சுகயீனமுற்றிருந்த போதும் கொழும்பில் தனது வைத்தியரைச் சந்தித்து விட்டு திரும்பும் போது திருக்கேதீச்சரம் சென்று தேர்த்திருவிழாவை தரிசித்து தனது விருப்பத்தைப் பூர்த்தி செய்தார். யாழ்ப்பாணம் திரும்பிய இருதினங்களில் இறைவன் திருவடி அடைந்தார் அவரது ஆத்மா சாந்தி அடைய திருக் கேதீஸ்வரரை பிரார்த்திக்கின்றேன்.

வி.கயிலாசபிள்ளை (தலைவர்)
அகில இலங்கை இந்துமாமன்ற,
திருக்கேதீஸ்லர ஆலய அறங்காவலர்சபை.

## நினைவில் நிறுத்துங்கள்

நல்ல குரு அமைந்தால் ஆண்டவன் கொடை
நல்ல மனைவி அமைந்தால் ஆண்டவன் கருணை
நல்ல பிள்ளை அமைந்தால் ஆண்டவன் அருள்
வாழ்க்கை என்பது தெரியாத ஊருக்கு வழி தெரியாத பயணம்
அன்னையின் ஆசியிலே ஆண்டவனை காணலாம்
அறிவினால் உயர்ந்துவிடு இல்லையேல் அனுபவம் காட்டி விடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையைக் கண்ணியமாகக் கொண்டவர் அப்புத்துரை தற்பரானந்தன்

பிறவிகளில் உயர்ந்து மானிப்பிறவி இதனையே ஔவைப்பிராட்டியும் 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்று கூறியுள்ளார். இந்த அரிய பிறவியாகிய மானிடப் பிறவியிலே பிறந்தவர்கள் தமது உயர்ந்த உள்ளத்தினாலும் உயரிய பண்பினாலும் தமது நல்ல முயற்சிகளினாலும் மக்களின் மனங்களில் நிறைந்து விடுகின்றார்கள். இந்த வகையில் எமது உள்ளங்களில் எல்லாம் நீங்காத இடம் பெற்றவர். இன்றைய நினைவுக்குரிய அன்புள்ளங்கொண்ட அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் ஆவார். மண்ணில் மாந்தர்கள் பிறக்கின்றார்கள், வாழ்கின்றார்கள். பின் மறைகின்றார்கள் என்பது இயற்கையின் நியதி. இந் நியதிப்படி பிறந்து வாழ்ந்து இறக்கும் எல்லோரையும் எல்லோருமோ அல்லது ஒரு சிலர் தானுமோ கவனத்தில் கொள்கின்றனர் என்றால் அவர்கள் செய்த செயல்கள், பணிகள் அவர்கள் தம் குணாதியங்கள் ஏதுவாக அமைகின்றன.

அமரர் அவர்கள் கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றினைக் குறிக்கோளாகக் கொண்டு படிப்படியாக உயர்ந்து காட்டியவர். ஆசிரியராக பிரதி அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக வளர்ந்தமை இவற்றிற்குச் சான்று பகர்கின்றன. இது மாத்திரமின்றி சைவ மரபுக்கு ஒரு துணையாக, சங்கீத சபைக்கு ஒரு தூணாக நின்று அவற்றைத் தாங்கி வளர்த்தவர் என்றால் அது மிகையாகாது. சிந்தை குளிரச் சிரித்த முகத்துடன் எல்லோரிடமும் அன்பாய் பழகி அரவணைக்கும் இயல்பு கொண்டவர். அடக்கமான அமைதியான மனித நேயத்துடன் சமாதான நீதவானாகப் பணியாற்றிப் பல்லோராலும் பாராட்டைப் பெற்றவர்.

கடமையிலே வீரனாகவும், பொறுமையில் தருமனாகவும் கருணையில் வள்ளலாகவும் விளங்கிய இவரை உடுவில் மத்தியஸ்தர் சபை ஒரு சிறந்த மத்தியஸ்தராக இணைத்துக் கொண்டது. 2006ஆம் ஆண்டு தொடக்கம் மத்தியஸ்தர் சபையில் ஒரு பிரதம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியஸ்தகராக இருந்து சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல தனது பேச்சுத் திறமையாலும் நுணுகி ஆராயும் தன்மையாலும் நிர்வாகத்திறமையாலும் தீர்க்க முடியாத எத்தனையோ பிணக்குகளைத் தீர்த்து வைத்திருக்கின்றார். இது எமது மத்தியஸ்தர் சபைக்கு ஒரு பெரும் வெற்றியாக அமைந்தது.

**எப்பவோ முடிந்த காரியம்**
**ஒரு பொல்லாப்பும் இல்லை**
**நாம் யாதும் அறியோம்**
**முழுவதும் உண்மை**

என்ற செல்லப்பர் சுவாமிகளின் மகா வாக்கியங்களுக்கு அமைவாக நோய் வாய்ப்பட்டு மத்தியஸ்தர் சபைக்கு வரவைக் குறித்துக் கொண்டார். காலமே எமது நினைவைக் கனவாக்கிக் கொண்டது. விதி யாரைத்தான் விட்டது. சமயத் தொண்டுகள் சமூகத் தொண்டுகள் போன்ற பொதுப் பணிகள் புரிவதற்கென்று இறைவனால் படைக்கப்பட்டவர் மண்ணுலகை விட்டு மறைந்து விட்டார். அன்னாரின் மறைவு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தியது.

**"நாச் செற்று விக்குள் மேல் வராமுன் நல்வினை மேற் சென்று செய்யப்படும்."**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறள் எமக்கு ஆறுதல் கூறுகின்றது. காலத்தால் அழியாத இவரது பணிகளை எவரும் மறக்க மாட்டார்கள்.

**உரைப்பார் உரைப்பவை எல்லாம்**
**இருப்பார்க் கென்று ஈர்வார் மேல் நிற்கும் புகழ்**

பிறப்பு, இறப்பின் தொடர்ச்சி, இறப்பு பிறப்பின் முடிவு" என்பதைப் புரிந்து கொண்ட நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடை எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுந்தரம் தம்பித்துரை
முன்னாள் தவிசாளர் மத்தியஸ்தர் சபை உடுவில்
ஓய்வு நிலை அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயத்தின் சின்னம்

சைவமும் தமிழும் செழித்து வளர்ந்தோங்கும் கந்தரோடையில் பல பெரியோர்கள் தோன்றி நீங்காப் புகழுடன் மறைந்துள்ளார்கள். அவர்கள் வியாபாரம், விவசாயம், சமயம், கல்வி, விளையாட்டு போன்ற துறைகளில் புகழீட்டியுள்ளமை நாம் அறிந்ததே. இவ்வாறு பல துறைகளிலும் தனது உயர்ந்த ஆற்றலை மக்களின் சிறப்பான வாழ்வுக்காக அர்ப்பணித்த பெரியார் அப்புத்துரை தற்பரானந்தன் ஐயா இன்று எங்களுடன் இல்லை. ஆனாலும் அவர் காட்டிய பாதை இன்னமும் எங்கள் முன்னே விரிந்துள்ளது.

தற்பரானந்தன் ஐயா எதையும் வெளிப்படையாக பேசும் நல்ல உள்ளம் படைத்தவர். பேச்சு மன்றங்களிலே பல தடவைகள் காரசாரமாகவும் உணர்ச்சி வசப்பட்டும் விவாதங்களில் ஈடுபட்டாலும் கூட எதிரான கருத்துக்களை தெரிவிப்பவர்களுடன் அன்பாகவும் மனித நேயத்துடனும் பழகும் பண்பை நான் அவரிடமே கற்றுக்கொண்டேன்.

சைவமும் தமிழும் தனது இரு கண்கள் என அடிக்கடி கூறும் தற்பரானந்தன் ஐயா புகழ் பெற்ற திருக்கோதீஸ்வர ஆலயத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிய உயர்ந்த பணிகள் அவ் சைவ சமயத்திலும் சைவமக்கள் மீதும் கொண்ட பாசத்துக்கு நல்ல கோலாகும்.

சுன்னாகம் பிரதேச மக்களின் கலை, கலாச்சாரம், கல்வி, விளையாட்டுத்துறை, வர்த்தகம், விவசாயம் போன்ற துறைகளில் வளர்ச்சிக்காக சுன்னாகம் நகர அபிவிருத்திச்சபை அங்குரார்ப்பனம் செய்யப்பட்ட போது ஏகமானதாக மக்கள் தற்பரானந்தன் ஐயாவை பதவிக்கு தெரிவு செய்தனர்.

சுன்னாகம் சுன்னாகம் தபாலகத்துக்கு சொந்தமாக நான்கு பரப்புக்காணியை பெற்றுக் கொள்வதிலும் அதை தபால் அமைச்சுக்கு கையளித்து தரமான புதிய மாடிக்கட்டிடத்தினை அமைக்கும் பணிகளிலும் அயராது பாடுபட்டவர். அத்துடன் சுன்னாகம் பொதுமயான அபிவிருத்திலும் சிறப்பாகப் பணியாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பராரனந்தன் ஐயாவின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. கந்தரோடைக் கிராமம் ஒரு கடமை வீரரை இழந்துவிட்டது. சைவ உலகம் ஒரு சிறந்த சிவபக்தனை இழந்து விட்டது. கல்வியுலகம் ஒரு கனிந்த கனவானை இழந்துவிட்டது. தமிழ் நல்ல புலமையாளனை இழந்து விட்டது. நாடோ தன்னலமில்லாத தேசப் பற்றாளை இழந்து தவிக்கிறது.

ஐயாவின் மறைவினால் துயரும் அனைவருக்கும் சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபையின் சார்பில் அனுதாபத்தினையும் ஆறுதல்களையும் தெரிவிப்பதுடன் ஐயாவின் ஆத்மா சாந்தி பெறவும் பிராத்திக்கின்றோம்.

சாந்தி !! சாந்தி !! சாந்தி !!

சபா. புஷ்பநாதன்
செயலாளர்
சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபை.

## மூன்றால் முன்னேற ...

| | | |
|---|---|---|
| அடக்க வேண்டியது | - | நாக்கு, கோபம், ஆசை |
| ஒழிக்க வேண்டியது | - | திருட்டு, பொய், சோம்பல் |
| காக்க வேண்டியது | - | வாக்குறுதி, நட்பு, அன்பு |
| மதிக்க வேண்டியது | - | முதியோர், மார்க்கம், சட்டம் |
| போற்ற வேண்டியது | - | தைரியம், திருப்தி, மனமகிழ்ச்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிற்குரியவர் நினைவுகள்

அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் அவர்களுடன் எமது தொடர்பு நாற்பது வருடங்களுக்கு மேலாயது. பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி என்று இந்நாளில் அழைக்கப்படுவது அறுபதுகளில் பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலை என்ற பெயருடன் விளங்கியது. அப்பாடசாலையில் 1968ஆம் ஆண்டிலிருந்து ஒன்றாக ஆசியராக கடமையாற்றிய காலத்தில் தொடங்கிய உழுவதும்பே, கெழுதகை நட்பும் இருவருக்கிடையே தொடர்ந்து பேணப்பட்டன.

பம்பலப்பிட்டிப் பாடசாலையில் கடமையாற்றிய போது நிர்வாகக்கடமைகளிலும், கல்விசார் நடவடிக்கைகளிலும் பிற விடயங்களிலும் இருவரும் இணைந்து செயற்பட்ட பங்களிப்புக்களும் ஆலோசனைகளும் முன்னின்று நடத்தும் செயற்பாட்டுத்திறனும் இன்றும் மனத்திரையில் பதிந்தபடியுள்ளன.

அப்பாடசாலையின் உதவியாசிரியராகக் கடமை ஆற்றிய போதே 1971ஆம் ஆண்டில் அன்றையகால ஒழுங்கமைப்பின்படி முதலாந்தர அதிபர் பதவியினை இருவரும் பெற்றுக் கொண்டோம். யான் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு பதவி உயர்வு பெற்றுவர அவர் கொழும்பு மாவட்டப் பாடசாலை ஒன்றிலேயே அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

காலங்கள் உருண்டோடின. தற்பரானந்தன் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தார். பின்னர் திருமணஞ் செய்து கொண்டார். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கடமையேற்றார். பின்னர் தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் அதிபராக பதவியேற்றார். யாழ்ப்பாணத் திற்கு அவர் வந்த பின் மீண்டும் தொடர்புகள் ஏற்பட்டன. யாழ்ப்பாணத்தில் சில பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றிய யான் 1991ஆம் ஆண்டு இணுவில் மத்திய கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்ட பின் உடுவில் கோட்டத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருடைய பாடாசலைகளும் அமைந்தமையால் சந்திப்புக்கள் தொடர்புகள் அதிகரித்தன.

அக்காலத்தில் தற்பரானந்தன் அவர்களுக்கு உடுவிற் கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவியாற்றச் சந்தர்ப்பம் வாய்த்தது. உத்தியோக ரீதியிலும் நட்பு ரீதியிலும் இருவரும் தொடர்ந்து பழகும் சந்தரப்பம் பல அமைந்தன. பரஸ்பர ஆலோசனைகளும் கலந்துரையாடல்களும் அனுபவப் பகிர்வுகளும் இருவருக்கும் இடையில் ஏற்பட்டமை இன்னும் நினைவில் நிறைகின்றன.

அன்பன் தற்பரானந்தன் தனியே தன் உத்தியோகம் உண்டு தானுண்டு என்ற கொள்கையுடையவர் அல்லர். அவருடைய குடும்பப் பின்புலமும், தந்தை வழித்தொடர்புகளும் அவரைப் பொது நல விடயங்களிலும் சமூக நலனோம்பு நிறுவனங்களிலும் தொடர்பு கொண்டு ஈடுபாட்டுடன் செயலாற்றத், தொண்டாற்ற உந்து சக்திகளாக அமைந்தன. அதன் காரணமாக அவர் பல்வேறு நிறுவனங்களில் அங்கத்தவராகவும், பதவி நிலை வகித்தும் தன்கால இறுதிவரை தொண்டாற்றி வந்தார்.

சொந்த ஊராகிய கந்தரோடையிலும், யாழ்ப்பாணத்திலும் அமைந்த நிறுவனங்களில் பணியாற்றினார். சிறப்பாக பெருமையுடன் மிளிரும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, வட இலங்கைச் சங்கீத சபை, சைவவித்தியா விருத்திச் சங்கம் போன்ற சமய சமூக நிறுவனங்களில் அங்கத்துவமும் பதவிகளும் வகித்து அவற்றின் பணிகளுக்கு உறுதுணையாகவும் முன்னிலைப்படுத்துதலிலும் அரும் பெருந்தொண்டாற்றியுள்ளார். இவரின் பணிகளை நினைவு கூர்ந்து அவ்வத் தபானங்கள் இவருக்குத் தமது இறுதி அஞ்சலிகளை வெளியிட்டமை உளங்கொளத்தக்கதாகும்.

எமது நினைவுக்குரிய அன்பன் தற்பரானந்தன் அவர்கள் தனிப்பட்ட சிறந்த குணாதியங்களையுடைவராக எம்மிடையே மிளிந்தவர். தான் அறிந்த அறிகின்ற விடயங்கள் எவற்றினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணுக்கமாக நுட்டபமாக ஆழ ஊடுருவிச் சிந்தித்துச் செய்திகளைச் சேகரித்து, தமது ஞாபகத்தில் சேமித்து வைத்து தேவையான இடத்து ஆதாரங்களுடன் எடுத்து விளக்கி எல்லோரும் ஏற்கத்தக்கவகையில் முன்னிலைப்படுத்தும் ஆற்றல் வாய்நதவர். எவ்விடத்திலும் எவரிடத்திலும் நியாயத்திற்கும் உண்மைக்கும் பொது நலத்திற்கும் உகந்தவற்றை எடுத்துக்காட்டி வலியுறுத்தி வாதாடும் பண்புள்ளவர்.

உள்ளதை உள்ளவாறே நெற்றிக்கு நேராகவே குற்றத்தைக் குற்றமே எனக்கூறிக் குறைகளை நிறையாக்கும் வல்லமையும் அவரிடம் காணக்கூடியதாய் அமைந்தது.

நண்பர்களிடம் நகுகல் பொருட்டோடு அமையாது மிகுதிக்கண் மேற்சென்று இடித்துரைத்த நன்னெறிப் படுத்தும் நட்பாடலும் கொண்டு விளங்கியவர்.

தற்பரானந்தன் பெயருக்கேற்றவாறு மேலான ஆனந்தத்தைத் தாமும் பெற்றுப் பிறரையும் அதற்குள் ஆழ்த்தும் தன்மை உடையவர். என்பது அவருடன் ஒன்று சேர்ந்து பழகிப் பணி ஆற்றியவர்களுக்கு அனுபவத்தில் ஏற்பட்டிருக்கும். கூடிப்பழகும் போதும், குறித்த விடயம் பற்றிக் கலந்துரையாடும் போதும் சம்மந்தப்பட்டவர்களுடன் அவ்வவ்போது மகிழ்ச்சிகரமாக உரையாடி விகடப்பகிடிகளும் கருமங்களை ஆற்றுந் தன்மையையும் அவரிடம் காணப்பட்டமை நாம் அறிவோம்.

அமரர் தற்பரானந்தன் அவர்கள் நற்குலத்தில் பிறந்து கற்பவை கசடறக் கற்று நற்குடும்பத் தலைவனாய் நல்லாசிரியனாய், நல்ல அதிபராய், நல்ல கோட்டக்கல்விப்பணிப்பாளராய், சீரிய சமூகத் தொண்டனாய் விளங்கி "வினைப் போகமே ஒரு தேகம் கண்டாய் - வினைதான் ஒழிந்தால் ஒரு தினைப் போதளவு நில்லாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றதற்கிணங்க பிரார்த்த வினையை அனுபவித்து முடித்த இறுதிக்கண் தொடர்புபட்டார் யாவரும் இரங்கி நிற்ப இவ்வுலகவாழ்வை நீத்த இறைவனடி சேர்ந்து விட்டமை உலகவியற்கையே என்பதுணர்ந்து யாம் ஆறுதலும் அமைதியும் அடைவதுடன் அவரது ஆத்மா தற்பராமாகிய சிவன் கழல் அடைந்து பேராவின்பப் பெருநிலை பெறுக எனப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

திரு.மு.திருஞானசம்பந்தப்பிள்ளை
தலைவர்
அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்.
உப தலைவர்
சைவ பரிபாலன சபை.

**"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தமிழ்ப் பண்பாட்டிற்கு உதாரண புருஷர்

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சீர்மிகு பண்பாளர்களை உறைவிடமாகக் கொண்ட வரலாற்றுப் புகழ்பூத்த கந்தரோடைப் பகுதியில் தோன்றி இன்னரும் சேவைகள் பல புரிந்து எம்மை விட்டு மறைந்துள்ள மாண்புடைச் செம்மல் திரு. அப்புத்துரை தற்பரானந்தன் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவபூமி என அழைக்கப்படும் இலங்கைத் திருநாட்டின் தலைப்பகுதியாக விளங்குகின்ற யாழ் மாவட்டத்தில் ஏறக்குறைய நான்கரை நூற்றாண்டு கால அந்நிய வல்லாதிக்கக் கரங்களின் சுயபண்பாட்டுச் சுரண்டல் நடவடிக்கைகளுக்கு எதிராக அர்ப்பணிப்புணர்வுடன் தன்மான முனைப்புடனும் போராடி மேன்மைமிகு தொன்மை மிகு சைவத்தையும் தமிழையும் பேணிக்காப்பதில் பல்வேறு இடையூறுகளின் மத்தியில் கண்ணும் கருத்துடனும் பாடுபட்ட சீராளர்களின் வழித்தோன்றல்களாக இப்பூமியில் உதித்தவராக அமரர் விளங்குகின்றார்.

பிறப்பிலிருந்து மறைவும் வரை சைவபண்பாட்டுக்கோல உடையுடன் வலம் வந்து சமூக, சமயப் பணிகளை ஆற்றினார். இந்து சமய வழிபாட்டு முறைகளையும் பண்பாட்டுப் பற்றுக்களையும் மாணவபராயத்தில் பற்றுறுதியுடன் கடைப்பிடித்தொழுகச் செய்வதன் மூலம் நமது இனத்தின் தனித்துவ இயல்புகள் சிதைவுறாது நிலை நிறுத்தப்படுவதற்கு தன்னாலான உதவிகளை நல்கினார். இதன் ஓரங்கமாக சங்கானைக் கல்விக் கோட்டத்தின் கல்விப் பணிப்பாளராக விளங்கிய வேளையில் சைவத்திரு முறைவிழா கொண்டாடும் மரபினை அறிமுகப்படுத்தி அதனோடு இணைந்த முன்னோடி நிகழ்வாக கோலம் போடுதல், பூமாலை கட்டுதல், பண்ணிசை, நீதிநூல் மனனம் போட்டிகளை நடாத்தி பரிசில் வழங்கி உற்சாகப்படுத்துகின்ற நிகழ்வினையும் நடைமுறைப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளராக கடமையேற்ற காலம் தொட்டு இளைப்பாறும் வரை இவ்விழாவினை அங்கு வருடந்தோறும் கொண்டாடுவதற்கு வழிகாட்டியாக விளங்கினார்.

“செய்வன திருந்தச் செய்” என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க தானும் செயற்பட்டு ஏனைய அதிபர்களும் அதற்கிணங்க தொழிற்படுவதற்கு வழிகாட்டினார். ஆழ்ந்தகன்ற கல்விப்புலமையையும், தீர்க்கதரிசனப் பார்வையும், சவால்களை எதிர்கொள்ளும் திடமனமும் இவரின் பன்முக ஆளுமையின் அடித்தளங்களாக விளங்கின. இளையோர் பின்பற்றிச் செல்லக்கூடிய பல முன்னோடியான வாழ்க்கைக் கோலங்களை எம்முடன் விட்டுச் சென்றுள்ளார். கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய பொழுது நேரம் காலம் பாராது தனக்கே உரிய சீரிய முகாமைத்துவப் பண்புக்கோலங்களால் கல்வி மேம்பாட்டுக்கு உரமாக விளங்கினார்.

அன்னாரது ஆத்மா சாந்தி அடையவும் அவரது சமூகம் சார் நல்லெண்ணங்கள் ஈடேறி நிலைபேறடையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.சு. சுந்தரசிவம்
முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் மைந்தன்

வரலாற்றுச் சிறப்பு மிக்க கந்தரோடைக் கிராமத்திலே புகழ் பூத்த சைவப் பாரம்பரியம் மிக்க கல்வித்தானம் வழங்கிய குடும்பத்திலே பிறந்து அக்கிராமத்திலே வாழ்ந்து அண்மையில் இறைவனடி சேர்ந்த அமரர் அப்புத்துரை தற்பரானந்தன் அவர்களது இழப்பு எம்மை எல்லாம் கதிகலங்க வைத்து விட்டது. கல்விப் புலத்திலே நான்கு சகாப்த காலமாக ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப்பணிப்பாளராக அளப்பரிய சேவையாற்றியவர்.

தான் ஓய்வு பெற்ற பின்பும் ஓயாது சமூகத்திற்காக உழைத்த சமூக சேவையாளன். அந்த வகையில் பல சமூக அமைப்புக்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்த அந்த அமைப்புக்களின் உயர்வுக்காக அருந்தொண்டாற்றியவர். திருநெல்வேலியில் இயங்கும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்து சைவச்சிறார்களின் உயர்வுக்காக உழைத்தவர். வட இலங்கைச் சங்கீத சபையின் செயலாளராக இருந்து அச் சபைக்கு நிரந்தரக் கட்டம் இல்லையே என்ற குறையை நிவர்த்தி செய்ய மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப்பீடத்திற்கு அருகில் நிலத்தை கொள்வனவு செய்து அங்கு ஓர் கட்டடத்தை அமைப்பதற்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டவர். 80ஆவது ஆண்டு நிறைவில் கட்டடத்திறப்பு விழாவும் மலர் வெளியீடும் நிகழவிருந்த நிலையில் அவரது பிரிவு பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுன்னாகம் அஞ்சல் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு காணி ஒன்று இவரது முயற்சியினாலே அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டது. அத்தோடு உடுவில் பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினராக இருந்து மக்களது பல பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்த்த வைத்து மக்கள் மதிப்பைப் பெற்றவர். தனது கிராமத்திலுள்ள சுப்பிரமணிய சனசமூக நிலையத்தின் தலைவராக இருந்து அந்த நிலையத்தின் உயர்வுக்கு உழைத்தவர். இப்படியாகப் பல அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லும் பகலும் மக்களின் உயர்வுக்காக தொண்டாற்றிய இவரது இழப்பு ஈடு செய்யமுடியாதது. இவர் செய்த சேவைகள் என்றும் இவரது நாமத்தை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்.

இவர் சுகவீன முற்றிருந்த போதும் கடந்த டிசம்பர் மாதம் மார்கழித் திருவாதிரைத் தேருக்கு இந்தியா சென்று சிதம்பர நடராசனை தரிசித்து வந்திருந்தார். இறப்பதற்கு முதற்கிழமை திருக்கேதீச்சரம் சென்று கேதீஸ்வரனை வணங்கி வந்து இறைவனின் பாதத்தினை பற்றிப் பிடித்துக் கொண்டார். இவரது இழப்பு இவரது குடும்பத்திற்கு மாத்திரமல்லாது இவர் வாழ்ந்த சமூகத்திற்கும் பேரிழப்பாகும். இவரது பிரிவினால் துயருறும் இவரது மனைவி, சகோதரர்கள் உறவினர்கள் அனைவருக்கும் எமது அஞ்சலியை தெரிவிப்பதோடு இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி

கமலவாசா
ஆனைக்கோட்டை

யு.ஏ கணேசலிங்கம்
ஓய்வு நிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயத்தை நேசித்த கல்வியியளார்

மீளாத நெடும் உறக்கத்தில் ஆழ்ந்து விட்ட அமரர் உயர்திரு அப்புத்துரை தற்பரானந்தன் அவர்கள் கல்விச் சமூகத்தில் நன்கு தெரிந்தவர். குறிப்பாக வலிகாமக் கல்விப் பிரதேசத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். தொடர்ந்து சமூகத்திற்காக சேவையாற்றியவர். இறுதி மூச்சுவரை கல்வி சார்ந்த பணியினை மேற்கொண்டவர்.

கந்தரோடைக் கிராமத்தில் தலைசிறந்து வாழ்ந்த ஒரு உத்தமராக நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய மூன்றிற்கும் இலக்கணமாக வாழ்ந்தவர் அவரின் மறைவு என்னையும் ஏன் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாகியது.

எல்லோரும் பிறப்பதும் இறப்பதும் இயற்கை ஆனால் வாழும் போது எவ்வாறு வாழவேண்டும் என்பதை அமரர் தற்பரானந்தன் அவர்கள் "சேவை செய்வதே ஆனந்தம்" என்ற வாக்கிற்கு அமைய கல்விசார்ந்த சமூகசேவையினை செய்து எல்லோர் மனதிலும் நன்கு இடம்பிடித்துள்ளார். இதனை அவரது இறுதி ஊர்வலத்தில், அஞ்சலி செலுத்திய மக்கள் கூட்டத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

தற்பரானந்தன் அவர்கள் சிந்தனை, செயல், வாழ்வு என்பவற்றின் மூலமாகக் கல்விச் சமூகத்திற்கு குறிப்பாக பாடசாலைக் கல்வி முறைமைக்கு அரும்பணியாற்றியுள்ளார். குறிப்பாக மானுடத்தின் மாண்பதனை உணர்ந்து கொண்டு உற்றார், அயலார், உறவினர் மேல் அக்கறையாய் அடுத்தவரின் துன்பம் துடைப்பதுவே வாழ்வாக அன்பு செய்து மானுடத்தின் பள்ளிச்சிறார்களின் உயர்ச்சிக்காக உழைத்த உத்தமர். தற்பரானந்தன் அவர்கள் கல்விச் சேவையில் படிமுறையாக நல்ல ஆசிரியர், நல்ல அதிபர், நல்ல கோட்டக்கல்வி அதிகாரியாக சேவை ரீதியாக பதவி உயர்வு பெற்று தனது பிரதேசத்திற்காக உழைத்த உத்தமர். அவரின் ஓய்வுக்குப்பின்னர் யான் உடுவில் கல்விக் கோட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்று நடத்தியபோது அவரது பாடசாலை நிர்வாக நடைமுறை ஒழுங்கு பாடாசலை தீர்வுகள், பிரச்சினைகள், வழிமுறை ஒழுங்குகளைக் கண்டறிந்தேன். எந்த விடயத்தையும் தீர ஆராய்ந்து நல்லதாக மாணவர்கள் கல்வி பயனுடையதான வழிமுறைகளைக் கையாண்டு வெற்றி கண்டவர். குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கல்வி சார்ந்த வரலாற்றுப் பதிவுகள் தகவல்கள் வலிகாம பாடசாலைகளின் வரலாற்றுப் பின்னணித் தகவல்கள், அதுசார்ந்த அதிபர்களின் வழித்தோன்றல், நிறுவுநர்களின் மக்கள் சார்ந்த சரிதைகள் யாவும் நன்கு தெரிந்தவர். ஆகையினால் பாடாசலை நிர்வாக, சமூகம் சார்ந்த பிரச்சினைகளை லாவண்ணியமாக புரிந்து உணர்ந்து நல்ல நியாயமான தீர்வை முன்வைத்து வெற்றி கண்டார். இதனால் கல்வி நிர்வாக உயர் அதிகாரிகளிடம் நன் மதிப்பை பெற்றார். குறிப்பாக கல்விசார் விடயங்களில் நியாயமானது என்று உணர்ந்தால் அதனை வாதாடி நியாயப்படுத்தி கடைசியில் வெற்றி காண்பார்.

தற்பரானந்தன் அவர்களின் உறவானது யான் அவருடன் ஆசிரிய சேவைக்காலத்தில் இருந்து நன்கு அறிந்தவர். அவர் யாழ் மாவட்டத்தமிழ் ஆசிரியர்கச் செயலாளராகவும் செயற்குழு உறுப்பினராகவும் இருந்த காலத்தில் இருந்து ஆசிரியர் உரிமை, தலைமை, வென்றெடுப்பதில் முனைப்பாக நிற்பார்.

இரு நாட்பழகினும் பெரியோர் கேண்மை இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்குமாமே என்ற கூற்றுக்கமைய அவருடன் நட்புக் கொண்டால் அது நீண்டு நிலையான உறவாக மாறும் அவருடன் நட்புற்று பதினைந்தாண்டுகளாயினும் அவருடன் என்பாசம் இரு நிலம் பிளக்க வேர் ஊன்றியது. அவர் கல்விசார்ந்த நிர்வாகச் செயற்பாடுகள் முகாமைத்துவ நடைமுறைகளை தீர்க்கும் வழிமுறைகளை தெரிந்தவராக சொல்லித்தருவார். உற்சாகமூட்டி செயற்பாடுகளை திருப்திகராமாக நிறைவேற்ற உதவியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மாணவர்கள் சைவப் பண்பாட்டுடன் சைவ சமய ஒழுக்காறு உடையவராக, ஆசாரசீலராக வாழ்வதற்கு தாய் மொழியான தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் ஆழமாக கண்டிப்பாக பாடசாலைகளில் விருத்தியுற அடிக்கடி வலியுறுத்தி வந்தவர். அதற்கமைய வலிகாமம் வலயத்திலே சங்கானை, உடுவில் கோட்டப் பிரிவுகளில் திருமுறை விழாவினை நடத்தி வெற்றி கண்டவர் பெற்றோர், மாணவர் ஆசிரியர், அதிபர் சமூகத்தினருடைய மாணவர் செயற்பாடுசேவை உணர்ந்தவராக செயற்பட்டமையால் நன் மதிப்பைப் பெற்றார்

**"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் - உலகத்தவர்**
**உள்ளத்திலெல்லலம் உளன"**

எனும் குறள் மொழிக்கு இணங்க மனத்தே பொய்யாது மனச்சாட்சியுடன் வாழ்ந்தவர். கல்வி சார்ந்த சமூகத்துடன் அவர் தம் உள்ளத்தில் வாழ்பவராயினார். அவரது பிரிவு எம்மை பாதிக்கின்றது அவர் விட்டுச் சென்ற பணியினை முன்னெடுத்துச் செல்வோம். அதுவே அவருக்கு செய்யும் பிரதி பலனாகும்.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அவரின் மனைவி பெறாமகக்ள் மருமக்கள் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமருகிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

செ.குபேரநாதன்
ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்
உடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

'சிவத்தமிழ்ச் சொல்லழகர்'
ச.லலீசன்
மருத்துவமனைச் சாலை,
அச்சுவேலி.

S.Laleesan,
B.A.(Hons.), P.G.D.E.(D),M.A.(Tamil), M.Ed.
S.L.P.S. 2 – II, S.L.T.E.S. – Class III
Lecturer,
Kopay Teachers' College, KOPAY

தொலைபேசி இல. Telephone No. : 077 3787358 / 021 3219907
e-mail : laleesan@gmail.com

# சமயவாழ்வின் இலக்கணமாகத் திகழ்ந்தவர்

எழில் மிக்க எடுப்பான தோற்றம். புன்னகை பூத்துக் குலுங்கும் முகம். அறிவு முதிர்ச்சிக்கு அடையாளமாக அகன்ற நெற்றி. கூடவே அகன்ற தோற்றம். அன்பும் அறிவும் சுடர் விட்டுப் பொங்கும் கண்கள். எண்ணங்களை எல்லாம் செயற்படுத்தும் திண்ணிய நெஞ்சம், தெளிந்த நல்லறிவு. சிறுமையைக் கண்டு சீறும் உள்ளம். பெருமையைக் கண்டு பணியும் பெற்றிமை.... இப்படி வார்த்தைகளின் வர்ணிப்புக்குரியவராக விளங்கியவர் தான் எங்கள் தற்பரானந்தன் சேர்.

எனது மாமனார் திரு.சு.முத்துக்குமாரசுவாமியின் நண்பராகவும் சிற்றனையார் திருமதி யோ.திலகாம்பிகை குடும்பத்தினரின் உள்ளம் ஒன்றிய அயலவராகவும் விளங்கியவர். இதனால் என் மீதும் தன் அகலப் பார்வையை பதித்திருந்தார்.

சமய வாழ்வென்பது சமூகப் பணிகளை மையப்படுத்திய வாழ்வு என்பதைச் செவ்வனே அடையாளப்படுத்தியவராக இவரைத் தரிசித்த அனுபவம் எனக்கு உண்டு. தான் சார்ந்திருந்த பதவிக்குப் பெருமை சேர்க்கும் பணிகளை வாழ்வில் முன்னெடுத்தார். அவை கல்விப் பணிகளென்றாலென்ன? சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணிகளென்றாலென்ன? சங்கீத சபை பணிகளென்றாலென்ன? எதிலும் அவர் ஈடுபடும் போது ஒரு தனித்துவம் வெளிப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் போன்ற வளர் இளம் உள்ளங்களை ஆற்றுப்படுத்தி அரவணைத்தார். சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவராக செயற்பட்ட காலங்களில் இரண்டு ஆண்டுகள் சங்கத்தில் தொடர் சொற்பொழிவை மேற்கொள்ள வாய்ப்பினை நல்கியிருந்தார். நிறுவனம் சார்ந்த நிலையில் கௌரவப் பட்டம் ஒன்றை நல்கியும் என்னை அங்கீகாரப்படுத்தினார்.

இன்னும் சில காலம் எம்முடன் இருந்து எம்மை ஆற்றுப்படுத்துவார் என்றே எண்ணியிருந்தேன். வகுத்தான் வகுத்த வழியை மாற்ற வல்லார் யார்?

தற்பரானந்தன் சேர் எம்முடன் இல்லாவிடினும் அவர் விதைத்துச் சென்ற தூய பணிகளை அவரை எங்களுடன் வாழ வைக்கும்.

ச.லலீசன்
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலுடன் மீள்வான் இங்கே

1. தோற்றத்தில் மலைதற்பர்! தமிழ்சை வத்தின்
தொண்டன்! மனஉறுதியிலும் மலையே போல்வான்!
ஆற்றல்களில், அறிவினிலே ஆழி போல்வான்!
அருள்நெஞ்சன்! வெள்ளாடைக் கழகு தந்தோன்!
நேற்றுவரை என்நெஞ்சின் நிமிர்ச்சி அன்னான்!
நீராக நின்றவண்ணம் எரித்தோன் நீசம்!
கூற்றுவனோ மிகக்கொடியன்! கொடிய நோயைக்
கொடுத்து மெல்ல எடுத்தானே குள்ளப் பாவி!

2. சிரித்தமுகம்! சினந்து தற்பர் பார்த்தோர் இல்லை!
செந்தமிழ்ச்சை வவித்யா விருத்திச் சங்கம்
கருத்துடனே காத்துவந்த காவல் தெய்வம்!
கல்விப்பணி மயமான கடமை வீரன்!
குருத்துவத்தின் குன்று! அதிபன்! உடுவில் கல்விக்
கோட்டத்துப் பள்ளிகளின் குழப்பம், குற்றம்
திருத்திவைத்த செயல்வீரன்! ஈழச் சான்றோர்
செய்ததவப் பயன், தேசப் பற்றோன் தற்பர்,

3. உந்துருளி நொந்துநொந்து சுமந்தே பாய,
ஓயாமல் இரவுபகல் ஓடி ஓடிச்
சந்ததமும் ஊர்த்தொண்டு, கல்வித்தொண்டு,
சைவஅநாதர் தொண்டு, தமிழ்த்தொண்டென்று
எந்தவிதத் தன்னலமும் எண்ணானாக,
இழப்புகளால் மனங்குலையா யோகி யாக
வெந்து வெந்து மானுடத்தின் மேன்மைக் காக
விரைந்துழைத்தான்! தற்பரினை மிஞ்ச யாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. “அற்புதர்கள்” எனாஈழம் அஞ்ச லிக்கும்
அரசியலில், கலைகல்வி, இலக்கி யத்தில்
சிற்பிகளை, மருத்துவர், பல் நிபுணர் தம்மைத்
தேசத்துக் கீந்துவரும் கந்த ரோடை
தற்பரினைத் தந்ததிலே வியப்பே இல்லை!
சகலருக்கும் கேட்பதெல்லாம் புரிந்தே வந்த
கற்பகம் இத் தற்பரா னந்தன்! அந்தோ!
கண்மூடிப் பறித்தானே கயவன் காலன்!

5. சந்ததி, சந் ததியாகத் தமிழ்க்கல் விக்காய்
தமைத்தேய்த்தோர் சால்குடியில் வந்தோன்! “ஸ்கந்தா”,
கந்தையாத் தமிழ்ப்பள்ளி தமை, யாழ்ப் பாணம்
கண்டமுதல் தமிழாட்சிக் கீர்த்தி மிக்க
கந்தரோடை நகரினிலே காத்து நின்றோன்!
கல்விநிற்கும் கயமைஇருள் விலகல் காண
வெந்துமனங் காத்திருந்தான்! விடியா முன்னே
வீழ்ந்தாலும் விடியலுடன் மீள்வா னிங்கே!

பண்டிதர்.ச.வே.பஞ்சாட்சரம், கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்க நிர்வாகி

## அமரர் அ. தற்பரானந்தன (S.L.E.A.S)

வலிகாமம் கல்வி வலயத்தில் உடுவில் கல்விக் கோட்டத்தில் 2003 ஜனவரி வரை சிறப்புடன் பணியாற்றிய பெருமைக்குரியவர். அமரர் அ. தற்பரானந்தன் இவர்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளராக இருந்த காலம் உடுவில் கல்விக் கோட்டத்தின் சிறப்பு மிக்க காலம் எனலாம். சகல பாடசாலைகளையும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டவர். மேலும் ஆரம்பக் கல்வியில் அதீத அக்கறை காட்டியதுடன் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் தயார்ப்படுத்த முன்னோடிப் பரீட்சைகளை வைத்து வலயத்திலேயே உடுவில் கோட்டம் பரீட்சைப் பெறுபேற்றில் முதலிடம் பெற வைத்தவர்.

மேலும் சைவப் பாரம்பரியத்தையும் மனனம் செய்யும் செயலையும் மாணவரிடையே வளர்க்க வேண்டுமென்ற ஒரே நோக்குடன் பாடசாலைகளுக்கிடையே போட்டிகளை நடாத்தி சைவத் திருமுறை விழாவை நடாத்தியதன் ஊடாக கிராமம் தோறும் சைவசமய எழுச்சியை ஏற்படுத்தியவர் வருடா வருடம் இவ் விழாவை ஒவ்வொரு பாடசாலையிலும் கோட்ட மட்டத்தில் நடாத்தி பரிசளிப்பு வைப்பவத்தையும் மேற்கொண்டதுடன் 2002ம் ஆண்டு வைசவத் திருமுறை விழாவில் உடுவில் கோட்டப் பாடசாலைகளின் வரலாறு அடங்கிய நூலையும் வெளியிடச் செய்தவர். அதிபர்களை நிர்வாகத்தில் ஆளுமை கொண்டவர்களாக சகல கல்வி சார் நடைமுறைகளையும் அறியக்கூடிய வகையில் அதிபர்களின் ஊடாக பாடசாலை நிர்வாகத்தைச் சிறப்புடன் நடத்த தனது பங்களிப்பை வழங்கியதுடன் சிறந்த கட்டுக்கோப்பான நிர்வாகம் ஒவ்வொரு பாடசாலையிலும் நடைபெறுவதை உறுதிப்படுத்தியவர் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லையெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் கோட்டத்திற்கு எனத் தனியான கோட்டக் கீதத்தை இசைமாமணி வீரமணி ஐயரை கொண்டு இயற்றியதுடன் கோட்டக் கொடி, சின்னம் என்பவற்றையும் உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். தமிழ்க் கலாச்சாரம், சைவப்பாரம்பரியம் என்பவற்றைப் பாடசாலைகளில் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்களிடையே "அன்பு" எனும் பரிணாம எண்ணக்கரு வளரும் என்பதை அடிக்கடிகு கூறிக் கொள்பவர். அந்த வகையில் ஒரு சிறந்த ஆளுமை மிக்க நிர்வாகியாக செயற்பட்டு தன்னுடைய காலத்தில் உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் வளர்ச்சியில் மகிழ்வைக் கண்டவர்.


அந்த வகையில் அமரரின் சைவசமய, தமிழ்ப் பாரம்பரியம் வளரவும் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி !!

மு.செல்வஸ்தான்
செயலாளர்
உடுவில் கல்விக் கோட்டம்
அதிபர் யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னாரின் குடும்ப உபயமான
வற்றாக்கை அம்மன்
தேர்த்திருவிழாவின் போது

2003இல் ஓய்வுபெறுமுன் அதிபர்களுடன் எடுத்துக் கொண்ட புகைப்படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைவத் திருமகனுக்கு எம் இதய அஞ்சலி

பல வருடங்களுக்கு முன்னர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கோலத்தில் அறியப்பட்டவர் பிற்காலத்தில் நான் அறிந்த சங்கானை, உடுவில் கல்விக் கோட்டங்களின் பணிப்பாளராகி ஓய்வு பெற்ற அமரர் தற்பரானந்தன் ஐயா என்பதை நினைக்கும் போது இன்றும் கல்விச் சமூகத்தின் மத்தியில் அவர் நிலைத்து நிற்பதை உணர்கின்றேன். கணீர் என்ற குரலும் தான். நினைத்ததைத் துணிந்து திறம்படச் சொல்லும் ஆற்றலும் அவருக்கே தனித்துவமானது.

வலிகாமம் வலயத்தில் நான் கடமை ஏற்ற காலம் முதல் அவரோடு தொடர்பு கொண்டு பழகிய நாட்கள் பல. அமரர் பணியாற்றிய கல்விக் கோட்டங்களில் அவருடைய பணிக்காலத்தில் அவர் அமரத்துவ மெய்திய செய்தியை நம்ப மறுத்தது. கல்விக்கான அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் சமய, சமூக தமிழ்ப்பணிகளில் அவரது சேவை தொடர்ந்ததை யாழ்ப்பாண மக்கள் பலரும் அறிவர். அவரது வாழ்நாளில் தமிழ்ப்பண்பாட்டுடன் தமிழையும் சைவத்தையும் பெற்றோரை மதிப்பது போல கனம் பண்ணித் தனது கடமைகளைச் செயற்படுத்திய பாங்கு தமிழ்ச் சமூகத்திற்கு அவர் உதாரண புருஷன் என்பதை விளம்பிநின்றது. இளம் சமுதாயத்தில் விசேடமாக சைவப் பிள்ளைகளிடத்தில் சமய நம்பிக்கை, சமய அனுட்டானங்களை அனுட்டித்தல், அறநெறி ஒழுக்கம் என்பன அருகிச் செல்லாமல் நிலைத்திருக்க வேண்டும். என்ற உயரிய நோக்குடன் சங்கானைக்கல்விக் கோட்டப்பாடசாலை மாணவர்களிடையே பண்ணிசை, பேச்சு, கதாப்பிரசங்கம், புரானப்படலம் தொண்டுபட செயற்றிறன் போட்டிகளை நடாத்தி சைவத்திருமுறை விழாக் கொண்டாடும் செயற்பாட்டை அறிமுகப்படுத்திய பெருமை அமரர் தற்பரானந்தன் ஐயாவுக்கே உரியது. சங்கானை உடுவிற் கல்விக் கோட்டங்களில் அவரது வழிகாட்டலின் படி இன்னும் வருடந்தோறும் சைவத்திருமுறை விழா நடை பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது எப்படி மாறினும் தான் விரும்பிய பொதுப் பணிகளில் தனது ஈடுபாட்டை அதி உச்ச நிலையில் தக்கவைத்து அனைவரது பார்வையையும் தன்பால் ஈர்த்த தற்பராந்தன் ஐயா அவர்கள் இயற்கை எய்திய செய்தி மிகுந்த கவலை அளிப்பதாகும்.

இயற்கை நியதியை வெல்லுவார் யார்? அமரரின் ஆத்மா பராபரன் பாதம் பெற இறைஞ்சித் துயருற்றிருக்கும் அவரது மனைவி, சகோதரர், உறவினர்களுக்கு ஆறுதல் கூறி அமைதி பெறுவோமாக.

"ஓம் சாந்தி"

வே.சிவசுந்தரம்
அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி
தலைவர், அதிபர்சங்கம், சங்கானைக் கோட்டம்

## நற்சிந்தனை

- இவ் உலகம் கோழைகளுக்கல்ல ஓட முயலாதே வெற்றியையோ தோல்வியையோ எதிர்பார்க்காதே
- யாருடைய நம்பிக்கையையும் குலைக்க முயலாதே இயலுமானால் அவருக்கு அதைவிட மேலான ஒன்றைக்கொடு
- நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவன் எல்லாம் வல்லவன் நீ.
- இன்பம் மனிதன் முன் தேன்றும் போது தனது தலைமீது துன்ப முடியைச் சூடி வருகின்றது.
- பிறரிடம் உள்ள தீய நன்மைகளை எண்ண வேண்டாம் அது அறிவின்மையும் தளர்ச்சியும் ஆகும்.
- செல்வந்தர்களை வழிபடத்தொடங்கும் நாள் முதலே ஒரு சமயத்தில் கேடு ஆரம்பிக்கப்படுகின்றது.
- நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல்
- நீ உறுதியுன் இருந்தால் பாம்பின் விஷம் கூடச் சக்தியற்றதாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். அப்புத்துரை தற்பரானந்தன் அவர்களுக்கு காங்கேசன் துறை மாவட்ட சாரணர் கிளை சங்கத்தின் இதய அபூர்வ அஞ்சலி

**தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று**

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப தோன்றிய பெருந்தகை தான் அமரர் தற்பரானந்தன் அவர்கள். இவர் தான் வாழ்ந்த சமூகத்திற்கு மட்டும் அல்லாது முழுக் கல்வி உலகிற்கும் சேவையாற்றிய பெருந்தகை.

இவரது உயரிய சேவையால், ஆசிரியராய், அதிபராய், கோட்டக்கல்விப்பணிப்பாளராய் எனப் பல பதவிகளை வலிகாமம் கல்வி வலயத்தில் அலங்கரித்தமை அன்னாரது சிறந்த சேவைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக சாரணியர் சேவையில் தன்னை இணைத்துக் கொண்டு அதிபராய் இருந்த காலத்தில் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் குருளைச் சாரணர் தலைவனாக இருந்து அப் பாடசாலையில் குருளைச் சாரணர் பிரிவை முதன் முதலாக ஆரம்பித்த பெருமைக்குரியவர் ஆவார்.

தொடர்ந்து அப்பாடசாலையில் குருளைச் சாரணர் மட்டுமல்லாது சாரணர் பிரிவையும் ஆரம்பித்து வெற்றிகண்டவர். இவர்களுக்குப் போதிய பயிற்சிகளை வழங்கி பல்வேறு நிகழ்வுகள், பாசறையில் பங்கு கொள்ள வைப்பதில் ஆர்வம்காட்டி வந்தவர்.

அதன் பின் எமது காங்கேசன் துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் 1999 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் இருந்து தலைவராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

இவர் தலைவராக இருந்த காலத்தில் கிளைச்சங்கத்தை சீரிய முறையில் வழிநடத்தியது மட்டுமல்லாது சாரணிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற 20 ஆவது மாவட்ட மிலேனியம் கம்போரியும், கப்போரியும் வருடாந்த சாரணர் பாசறை விழாவும், குருளை சாரணர் வெளிக்கள நாள் நிகழ்வைத் தலைமை தாங்கி நடாத்தி எமது மாவட்டத்தைப் பெருமைப்படுத்தியவர் என்றால் மிகையாகாது. அதே போன்று 2001 ஆம் ஆண்டு யாழ் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வையும் தலைமை தாங்கி நடாத்திய பெருமை அன்னாரையே சாரும்.

இவரது சாரண சேவையை கௌரவித்து எமது மாவட்டம் 27 வது சாரணர் பாசறை விழாவில் மாவட்டத்தின் நன்றி விருது வழங்கியது.

எமது மாவட்டத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து சாரணர்களையும், சாரணத் தலைவர்களையும், ஊக்குவிக்கின்றமை அவரிடம் காணப்பட்ட சிறப்பான குணாம்சமாகும். இந்த வகையில் எமது சாரணர் மாவட்ட பல இன்னோரென்ன செயற்பாடுகளை மேற்கொண்டு இலங்கைச் சாரணர் சங்கத்தில் சிறந்த மாவட்டமாகத் திகழ வழி வகுத்தார்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற வள்ளுவனின் வாக்கிற்கேற்ப இவ் வையத்தில் கல்விப் பணிக்காக மட்டுமல்லாது சாரணிய சேவைக்காகவும் பற்பல சேவைகளைப் புரிந்து வாழ்வாங்கு வாழ்ந்த பெருந்தகை என்றென்றும் வானுறையும் தெய்வத்தின் நிழற் பாதங்களில் வாழ்வார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அனைத்து நெஞ்சங்களிற்கும் எமது உளம் நெகிழ்ந்த ஆறுதலை தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

காங்கேசன் துறை மாவட்ட சாரணர்
கிளைச்சங்க உறுப்பினர்கள் சார்பில்
திரு.ந.இரவீந்திரன்
மாவட்ட சாரண ஆணையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயல் வீரர் அ. தற்பரானந்தன் அவர்கள்

திரு.அ.தற்பரானந்தன் அவர்களின் திடீர் மறைவு அவரின் உறவினர், நண்பர்களுக்கு மட்டுமன்றி தமிழ், சைவ சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.

ஆசிரியராக அதிபராக கோட்டக்கல்வி அதிகாரியாக அவர் கல்வித்துறையில் ஆற்றிய பணிகள் பல. அவர் பிறந்த ஊரான கந்தரோடையில் அமைந்துள்ள தமிழ்க்கந்தையா வித்தியாசாலை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி என்பவற்றில் மட்டுமன்றி கொழும்பு மாநகர் உட்பட பல இடங்களில் அவர் பணி புரிந்து மாணாக்கர் பலரை உருவாக்கியுள்ளார். அவரின் மாணாக்கர்களிற் பலர் பல் துறைகளிலும் பாண்டித்தீயம் பெற்று உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் புரிந்து வருகின்றனர்.

கல்விப் பணியில் மட்டுமன்றி சமூகப் பணியிலும் திரு.தற்பரானந்தன் அவர்கள் முன்னின்று செயலாற்றியுள்ளார். பல்வேறு சங்கங்கள், சபாக்ககள் அபிவிருத்திச் சங்கங்களில் முக்கிய உறுப்பினராகவிருத்து அவர் பணியாற்றியுள்ளார். வட இலங்கை சங்கீத சபை, சைவவித்தியா விருத்திச் சங்கம் என்பவற்றினூடாக அவர் ஆற்றிய சேவைகள் பல.

தமிழ் மொழியையும், சைவ சமயத்தையும் திரு.தற்பராகந்தன் அவர்கள் தம்மிரு கண்ணிலும் மேலாகப் போற்றி வாழ்ந்தார். அவர் சிறந்ததொரு பேச்சாளாரக போற்றி வாழ்ந்தார். அவர் சிறந்ததொரு பேச்சாளராக பிரசங்கியாகவும், விளங்கியுள்ளார். சைவச் சிறார்களுக்கு தேவார திருவாசகம் புராணபடனங்களை அட்சர சுத்தமாகச் சொல்லிக் கொடுப்பதிலும், ஆலய வழிபாட்டை முறைப்படி பின்பற்ற வைப்பதிலும் அவர் முன்னுரிமை கொடுத்து வழி நடாத்தி வந்தார். என்றே கூறலாம்.

வட இலங்கையின் முதல் இராசதானியான தாம் பிறந்த ஊரான கந்தரோடையை அவர் மிகவும் நேசித்தார். வற்றாக்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாழ் விசாலாட்சியம்பாள் சமேத விஸ்வநாத சுவாமியை என்றும் இதய கமலத்தில் நிறுத்திப் பூசித்து வந்தார்.

நல்லாசிரியராக தமிழபிமானியாக சைவாபிமானியாக ஊர்ப் பற்றாளராக, நல்லவராக பலருக்கு வழிகாட்டியாக வாழ்ந்து இறைபதம் சேர்ந்த அமரர் திரு. அ.தற்பரானந்தன் அவர்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**Dr.**சேதுமாதவ ஐயர்
சிவசண்முகராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சித்த மருத்துவத்துறை யாழ் பல்கலைக்கழகம்

**பொது அறிவுகள்**

*01.* தேசியக் கொடி இல்லாத நாடு - மாசிடோனியா
*02.* தேசிய இனம் இல்லாத நாடு - இங்கிலாந்து, வத்திக்கான்
*03.* உத்திர வேதம் - திருக்குறள்
*04.* கார்களிற்கு பதிவு எண் முறையை அறிமுகம் செய்த நாடு - பிரான்ஸ்
*05.* மிக விரைவில் ஆவியாக் கூடிய திரவம் - ஆல்கஹால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாகப் பங்குகொண்ட வைபவம் 11.03.2012இல்
வடஇலங்கை சங்கீதசபையின் செயலாளராகப் பட்டமளிப்பு விழாவின்போது
விருந்தினர்களை வரவேற்கின்றார்



அன்னாரின் இறுதியாத்திரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் இனியவர்

திரு.தற்பரானந்தன் அவர்களுடன் பழகக் கிடைத்த வாய்ப்பை எண்ணி மகிழ்கிறேன் 1977 ஜனவரி முதலாந் திகதி நான் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பணியாற்றச் சென்றபோது ஆரம்பித்த உறவு.

என் மணப்பந்தலில் இருந்து பார்க்கும் போது அவர் அமர்ந்திருந்த இடத்தில்லிருந்து இறுதியாக என் வீட்டுக்கு அவர் வந்தபோது என்னுடன் பேசிய பேச்சு வரை நன்றாக நினைவில் இருகின்றன. ஸ்கந்தாவில் என் திருமணவரவேற்பு நடந்த வேளை ஆசிரியர் மன்றச் செயலாளராக அவர் கல்லூரி வாசலில் எங்களை வரவேற்ற காட்சி அடிக்கடி என் நினைவில் வரும்

என் பிள்ளைகளுக்கு கல்வியில் நல்ல அத்திவாரம் வேண்டும் என்று தமிழ் கந்தையா வித்தியாசாலையில் அவரிடம் ஒப்படைத்திருந்தேன் பிறகு ஆறாம் வகுப்பில்என் கல்லூரியிலேயே அவர்கள் படிக்கட்டும் என அவரின் சம்மதத்துடன் ஸ்கந்தவிரோதயக் கல்லூரியில் சேர்த்தேன் அவரும் பிரதியதிபராக அங்கே வந்தார். தனிப்பட்ட முறையிலும் தொழில் முறையிலும் எம் உறவு வளர்ந்தது, பிரச்சினைகளைக் கையாள்வதில் எமது வழிகள் வேறுபடுவதுண்டு ஆனால் கருத்து வேறுபாடுகள் மோதல்களானதில்லை பெருந்தன்மையாக நடந்து கொண்டபோதிலும் தமது கொள்கைகளை அவர் எக்காலத்திலும் விட்டுக்கொடுத்ததில்லை பல விடயங்களில் தீவிரமான கருத்துகளைக் கொண்டிருந்தார் அவருடைய அர்ப்பணிப்புடன் கூடிய சிறந்த கல்விச்சேவை அனைவரும் அறிந்ததே. ஆனால் கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுக்கும் அவருடைய ஈகை பலரும் அறிந்ததன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் வாட்டிய போதும் சிதம்பரம் சென்று வந்திருக்கிறார் தமது. இறுதி நாளுக்கு கேதீஸ் வரம் சென்று வழிபட்டு வந்தமை மகிழ்வையே தருகின்றது.

கேலியும் சிரிப்புமாக வாழ்ந்தவர் அவற்றைக் கைவிடாமலே, தமது ஓர்மத்தையும் இழக்காமல் வாழ்ந்து முடித்தமை வியப்புக்குரியதே

இறையருளால் சுன்னாகத்தில் என்னை இறுதியாகச் சந்தித்த போது 7, 8 முறை போட்டு வாறன் என்று கூறிப் பிரியாவிடை பெற்றார். ஒரு பிரிய அண்ணன் பிரிந்த உணர்வு எனக்கு. கண்களில் நீர் நிறைந்தாலும் பெருமிதம் எழுகிறது என்னுள்ளே, அவரை நேசித்த உள்ளங்களுள் இன்று கவலை இருக்கும் ஆனால் காலப் போக்கில் பெருமித எண்ணங்களே மனதில் எஞ்சும். தோன்றத் துணையாய் அவர் உங்களுக்கு உதவப் பிரார்த்திக்கின்றேன்.

வி.இலட்சுமணன்
ஓய்வு பெற்ற பிரதி அதிபர்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித் தொண்டாற்றிய பரம்பரையில் உதித்த தனக்கென வாழா பிறர்க்குரியாளன்

வரலாற்றுப் பெருமை மிக்க கந்தரோடை என்னும் கிராமம் ஒரு காலத்தில் இராசதானியாக விளங்கியது. இங்குள்ள மக்கள் அனைவரும் இந்து சமயத்தவர்கள். இவர்களின் பண்பாடு சமயம் வளர உத்தம சீலர்களும் சமய ஆர்வலர்களும் நிலச்சுவாந்தர்களும் சேர்ந்து ஆலயம் ஒன்றை அமைத்தனர். அதற்கு வற்றாக்கை விசாலாட்சி அம்மன் ஆலயம் எனப் பெயரிட்டனர்.

அவர்களின் பரம்பரையில் உதித்தவரே திரு.அம்பலவாணர் கந்தையா அவர்கள். அவர் கல்வி கற்க வேண்டும் என்று சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை கற்றார். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலக் கல்வியை கற்றார். நிலச்சுவாந்தர் ஆகிய இவர் கந்தரோடையில் பாடசாலை அமைக்க வேண்டும். இங்குள்ள மக்களும் கல்வி அறிவுள்ளவர்களாக வளர வேண்டும் என்ற அவா மேலோங்க, 1893ம் வருடம் தனது காணியில் ஓர் பாடசாலையை அமைத்தார். தானே ஆசிரியராகவும் பணியாற்றினார். இப் பாடசாலைக்கு கந்தரோடை தமிழ்க் கலவன் பாடசாலை என்று பெயர் சூட்டினார்.

1900ம் ஆண்டு கந்தரோடையில் வாழ்ந்த சின்னத்தம்பி சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகள் தெய்வானைப் பிள்ளையைத் திருமணம் செய்தார். அவர் இக்கிராமத்தின் வளர்ச்சிக்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் அயராது உழைத்தார். வருடங்கள் செல்லச் செல்ல குழந்தை இல்லாத கவலை மேலோங்கியது. இலங்கையிலும் இந்தியாவிலும் பல திருத்தலங்களுக்கு சென்று இறுதியில் இராமேஸ்வரம் சென்று சேது தீர்த்தமாடி இராமேஸ்வரம் ஆலயப் பெருமானைத் தரிசித்து நாடு திரும்பினார். இறையருளால் 1926ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ம் திகதி ஓர் பெண்குழந்தை பிறந்தது. சேது தீர்த்தமாடி உதித்த குழந்தைக்கு சேது நாயகி என்று பெயரிட்டனர். இவர் உரிய காலத்தில் கந்தரோடை தமிழ்க்கலவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் கல்வி கற்றார். ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போதே தாயை இழந்து விட்டார். ஆதனால் சிறிய தாயாரின் அரவணைப்பில் சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலையில் கல்வி கற்றார். ஒரு வருடத்தின் பின்னர் தந்தையாருடன் வந்து கந்தரோடை தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்.

இவர் திருமணப் பருவத்தை அடைந்ததும் இருபாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி- தங்க முத்துப்பிள்ளை தம்பதியினரின் மகனும் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் கணக்காளருமாகிய அப்புத்துரை அவர்களை 1942ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன*
*நன்கலம் நன் மக்கட் பேறு*

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க தற்பரானந்தன், நித்தியானந்தன், சர்வானந்தன், குலகுணராணி, குலகுணசக்தி, தேவானந்தன் ஆகிய மக்கட் செல்வங்களைப் பெற்றனர். பேரப்பிள்ளைகளைப் பார்த்து அளவு கடந்த சந்தோசம் அடைந்தார் கந்தையா உபாத்தியாயர் அவர்கள்.

இக்குழந்தைகள் எல்லோரும் ஆரம்பக் கல்வியை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையிலும் பின்னர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் கற்றனர். 1951ம் ஆண்டு ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாயர் அவர்கள் காலமானார். அவர் ஸ்தாபித்த பாடசாலைக்கு மாணவர்களும், பாடசாலைச் சமூகமும் சேர்ந்து கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை எனப் பெயரை மாற்றி அமைத்தனர். தினமும் அவர் நாமத்தை மறவாதிருக்க அவர் வீட்டுக்கு அருகாமையிலிருந்து பாடசாலை வழியாகச் செல்லும் வீதிக்கும் கந்தையா உபாத்தியாயர் வீதி எனப் பெயரிட்டுத் தங்கள் நன்றியை தெரிவித்தனர்.

மாமனார் அமரர் ஆகிய பின்னர் திரு. அப்புத்துரை அவர்கள் தமிழ்க் கந்தையா வித்தியாசாலை முகாமையாளராகி கல்விப் பணியை மேலும் சிறப்பிக்கச் செய்தார் பாடசாலைக்கு அருகாமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த 5 பரப்புக் காணியை வாங்கி கனிஷ்ட தராதரம் வரை இருந்த பாடசாலையை 1953ம் ஆண்டு க.பொ.த.சா வரை உயர வைத்தார். 1956ம் ஆண்டு சித்திரை விடுமுறையின் போது பகல் நேரத்திலேயே பாடசாலையின் இரண்டு ஓலைக் கட்டிடங்கள் எரிந்து சாம்பலாகின. மிகவும் வேதனையிலும் மனம் தளராமல் பாடசாலை விடுமுறை ஆரம்பிக்க முன்னர் இரு தற்காலிக கட்டடங்களை அமைத்து மாணவர்களின் கல்வி தடைப்படாது செயற்பட்டார். அதனைத் தொடர்ந்து 100 அடி நிளமான 5 வகுப்பறைகள் கொண்ட கட்டடத்தையும் கட்டி வைத்தார்.

1960ம் ஆண்டு திரு. தற்பரானந்தன் அவர்கள் எழுது வினைஞர் பரீட்சையில் சித்தியடைந்து கட்டட நிர்மாணப் பகுதிக்கு நியமனம் பெற்ற போதும் அதை ஏற்க மனமின்றி தந்தையார் விரும்பியபடி தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்றார். அதே காலத்தில் க.பொ.த சித்தியடைந்த கந்தரோடை மாணவர்கள் சிலரை திரு. அப்புத்துரை அவர்கள் ஆசிரியாக நியமித்தார். திரு. தற்பரானந்தன் அவர்கள் இரண்டு வருடம் கழித்து வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அங்கிருந்து அவர் ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவாகிப் படித்துப் பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி வெளி மாவட்டங்களில் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1978ம் ஆண்டு தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் 1ம் தர அதிபராக கடமையைப் பொறுப்பேற்று திறம்பட நடாத்தினார்.

திரு. அப்புத்துரை ஆசிரியராக நியமித்த ஆசிரியர்களும், ஆசிரிய கலாசாலைக்கு தெரிவாகி பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக வெளியேறி வெளி மாவட்டங்களில் கற்பித்துப் பின்பு யாழ் மாவட்டத்தில் ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் கற்பித்து ஓய்வு பெற்றனர்.

இவரது சகோதரர்களான நித்தியானந்தன் கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரி, தியத்தலாவை நில அளவைப் பயிற்சிக் கல்லாரி ஆகியவற்றில் பயிற்சி பெற்று நில அளவையாளராகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றி வருகிறார். சர்வானந்தன் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்றுச் சித்தியடைந்த பின் காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையில் கடமையாற்றினார். இளைய சகோதரன் தேவானந்தன் ஸ்கந்தரோயக் கல்லூரி, யாழ்பாணம் இந்து கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்று பேராதனைப் பல்கலைக்கழக பொயிறியல் பீட மாணவனாக தெரிவு செய்யப்பட்டார். அதே காலத்தில் ரஷ்யாவிலுள்ள பற்றிஸ்லும்பா பல்கலைக்கழகத்துக்கும் தெரிவு செய்யப்பட்டதனால் அங்கேயே தனது கல்வியைத் தொடந்தார். இறுதிப் பரீட்சையில் முதற்பிரிவில் சித்தியடைந்து பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டபின் திடீரென நோய்வாய்ப்பட்டு நண்பர்கள் உதவியுடன் கொழும்பு வந்து சேர்ந்தார். ஆனாலும் சிகிச்சை பலனளிக்காமல் மரணத்தை எய்தினார்.

தமிழ் கந்தையா வித்தியாசாலையில் சில 1978ம் ஆண்டு திரு. தற்பரானந்தன் அவர்கள் அதிபராக பொறுப்பேற்ற பின்னர் பலவிதமான முன்னேற்றங்கள் நிகழ்ந்தன. தற்காலிகமாக இருந்த கட்டடங்கள் நிரந்தரக் கட்டடங்களாயின. ஓர் மேல் மாடிக் கட்டிடம் கட்டப்பட்டது. நன்னீர் சேமித்து வைப்பதற்கு பெரிய தொட்டி, மேலதிக கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டன. விளையாட்டு மைதானம் விசாலாமாக்கப்பட்டது. அதற்கு அருகாமையில் இருந்த காணியை பழைய மாணவி தனலஷ்மி என்பவர் உபயமாக கொடுத்து உதவினார். பாடசாலை பெற்றோர் தின விழா , வேறு கலைவிழாக்கள் என்பன நடத்துவதற்காக வெளியில் பெரிய மேடை அமைக்கப்பட்டது. பாடசாலை முகப்பு மதில் கட்டப்பட்டது. பாடசாலைக்கு தேவையான வசதிகள் எல்லாம் செய்யப்பட்டன.

இக்காலத்தில் கருகம்பனையைச் சேர்ந்த சோதி. நாகரத்தினம்- மாமாங்கம் தம்பதியின் மகளும் விஞ்ஞான விசேட பயிற்சி பெற்ற ஆசிரியையுமான நகுலாம்பிகா தேவியை பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். இடையில் சிறிது காலம் கனிஷ்ட பாடசாலையாக இயங்கியவிடத்து மீண்டும் இவரது முயற்சியால் 1986ம் ஆண்டு தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் ஆறாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆறாம் வகுப்பு ஆரம்பமானவுடன் எல்லாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களுக்கும் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

திருமதி. நகுலாம்பிகை-தற்பரானந்தன் விஞ்ஞான ஆசிரியராக நியமிக்கப்பட்டார். எல்லா ஆசிரியர்களும் பாடசாலை வளர்ச்சியில் மிகவும் அக்கறை செலுத்தினர். தத்தமது பாடங்களில் மாணவர்கள் திறமைச்சித்தியடைய வேண்டும் என்ற நோக்கத்தில் ஆசிரியர்கள் மேலதிக வகுப்புகள் நடத்தினர். 1990ம் ஆண்டு நாட்டு நிலை காரணமாக பரீட்சை நடைபெறவில்லை 1991ம் ஆண்டு மாணவர்களும் 1990ம் ஆண்டு மாணவர்களும் ஒன்றாகவே 1991ம் ஆண்டு பரீட்சை எழுதினர். அனேக மாணவர்கள் திறமைச்சித்தியெய்தினர். இவர்கள் க.பொ.த உயர்தர வகுப்பை யாழ் நகரிலுள்ள பாடசாலைகளில் கற்று திறமைச் சித்தியடைந்து டாக்டர்களாகவும், பொறியியலாளராகவும் தொழில் நுட்பவியலாளர்களாகவும் ஆசிரியர்களாகவும் வேறும் பல உத்தியோகங்களிலும் சிறந்து விளங்குகின்றனர்.

அதிபர் தற்பரானந்தன் அவர்கள் 1991ம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். தமிழ்க் கந்தையா வித்தியாசாலைக்கு அதிபரின் இரண்டாவது சகோதரியின் கணவரும் விவசாயச் சிறப்புப் பயிற்சி பெற்றவரும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் M.A பட்டதாரியுமான திரு. செல்வக்குமாரன அவர்கள் அதிபரானர். தொடர்ந்து அவரும் பாடசாலையைத் திறம்பட நிர்வகித்தார். தற்போது திரு செல்வக்குமாரன் அவர்களும், திருமதி நகுலாம்பிகை-தற்பரானந்தன் அவர்களும் ஓய்வு பெற்று விட்டனர். திரு செல்வக்குமாரன் ஓய்வு பெற்ற பின்னர் நடராஜா ஐயாவின் மகன் சசிகுமார் ஐயா அவர்கள் அதிபராக கடமையாற்றி வருகிறார். திரு. அப்புதுரை அவர்களின் ( மூத்த மகளின் மகள்) பேத்தி விஸ்வநாதன் குமுதினியும் இப்பாடசாலையிலேயே ஆசிரியராக இருக்கின்றார். அதிபர் தற்பரானந்தன் அவர்கள் தமிழ் கந்தையா வித்தியாசாலை அதிபராகவும், ஸ்கந்தவரோதய கல்லூரி பிரதி அதிபராகவும், தெல்லிபல்லை சங்காணைக் கல்விக் கோட்டங்களின் உதவி கல்வி பணிப்பாளராகவும் சங்காணை உடுவில் கோட்ட பணிப்பாளராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவித உயரிய பதவிகளை வகித்து 2003ம் ஆண்டு ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்னர் சைவவித்தியா விருத்தி சங்கத்தின் தலைவர் பதவியை ஏற்று அதன் வளர்ச்சிகாக அயராது பணியாற்றினார். இதே வேளை வடஇலங்கை சங்கீத சபை செயலாளர் பதவியை வகித்து இன்னும் பல பொது நிறுவனங்களின் இணைந்தும் இறுதிவரை பணியாற்றினார்.

**'பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கலின் நன்மை கடலிற் பெரிது'**

எனும் வள்ளுவர் வாக்கிற்கு அமைய என்கடன் பணி செய்து கிடப்பதே உயிருள்ளவரை எல்லோருக்கு உதவ வேண்டும் என்பதே அவரது தூய நோக்கம். தனக்குள்ள நோய்களையும் மற்றவர்களுக்கு வெளிக்காட்டாது எல்லோருக்கும் உதவிசெய்வார். கொழும்புக்கு வைத்தியத்திற்கு சென்றவர், உறவினர்கள் யாவரையும் பார்த்து திரும்பும் வழியில் திருக்கேதிஸ்வரப் பெருமானையும் தரிசித்துவிட்டு தனது சகோதரனையும் இறுதியாகப் பார்த்துவிட்டு கந்தரோடை அருளானந்தப் பிள்ளையாரை தேரில் வைத்து தரிசிக்க வேண்டும் என்ற ஆசையில் வந்தார் ஆனால் அருளானந்தப் பிள்ளையாரோ நீ எமது கடமையெல்லாம் செய்து விட்டாய் ஆறுதலாக இரண்டு நாட்கள் நிம்மதியாக இரு என்று படுக்க வைத்துவிட்டார். கொழும்பு சென்ற திருமதி தற்பரானந்தன் வரும்வரை காத்திருந்து அதன்பின் இறைவனடி சேர்ந்தார். இவர் சக ஆசிரியர்கள், மாணவர்களுடன் மட்டுமின்றி ஊரவர்கள், பொதுமக்களுடனும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் பழகுவார். இவரிடம் யாராவது ஏதாவது உதவி கேட்டால் அதை தனது வேலையாக நினைத்து மிகவும் சிரத்தையோடு அதைச் செய்து கொடுப்பார். இவருடைய இழப்பு பாடசாலைக்கும் கந்தரோடை மக்களுக்கும் நண்பர்களுக்கும் பேரிழப்பாகும். இவ்விழப்பை எவராலும் ஈடு செய்து கொள்ள முடியாது. இவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமுமாற்றலரிது'

கல்விப்பணிக்கும் பொதுப்பணிக்கும் அவர் ஆற்றிய உதவிகள் அளப்பரியன, அவருடைய இழப்பால் துயறுற்றிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்
திருமதி.இரஞ்சிதமலர் சின்னப்பா
ஓய்வு பெற்ற பிரதி அதிபர்
கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம். (கனடா)

**சிந்தனைக்கு சில வரிகள் ....**

- ✡ மனிதனுக்கு பற்றுதலால் விருப்பமும் விருப்பத்தால் சினமும் சினத்தால் மயக்கமும் மயக்கத்தால் புத்தி நாசமும் அழிவும் ஏற்படுகின்றன.
- ✡ சாவது அவ்வளவு துன்பம் அல்ல சாவது போல் பயப்படுவது தான் துன்பம்
- ✡ சத்தியத்திற்காகச் சாகத் துணிந்து விட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தை படைக்க முடியும்.
- ✡ மனிதர்கள் உயிரோடு இருக்கும் வரையில் அவர்களுடைய மதிப்புத் தெரிவதில்லை
- ✡ பெருமைக்குரிய செயலை ஒருவன் செய்கின்றான் என்றால் அவன் இறந்த பிறகும் வாழ்வதற்கு தயாராகின்றான் என்பதாகும்.
- ✡ உலகில் உயிரோடு வாழ்வது மட்டும் வாழ்க்கையில்லை உயரிய கொள்கைகளுக்காக மடிவதிலும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிய நண்பர் தற்பர்

1960 ஆம் ஆண்டு ஜனவரி 18 ஆம் திகதி எனது வாழ்வில் மறக்க முடியாத தினமாகும். கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் முதல் ஆசிரிய நியமனம் பெற்ற நாளாகும். அன்றிலிருந்து எனது இனிய நண்பர் "தற்பர்" என்னை "அதிஷ்டசாலி" என்று அழைத்து வந்தார்.

எமது கல்வி கண் திறந்த இப்பாடசாலையில் இரு ஆசிரிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் இருந்த வேளையில் பலர் விண்ணப்பித்தனர். யானும் ஒருவன் அன்பு நண்பன் தற்பர் அவர்களின் தந்தையார் அமரர்.S.M அப்புத்துரை அவர்களே அன்றைய முகாமையாளராக இருந்தார். இவர் தனது சாதுரியமான செயற்பாட்டினால் அதிஷ்டச் சீட்டிழுப்பு மூலம் யானும் எனது நண்பர் அருளையா அவர்களும் தெரிவாகி நியமனங்களைப் பெற்றோம். இதனாலன்றோ தற்பர் என்னை அதிஷ்டசாலி என்று அழைத்தார் போலும்.

தனது பேரனால் தாபிக்கப்பட்ட பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு உழைத்து அதன் முன்னேற்றத்தையும் கண்டு மகிழ்ந்தார். இங்கு அதிபராக இருந்து பின்னர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அவரும் யானும் இணைப்பிரதி அதிபர்களாக இருந்தோம். பின்னர் இவர் கோட்டக்கல்விப் பணிப்பாளராக இருந்து பலரதும் பராட்டுதல்களைப் பெற்று இளைப்பாறினார்.

"தற்பர்" எனது முன் வீட்டுக்காரர் இவர் தினமும் இரவு பதினொரு மணியளவில் தாய் மற்றும் சகோதர சகோதரியுடன் அளவளாவி விட்டுத் தனது மோட்டார் சைக்கிளில் வீடு செல்வது வழக்கம் இது. இவரின் தாய்ப்பாசம் சகோதரப் பாசம் மற்றும் பிறந்த வீட்டுப் பற்று என்பவற்றைக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக நோயுற்ற வேளையில் எனது மகன் ஆதவன் தன்னாலான மருத்துவ சேவைகளை இவருக்குச் செய்தார் இதனால் இவர் பெரும் ஆறுதலடைந்தார் என்பதை யான் நன்குணர்ந்தேன். ஆரம்ப காலங்களில் இருந்தது போலவே தனது இறுதிக் காலத்திலும் என்னுடன் அன்பொழுகப் பேசி வந்தார். இன்றும் இவர் உயிருடன் இருப்பவராகவே யான் மானசீகமாகக் காண்கின்றோம்.

நோயுற்ற போதும் சிதம்பரம் சென்று நடராஜப் பெருமானை வணங்கி வந்தார். இறுதியாகத் திருக்கேதீஸ்வரப் பெருமானையும் தரிசித்து ஆத்ம திருப்தி கொண்டார். "எல்லாம் எப்பவோ முடிந்த விடயம்" என்றதற்கமைய தற்பரின் வாழ்வும் நிறைவு பெற்றது.

அமரர் தற்பரானந்தரின் மனைவி மற்றும் குடும்ப உறவினர் அனைவருக்கும் இறைவன் அமைதியைக் கொடுக்க வேண்டி அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கனக. புவனேந்திரநாதன்
ஓய்வு நிலை அதிபர்
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
கந்தரோடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னிகரற்ற ஒரு தலைமை ஆசான்

மண்ணிலே தோன்றி, மண்ணிலே பயணித்து மண்ணிலே மறைவது தான் மனித வாழ்விவில் காலங்காலமாக மாற்ற முடியாத ஓர் உண்மை. இந்தப் பயணத்திலே ஒரு சிலரே தமது சுவடுகளைப்பதித்துச் செல்கின்றனர். அவர்களது வாழ்க்கையும், அர்ப்பணிப்புகளும் எல்லோர் மனதிலும் நீங்காத இடம் பெற்று விடுகின்றன. அந்த வகையில் எங்கள் அன்புக்குரிய அமரர்.திரு.அ.தற்பரானந்தன் அவர்கள் எத்தனையோ உள்ளங்களில் பதிந்து விட்ட ஓர் உயரிய தலைமை ஆசான். கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை என்றவுடன் எல்லோர் மனதிலும் உதிப்பது எங்கள் சேரின் முகம் தான். பாட அறிவுக்கு மட்டுமன்றி ஆத்மீக அறிவுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார். இவரது கண்டிப்பான தலைமைத்துவத்திலே விண்ணைத் தொட்டவர் பலர்.

இவர் அதிபராக இருந்த போது கேடில் விழுச் செல்வமான கல்வியையும், பிறவிப் பெருங்கடலையும் கடக்க வைக்கும் இறை உணர்வையும் ஒன்றாகப் பல பிஞ்சு மனங்களிலே விதைத்தவர். இன்று அவை பெருவிருட்சங்களாகி உலகின் எல்லா மூலைகளிலும் வேரோடியிருப்பது அதற்குச் சான்று. இரவு பகல் என நேரம் பாராது தமிழ்க் கந்தையா வித்தியாசாலையை ஓர் உயரிய கல்விப் பீடமாக்க அயராது உழைத்து அதில் வெற்றியும் கண்டவர். அன்னாரது உழைப்பிலே உயர்ந்து பள்ளிக்கூடம் மட்டுமன்றிப் பலநூறு வருடங்கள பழமை வாய்ந்த கந்தரோடையும் தான். கந்தரோடை மண்ணில் தோன்றிய குருத்துக்கள் இன்று பல துறைகளிலும் சிறந்து விளங்க ஆரம்ப நாளிலேயே அத்திவாரம் இட்டவர் அமரராகி விட்ட எங்கள் ஆசான்.

வசதி குறைந்த பாடசாலையாக இருந்த எங்கள் தமிழ்ப் பள்ளிக் கூடத்தில் தனது அசதி பார்க்காது பல அரிய மாணவர்களை உருவாக்கி, தலைமை ஆசான்களுக்கெல்லாம் ஒரு முன்னு தாரணமாகத் திகழ்பவர். "தற்பரானந்தன் சேர் அதிபராக இருந்த போது தமிழ்ப் பள்ளிக் கூடத்தில் படித்தோம்" என்று பூரிப்போடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் கற்றவர்கள் பலபேர். நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைய இவ்வுலகிலே எத்தனையோ பேரின் வாழ்விற்குப் பெருமை சேர்த்த அமரர் தற்பரானந்தன் அவர்கள் ஒரு தன்னிகரற்ற தலைமை ஆசான். அன்னாரது ஆத்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

யோகேஸ்வரன் பிரதாபன் (சூட்டி)
பொறியியலாளர்,
கலிஃபோர்ணியா
ஐக்கிய அமெரிக்கா

**"Death is a stripping away of all that is not you the secret of life is to "die before you die" and find that there is no death - Eckhart Tolle, "power of now"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் ஆசான் தற்பரானந்தன் அவர்கள்....

வரலாற்றுச் சிறப்புமிகு பழம்பதியாய் விளங்குவது எமது கந்தரோடை ஆகும். சைவமும் தமிழும் செழித்தோங்கும் வண்ணம் பல ஆலயங்களும், பாடசாலைகளும் இங்கு மிளிர்கின்றன. எமது மக்களின் கல்விக்கண் திறக்கும் பாடசாலைகளாக தமிழ்க் கந்தையா வித்தியாசாலையும், ஸ்கந்தவரோதா கல்லூரியும் விளங்குகின்றன. ஆரம்பக்கல்வியைத் தமிழ்க்கந்தையா வித்தியாசாலையிலும் உயர் கல்வி பெறும் வாய்ப்பினை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் யான் பெற்றமை இறைவன் திருவருளாகும்.

யான் தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் கல்வி கற்ற வேளையில் அதிபராக இருந்து அதியுயர் சேவையினை எமக்கு அளித்தவர் அமரர் ஆசான் தற்பரானந்தன் ஆவர். சைவ ஒழுக்க பாரம்பரியத்தினைக் கட்டிக்காத்துப் பேணி வளர்த்தவர் இவராவார். இறைவனுக்குப் பூமாலை கட்டுதல், கோலம் போடுதல், திருமுறை ஓதல் முதலான சரியைத் தொண்டுகளை இளமையிலேயே எம் மனங்களில் புகுத்திப் பாடசாலை மட்டப் போட்டிகளில் எம்மை வெற்றி பெறவும் செய்தார். கண்டிப்பானவர், ஆனால் கருணை மிக்கவர், கடமை தவறாதவர், இவர் முயற்சியின் காரணமாகப் பதவியுயர்வுகள் பெற்று இறுதியாகக் கோட்டக் கல்விப் பணிமனையில், கல்விப்பணிப்பாளராக இருந்து பலரதும் பாராட்டுதல்களையும் பெற்று இளைப்பாற்றினார். எமது மனங்களில் நீங்காத இடம்பெற்று இறைவனடி சேர்ந்த அமரர் ஆசான் தற்பரானந்தன் அவர்களின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல ஈசன் திருப்பாதங்களைப் பணிந்து வணங்குவோமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

வைத்தியர் B.ஆதவன்
சத்திர சிகிச்சை நிபுணர்
மாவட்ட பொது வைத்தியசாலை
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்க அதிபர்

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும் அதிபருமாகிய திரு.அப்புத்துரை தற்பரானந்தன் அவர்களின் மறைவு பாடசாலை சமூகத்திற்கு ஒரு பேரிழப்பாகும். பதினெட்டு வருடங்கள் ஆசிரியராகவும், பதின்மூன்று வருடங்களாக அதிபராகவும் எமது பாடசாலையில் இவர் ஆற்றிய பணிகள் அர்ப்பணிப்புக்கள் சொல்லிலடங்கா.

இவரது திருக்கரங்களால் ஏடு தொடக்கப்பட்ட எத்தனையோ பேர் இன்று வைத்தியர்களாக பொறியியலாளர்களாக முகாமையாளர்களாக ஆசிரியர்களாக பல்துறைகளிலும் சேவையாற்றிக் கொண்டு எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நீண்ட காலமாக சிரேஷ்ட பாடசாலையாக இருந்து குறுகிய காலம் கனிஷ்ட பாடசாலையாக மாற்றப்பட்டு இருந்த எமது பாடசாலையை மீண்டும் சிரேஷ்ட பாடசாலையாக தரமுயர்த்துவதற்கு இவர் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. இவரது விடாமுயற்சியாலும் சிறந்த கல்வித் தரத்தை உறுதிப்படுத்தியமையாலும் இவரது முயற்சிக்கும் கனவுக்கும் 1986 ஆம் ஆண்டு பலன் கிடைத்தது. க.பொ.த சாதாரண தரம் வரை கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டு 90 ஆம் ஆண்டு முதல் தடவையாக எமது அதிபர் காலத்தில் எமது வகுப்பு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை சந்தித்தது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் எமது பரீட்சை ஒரு வருடம் ஒத்திவைக்கப்பட்டு 91 ஆம் ஆண்டு இடம்பெற்றது. எமது பிரிவைத் தாங்க முடியாததாலேயே என்னவோ அவரும் அதே ஆண்டு பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வகுப்பாக உயர்ந்து கொண்டு செல்லும் போது மாணவர்களின் கல்வித் தரத்தை உறுதிப்படுத்தவும், மாணவர்களும் பெற்றோர்களும் வேறு பாடசாலைகளுக்கு மாற்றம் பெற்றுச் செல்லாத வண்ணமும் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த ஆசிரியர்களை தனது முயற்சியால் எல்லாப் பாடங்களுக்கும் பெற்றுத் தந்தார். விஞ்ஞான பாடத்திற்கு இருந்த குறையை இவரது துணைவியார் மூலம் தீர்த்து வைத்தார்.

பாடசாலையையே வீடாகவும் மாணவர்களையே தனது பிள்ளைகளாகவும் ஆசிரியர்களைச் சகோதரர்களாகவும், பெற்றோர்களை நண்பர்களாகவும் கொண்டிருந்தார். தனது சேவைக்காலத்தில் பாடசாலைக்கான பௌதீக வளங்களை விரிவாக்குவதில் பெரும் பங்காற்றினார். மிகச் சிறந்த தலைமைத்துப்பண்புகளை இயல்பாகவே கொண்டிருந்தமையாலும் எல்லோருடனும் நட்புடன் பழகுவதாலும் இவரது இலக்குகளை இலகுவாக அடையக் கூடியதாக இருந்தது. கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட எல்லாவகையான போட்டிகளிலும் (தமிழ்த்தின, ஆங்கிலதின) மாணவர்களை ஈடுபடுத்தி தமிழ்க்கந்தையாவின் புகழை மாகாண மட்டத்திற்கு கொண்டு சென்றார். கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுத்துறையிலும் மாணவர்களை ஈடுபடுத்தி வெற்றிகளைப் பெற்றார்.

கோட்டக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் போதும் தன்னாலான எல்லா உதவிகளையும் எமது பாடசாலைக்கு அளித்தார். இளைப்பாறிய பின்னும் பாடசாலையின் எல்லா முக்கிய நிகழ்விலும் அபிவிருத்தியிலும் சிறந்த ஆலோசனைகளை வழங்கினார்.

***அன்பிலே - தந்தையாய்!***
***அறிவூட்டுதலிலே - நல் ஆசானாய்!***
***வழிகாட்டுதலிலே தலைவனாய்!***
***பண்பிலே - பொக்கி'மாய்!***
***வாழ்ந்த எம் பண்பாளனே!***
***நீர் எம்மை விட்டு நீங்கினாலும்***
***நீர் ஆற்றிய சேவைகளும் உம் நினைவுகளும்....***
***என்றென்றும் எம்மை விட்டகலா....***

செல்லையா சிவானந்தன்
பிராந்திய முகாமையாளர்
ஸ்ரீ லங்கா ரெலிகொம் - யாழ்ப்பாணம்
(தலைவர், பழைய மாணவர் சங்கம்)
யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அதிபர்

நான் அதிபர் திரு.தற்பரானந்தன் அவர்களை முதன் முதலில் 1981 ஆம் ஆண்டு கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் பாலர் வகுப்பில் சேரும் போது சந்தித்தேன். ஆரம்ப காலங்களில் எனக்கு அதிபரைக் கண்டால் சரியானபயம். காரணம் அவரின் கண்டிப்பான தன்மை, காலப்போக்கில் அவர் கண்டிப்பாக இருந்தாலும் ஒவ்வொரு மாணவனிலும் எவ்வளவு அன்பும், அக்கறையும் கொண்டுள்ளார் என்பதை அறிந்த போது பயம் முற்றாக மறைந்தது.

என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்திய விடயம் அதிபருடைய அபரிமிதமான ஞாபக சக்தி பாடசாலையில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களின் பெயரும் அவருக்குத் தெரியும் அதுமட்டுமின்றி ஒவ்வொரு மாணவனின் பெற்றோர் அவர்களின் குடும்ப நிலைமை என்பவற்றையும் அதிபர் நன்றாக அறிந்து வைத்திருப்பார்.

அதிபருடைய இன்னுமொரு முக்கியபண்பு நேரம் தவறாமை. ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு முதலாளாக வந்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

எவ்வளவு வேலைப்பழு இருந்தாலும் ஒவ்வொரு நாளும் காலையில் அதிபர் அவர்கள் தவறாது ஒவ்வொரு வகுப்பிற்கும் வந்து வகுப்பாசிரியருடன் வகுப்பிலுள்ள குறைநிறைகள், மாணவர்களின் கல்வி நிலைமை பற்றி சிறிது நேரம் கலந்துரையாடுவார். அதிபருடைய இப் பண்பு சிறப்பான பாடசாலை நிர்வாகத்திற்கு மிகவும் உதவியது.

அதிபர் மாணவர்களின் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டவர். பாட வேளைகளில் விடுமுறை காரணமாக ஆசிரியர்கள் இல்லாது போனால் தானே வந்து அப்பாட வேளைகளில் கற்பித்தலை மேற் கொள்வார். மாணவர்கள் நேரத்தை வீண் விரயமாக்க இவர் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார். ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்வதில் அதிபர் மிகக் கூடிய கவனம் செலுத்துவார். விடுமுறை நாட்களில் விசேட வகுப்புக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்துவதற்கு ஆசிரியர்களை ஒழுங்குபடுத்துவதோடு அல்லாது தானும் வகுப்புக்கள் முடியும் வரை பாடசாலையிலேயே இருந்து மேற்பார்வை செய்வார். முன்னோடிப் பரீட்சைகளை தவறாது ஒழுங்கு செய்வார். இதன் பயனாக பல மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்ந்தனர்.

எமது பாடசாலையில் செயற்பட்டு வந்த இடைநிலைப் பிரிவு இடைப்பட்ட காலத்தில் தரம் குறைக்கப்பட்டு ஆரம்பப் பாடசாலையாக இருந்த வேளை க.பொ.த சாதாரண தரம் வரை தர முயர்த்திய பெருமை எமது அதிபரையே சாரும். இவ்வாறு சாதாரண தரம் வரை தரம் உயர்ந்த போது இப்பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர் அணியில் நானும் ஒருவன் என்பதை இட்டு இன்றும் நான் பெருமைப்படுகின்றேன். பாடசாலையைத் தரமுயர்த்துவதற்காக அதிபர் எவ்வளவு சவால்களையும் கஷ்டங்களையும் எதிர் கொண்டு வெற்றி அடைந்தார் என்பதை நினைக்கும் போது இன்னும் மலைப்பாகவுள்ளது. சூழ பல உயர்தரப் பாடசாலைகள் இருக்கும் போது மாணவர்களைத் தொடர்ந்து புதிதாக ஆரம்பிக்கும் வகுப்புக்களில் தமிழ்க்கந்தையா வித்தியாசாலையிலேயே கல்வி பயில வைப்பதென்பது மிக மிகக் கடினமான விடயம். இப்பணியை நிறைவேற்றுவதற்காக அதிபர் ஒவ்வொரு மாணவனின் பெற்றோரையும் தனித்தனியாக சந்தித்துக் கலந்துரையாடினார். மாணவர்களின் சிறப்பான கல்விக்கு தானே முழுப் பொறுப்பு என உறுதிமொழி வழங்கினார். செய்தும் காட்டினார். அதிபரின் விடாமுயற்சியால் எமது வகுப்பின் ஏறக்குறைய அனைத்து மாணவர்களும் தொடர்ந்து தமிழ்க்கந்தையா வித்தியாசாலையிலேயே கல்வி பயின்றோம். தான் கொடுத்த உறுதி மொழியை நிறைவேற்றுவதற்காக அதிபர் அல்லும் பகலும் பாடுபட்டார். ஒவ்வொரு பாடத்திற்குமென திறமைமிக்க ஆசிரியர்களை எமக்குப் பெற்றுத் தந்தார். அரசாங்கப் பாடநூல்களிற்குப் பற்றாக்குறையான காலமது. எவ்வாறாயினும் எமக்குரிய பாடநூல்களை அவர் பெற்றுத்தந்துவிடுவார். இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொருநாளும் பாடசாலை முடிந்ததும் கோட்டக்கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகம், கல்வித்திணைக்களம் போன்றவற்றிற்கு மிதிவண்டியில் சென்று உரிய அதிகாரிகளைச் சந்திப்பார். அதிபரின் விடாமுயற்சியின் பலனாக எமது மாணவர் அணியில் பலர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்று உயர்தரம் சென்றோம். இன்று பலர், மருத்துவர்களாகவும், பொறியியலாளராகவும், கணக்காளர்களாகவும் இருக்கின்றோம்.

அதிபர் மாணவர்களின் பல்வேறுபட்ட ஆளுமை விருத்தியிலும் மிகுந்த கரிசனை உடையவர். மாணவர்களை தமிழ்த்தின, ஆங்கிலதினப் போட்டிகளில் தவறாது பங்கு பெற்றச் செய்வார். மாணவர்களுக்குச் சிறந்த ஆக்கமும் ஊக்கமும் அளித்து போட்டிகளிற்கு தாமே அழைத்துச் செல்வார். இவருடைய காலத்தில் கோட்ட, மாவட்ட மட்டப் போட்டிகளில் தமிழ்க் கந்தையா வித்தியாசாலை பல வெற்றிகளைப் பெற்றதென்பது கண்கூடு.

சிறந்த அதிபராக சிறந்த நிர்வாகியாக சிறந்த கல்விமானாக விடாமுயற்சியில் உறுதியுடையவராக திகழ்ந்தவர் எமது அதிபர் திரு.அ.தற்பரானந்தன் அவர்கள் கல்வி பயின்றதை இட்டு நான் மிகவும் பெருமை அடைகின்றேன். அவர் இட்ட உறுதியான அடித்தளங்களே இன்று இந்நிலைக்கு என்னைக் கொண்டுவந்தன என்பதை நான் உறுதியாகக் கூறுவேன்.

இன்று அவர் இவ்வுலகில் இல்லாவிட்டாலும் அவர் செய்த நற்பணிகள், அவர் உருவாக்கிய மாணவர்கள் மூலம் அவருடை புகழ் என்றும் நிலைத்திருக்கும். அவருடைய ஆத்ம சாந்திக்காக எல்லோரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

பழைய மாணவன்
வைத்திய கலாநிதி.சி.சாயீஸ்வரன்
ஆதார வைத்தியசாலை
கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் என்ற பார்வையில் திருவாளர் அ. தற்பரானந்தன்

அமரர் தற்பரானந்தன் அவர்கள் எனக்கு பதினொரு வருடங்களாக அதிபராகக் கிடைக்கும் வாய்ப்பைப் பெற்றேன். அதற்கு மேலாக பாடசாலை முடிந்தவுடன் அவருடன் நின்று எல்லாவற்றையும் சரி பார்த்து தாமதமாக அவருடனேயே வீடு செல்வேன். இதன் காரணமாக அவருடன் அருகில் இருந்து அவருடைய நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்துள்ளேன். சுருக்கமாகச் சொல்வதானால் மிகவும் திறமையான ஒரு நிர்வாகம், ஆளுமை கொண்ட அதிபர், எடுக்கும் முடிவுகளை உறுதியுடனும், எத்தகைய தடைகள் வந்தாலும் நிறைவேற்றுவதில் வல்லவர். அயராத உழைப்பாளி அன்றைய காலத்தில் பாடசாலையே அவரது இரண்டாவது வீடாக இருந்தது.

எங்களது வகுப்பே மீண்டும் சிரேஷ்ட பிரிவு ஆரம்பிக்கப்பட்ட பின் முதலாவதாக G.C.E (O/L) தரம் வரை முன்னேறிய வகுப்பாகும். அப்பொழுது தான் முதன் முதலாக எமது பாடசாலையில் அடுக்கு மாடிக்கட்டடம் கட்டப்பட்டது. எமது வகுப்பை அதிபர் அவர்கள் வழிநடத்திய விதம் மிகவும் பாராட்டப்பட வேண்டியது. அவர் மட்டுமல்ல அவருக்கு உறுதுணையாக அன்றைய உப அதிபர் திருமதி.இ.சின்னப்பா அவர்கள் பக்க பலமாக நின்றார். அத்துடன் எமக்கு கற்பித்த ஆசிரியர்களும் தன்னலம் பாராது கடமை என்று நினைக்காது எம்மை ஆழமாக நேசித்துக் கற்பித்தார்கள். சகல துறைகளிலும் எம்மை அதிபர் ஊக்குவித்தார். எமது பாடசாலையில் அன்று பெரிய மைதானம் இல்லை ஆனால் எமது காற்பந்தாட்ட அணி, பல பிரபல பாடசாலைகளுடன் மோதி வெற்றி கண்டது.

நாம் கற்கும் காலத்தில் பெரிய விஞ்ஞான ஆய்வு கூடம் இருக்கவில்லை அதிபர் அலுவலகத்தின் ஒரு பகுதியே விஞ்ஞான கூடமாக இருந்தது. ஆயினும் இன்று பல மருத்துவர்கள் பொறியியலாளர்கள், பட்டதாரிகள் என அந்த விஞ்ஞான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடத்திலிருந்தே உருவாகியுள்ளார்கள். இப்படியாக சிறிய வளங்களைக் கொண்டு பெரிய பலனை அடையக் கூடிய திறமையான நிர்வாகம். இது தவிர விடுமுறை நாட்களில் வகுப்புக்கள் நடத்தி அவரும் அன்றைய ஆசிரியர்களுக்கு அயராது உழைத்தார்கள். பல நாட்கங்கள் மாவட்ட ரீதியில் பரிசு பெற்றன. பல அரியகண் காட்சிகளை அந்த சிறு வளாகத்தில் நடத்திக் காட்டியவர். தமிழ்த்தினப் போட்டி ஆங்கில தினப் போட்டி, சைவ நெறிப்பரீட்சைகள் என எல்லா நிகழ்வுகளிலும் எமது மாணவர்களைப் பங்கு பெற வைத்து மாவட்ட ரீதியாகப் பல பரிசில்களைப் பெற்றிருக்கின்றோம். அன்று நாம் பயின்ற காலம் பாடசாலையின் பொற்காலம் என்றே கூற வேண்டும். அவர் பின்னர் பல பதவிகள் வகித்தாலும் எம்மால் "பெரிய ளுசை" என்ற அதிபராக மட்டுமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. எங்கள் பாடசாலையைப் பற்றி நினைத்தவுடன் எம் மனக் கண் முன் அவரின் தோற்றமே என்றும் ஞாபகமூட்டும்.

சிறு வயதிலேயே சமய ஆசாரங்களுடன் கூடிய ஆன்மீக நெறியை எமது மனதில் விதைத்தவர் அதிபர். பல அரிய ஒழுக்கங்கள் பண்புகளை அவரிடமிருந்து பயம் கலந்த பணிவுடன் கற்றுள்ளோம்.

அதிபர் என்ற ஸ்தானத்தை விட அவரது குடும்த்தினருடன் அயலவனாகவும் இருக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. போரிற்கு முந்தைய காலத்தில் எமது குடும்பத்தின் இரு தலைமுறைகள் அவரது குடும்பத்தினருடன் மிக அந்நியோன்யமான உறவுகளைப் பேணி வந்தோம். அவரது குடும்பத்தின் ஆசார ஒழுக்கம் நிறைந்த கட்டுக் கோப்பான வாழ்க்கை முறை எங்கள் குடும்பத்தினருக்கும் முன்னுதாரணமாக அமைந்தது.

நான் இறுதியாக அதிபர் அவர்களை 2011ஆம் ஆண்டு ஜனவலி மாதம் கொழும்பில் நேரில் கண்டு உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது அவர் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டிருந்தாலும், அதைப் பற்றி என்னுடன் உரையாடவில்லை. என்னுடன் வகுப்பில் அன்று படிக்க ஒவ்வொரு சக மாணவனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் பெருமையாகக் கூறிக் கொண்டிருந்தார். அதன் மூலம் அவர் எங்கள் வகுப்பில் இருந்த அக்கறையை உணர முடிந்தது.

அதிபரின் பிரிவால் துயருறும் அவரது மனைவி மற்றும் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

யோகேஸ்வரன் நிர்மலன்
1990 ஆம் ஆண்டு (O/L) வகுப்பு
மாணவர்கள் சார்பாக

**பொது உறவுகள் மேம்பட....**

**குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும் ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க இதோ சில அறிவுரைகள் .......**

- நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள (Loose Talks)
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக (Diplomacy) கையாளுங்கள் விட்டுக்கொடுங்கள் (Compromise)
- சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள் (Tolerence)
- உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையுமம் விடுங்கள் (Carrying Tales)
- அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள் (Over Expectation)
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தமுண்டோ இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்
- கேள்விப்படுகின்ற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள். உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexiblity)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்க முடியாத அதிபர்.

5.6.2012 அன்று மாலை எனது மூத்த சகோதரன் தொலை பேசியூடாகப் பரிமாறிய தகவலைக் கேட்டு அதிர்ந்து போனேன் என்னை கல்விஎன்னும் பெருங்கடலில் ஒரு சில முத்துக்களையேனும் பொறுக்குவதற்கு படகேற்றி வாழ்த்துச் சொல்லி வழிகாட்டிய கல்விப் பெருந்தகை மதிப்பிற்குரிய அ.தற்பரானந்தன் அவர்கள் இவ்வுலகை விட்டுச் சென்று விட்டாரென்ற பெருமிடி கேட்டு நெஞ்சு மெல்லாம் வெடிப்பது போலிருந்தது.

1983 ஆம் ஆண்டு வாணி விழாவிலன்று தனது மடியிலிருத்தி "அ" சொல்லு என்று எனது கையைப் பிடித்து அரிசியில் எழுத முயற்சி பண்ண நானோ கலவரமாய் அங்கும் மிங்கும் பேந்தப்பேந்தப் பார்த்தபடி எழுதவே மாட்டன் என்று அடம்பிடித்துக் கொண்டிருந்ததேன் அவரோ விடாப்பிடியாய் பிடித்து ஒரு வழியாக எழுதப்பண்ணி விட்டு வாயில் ஒரு துண்டு கற்கண்டைப் போட்டு இவன் ஒருத்தருக்கும் அடங்கமாட்டான் என்று சொல்லி எனது கல்விக்குப் பிள்ளையார் சுழி போட்டு வைத்தார்.

அன்று கையைப் பிடித்து தத்தி நடக்கச் சொல்லிக் கொடுத்தவர் நாளொரு வண்ணமும் பொழுதொரு நாழியுமாக அருகில் நின்று வழிகாட்டி ஊக்கம் தந்து உயர்த்தி விட்டவர் பாடசாலையில் எவ்வளவு குறும்பு பண்ணினாலும் 'அதிபர் வாறார் என்று சொல்லக் கேட்டால் பாய்ந்து விழுந்து அகப்பட்ட கதிரையில் இந்தப்பூனையும் பால் குடிக்குமோ என்ற மாதிரி இருப்போம். அவ்வளவு பயம். ஆனாலும் சொல்லித்தருவதில் அவருக்கு நிகர் அவரே தான்.

எனது அதிபர் மிகவும் கண்டிப்பானவர் ஒரு முறை ஏதோ தவறை மறைக்கப் பொய் சொல்லி கன்னத்தில்ரேகை பதிய வாங்கிய அடியை இன்றும் மறக்க முடியாது. அது போல எனது 1993 ஆண்டு புலமைப்பரீட்சையில் தோற்றிய தமிழ் மொழி மூலப் பரீட்சார்த்திகளில் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்ற போது ஆரத் தழுவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஏடு தொடக்கின மாணவனடா நீ என்று பெருமைப்பட்டு ஆனந்தப்பட்ட போது புல்லரித்துப் போனேன்.

இப்படியே அவரது நினைவுகளை நீட்டினால் அதற்கு முடிவே இருக்காது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு படிப்பினைகள். அந்தக் கல்விப் பெருந்தகை எம்மை விட்டுப் பிரிந்ததையிட்டு என்னால் குமுறி அழத்தான் முடிகிறது. அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

க.பிரகாஷ்
பொறியியலாளர்.

**மூன்றெழுத்து மகிமை**

உலகில் உள்ள உயிர் மூன்றெழுத்து
உயிரை இயக்கும் சக்தி மூன்றெழுத்து
சக்தியின் வடிவாகிய அன்னை மூன்றெழுத்து
அன்னை காட்டும் அன்பு மூன்றெழுத்து
அன்பினை உயர்த்தும் அறிவு மூன்றெழுத்து
பள்ளியில் கற்கும் கல்வி மூன்றெழுத்து
கல்வியினால் வரும் பதவி மூன்றெழுத்து
பதவியினைத் தரும் இளமை மூன்றெழுத்து
இளமை தரும் மணம் மூன்றெழுத்து
மணத்தால் வரும் மனைவி மூன்றெழுத்து
மழலைக்கு ஏற்படும் செலவு மூன்றெழுத்து
செலவுக்கு தேவைப்படும் பணம்மூன்றெழுத்து
பணத்தினைச் செலவாக்கும் வயிறு மூன்றெழுத்து
முதுமையின் முடிவு மூன்றெழுத்து
முடிவின் பின் தேவைப்படும் பெட்டி மூன்றெழுத்து
பெட்டிக்குள் அடங்கும் பிணம் மூன்றெழுத்து
ஊர்தி செல்லும் இடம் சுடலை மூன்றெழுத்து
சுடலையில் வைக்கும் கொள்ளி மூன்றெழுத்து
கொள்ளியின் சுவாலைவிடும் அனல் மூன்றெழுத்து
அனலின் பின் வரும் அஸ்தி மூன்றெழுத்து
இறுதியில் அஸ்தி கரையும் கடல் மூன்றெழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியுமா உங்களை

காலம் சென்ற முன்னை நாள் ஓய்வு பெற்ற கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை அதிபரும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரிப் பிரதி அதிபரும் முழுநேர சமூக, சமய சேவையாளருமான மதிப்புக்குரிய அ.தற்பரானந்தன் மாஸ்டரின் மறைவுச் செய்தி கேட்டு மிகந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். வாழ்க்கையில் ஒரு முறையாவது மீண்டும் ஒரு துயரச் செய்தி இது. எனக்கு மட்டுமல்ல என்னுடன் படித்த எனது நண்பர்கள் அவரிடம் படித்து இன்று உலகம் பூராகவும் செறிந்து வாழ்கின்ற அவரது மாணவர்கள், எமது கந்தரோடை வாழ் மக்கள் எல்லோருக்கும் இழப்பாகத்தான் இருக்கும். காரணம் அவர் தன்னலமற்ற தற்பெருமை அற்ற ஆசிரியராகவும், முழுநேர சமய சமூகச் சேவையாளராகவும் எல்லோர் நெஞ்சிலும் குடி கொண்டிருக்கின்றார்.

அவர் ஒவ்வொரு மாணவர்களையும் சிறந்த கல்விமானாகவும் நல்லொழுக்க சீலர்களாகவும் மாற்ற எவ்வளவு பாடுபட்டு இருக்கிறார். ஒரு மாணவன் கல்வியில் மட்டுமல்ல கலைத்துறை, விளையாட்டுத்துறை, சமூகத்தில் அவனுக்குள்ள கடமை என்ன என்பதை படிப்படியாக எங்களுக்குப் போதித்தார். தனது பேரனாரால் ஸ்தாபிக்கப்பட்ட தமிழ்க்கந்தையா வித்தியாசாலையை பொறுப்பேற்று அங்கு கற்கும் மாணவர்களைச் சகல துறைகளிலும் ஆளுமை மிக்கவர்களாக மாற்றினார். இதனால் இவரிடம் கல்வி கற்றவர்கள் பலதுறைகளிலும் உலகம் பூராகவும் சிறந்து விளங்குகின்றார்கள். அது மட்டுமா எமது ஆலயங்களின் வளர்ச்சி அதற்கான ஆன்மீகப்பணிகளிலும் எமது சனசமூக நிலைய முன்னேற்றத்திற்காகவும் எவ்வளவு பாடுபாட்டார் என்பது எமக்கு எல்லோருக்கும் தெரியும். எமது ஊர் எப்படியும் சகல துறைகளிலும் சிறந்து விளங்கத் தினமும் பாடுபட்டார்.

இவர் அடிக்கடி கூறுவார் நமது ஊர் கந்தரோடை நாம் எல்லோரும் கந்தருடன் தான் இருக்கின்றோம். அதாவது இறைவனோடு இருக்கிறோம் நாம் எவ்வளவு புண்ணியம் செய்தவர்களன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு குடும்பத்தினரின் நன்மை தீமைகளின் போதும் தனக்குரிய கடமையைத் தன்னாலியன்றவரை செய்தார். தன்னலம் பாராது சமூகத்திற்காக வாழ்ந்த ஒரு "தற்பர்" மாஸ்டரை இனி எப்போது காண்போம்.

ஆண்டவனால் கந்தரோடை மண்ணில் மக்களின் வளர்ச்சிக்காக அனுப்பப்பட்ட ஒரு புனிதரை இனி எப்போது காண்போம்?

அன்பான தற்பரானந்த மாஸ்டரை இழந்து தவிக்கும் அவரது துணைவியாருக்கும் அவரது சகோதரர்களுக்கும் மற்றும் சகல உறவினர்களுக்கும் அவரை இழந்து தவிக்கும் கந்தரோடை மண்ணுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அவரது நினைவுகளில் வாழும்
பரமானந்தன் உதயணன் (இலண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்பரானந்தன் எனுஞ்சோதி

தகைபெறு சால்பினன்
தற்பரானந்தம் எனுஞ்சோதி
தண்ணொளி குன்றி மறைந்தது
தவிப்பில் ஆழ்ந்தோம் நாம்

சுயநலங் கருதா மாண்பினன்
சங்கீத சபையின் உயர்விற்காய்
செயலாளர் முத்திரை தாங்கி
செயற்கரிய செயல்களாற்றி
சபைக்கான காணிக் கொள்வனவு
பவளவிழா மலர் வெளியீடென
பல்வித முயற்சிகளில் முன்னின்றுழைத்து
பொதுமை நோக்குடன் மிளிர்ந்து
சமூக மலர்ச்சிக்காய்த் தினமும்
சளைக்காது தலையீந்த செம்மல்

பள்ளி மாணக்கர் பலரும்
பாங்குறு வித்தைகள் பெற்றிட
பண்புடை ஆசானாய் பயில்வித்து
பெருமையுறு கோட்டக்கல்வி அதிகாரியாய்
பொதுக்கல்விச் சேவைதனை ஆற்றி
பொன்றாப் புகழ் கொண்ட பேராளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிற் பணிகள் தனிலென்றும்
களிப்புடன் தனையீடுபடுத்தி
குவலயத்தில் நம் மாண்புயர
குளிர் மொழி பேசி வழிகாட்டி
நோய்கள் பல சூழ்ந்த போதும்
நம்மத்தியில் நிதமும் இயங்கிய கடிகாரம்
நின்று கொண்ட துயர் தங்காது
நித்திய ஆனந்தம் அவர் பெற்றிடப் பிரார்த்திக்கிறோம்

கலாவித்தகர் சி.சிவராஜன்
பதில் செயலாளர்,
இலங்கை சங்கீதசபை
யாழ்ப்பாணம்.

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலை விளக்கு

மலை போன்று நிமிர்ந்து மானிடம் வென்றது
மாபெரும் சமூகத்தைப் புனிதமாக்கி நின்றது
தலையாய தமிழுக்குத் தாற்பரியமாய் மிளிர்ந்தது
தத்துவ கலாநிதியாய் தகவு கொள்ள வைத்தது
நிலையான வாழ்வதனை நீறுதாங்க வைத்தது
நீ நடப்பது சரியா என்பதை நேருக்கு நேர் சொல்ல வைத்தது.
கலையாத கல்விக்குப் பணிப்பாளராக ஒளிர்ந்தது.
காத்திரமான சங்கீத சபைக்குக் கலங்கரை விளக்கானது.

**கே.சிவஞானராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆருயிர் நண்பா! அவனி விட்டுப் போனதெங்கே?

அப்புத்துரை பெற்றெடுத்த அருமகனே! திருமகனே
ஆற்றல் பல படைத்த என் அன்பனே! நண்பனே!
ஆருயிர் பிரிந்தே நீ அவனி விட்டுப் போனதெங்கே?
கந்தரோடை கந்தையா கலைக்கூடம் அழைத்ததா?
கந்தரோடை ஸ்கந்தா கடுகதியாய் அழைத்ததா?
சைவ வித்தியா சங்க முனைச் சடுதியாய் அழைத்ததா?
வட இலங்கைச் சங்கீத சபை வாவென்று அழைத்ததா?
உடுவிற் கோட்டம் தான் உனைத் துரிதமாய் அழைத்ததா?
வலிகாம வலய முன்னை வா வென்று அழைத்ததா?
ஆலய நல் நிறுவனங்கள் அன்போடு அழைத்ததா?
எந்த நல் நிறுவனங்கள் எங்கு தான் அழைத்தனவோ?
எந்த விடம் போனாயோ ஏங்கியிங்கே அழுகின்றேன்.
மனைவியோ மயங்கியழ மக்களெல்லாம் கூடியழ
உற்றார் உறவினர்கள் உருகியே இங்கு அழ
என் போன்ற நண்பர்கள் ஏங்கி நின்று தேம்பியழ
இவ்வுலகை விட்டு நீ எவ்வுலகு சென்றாயோ
சென்றவிடம் யாமறியோம் ஜெகம் மீது வருவாயோ
தவியாய்த் தவிக்கின்றோம் தற்பரனே! வாறதெப்போ?

தொல்புரம் கிழக்கு
சுழிபுரம்

ஆருயிர் நண்பன்
கலாபூசணம்,
பிரசங்கபூசணம்
வாரியார் அடிப்பொடி (இலண்டன்)
நடேசன் சிவசண்முக மூர்த்தி **(B.A Dip in Ed)**
முன்னாள் வலிகாம வலய ஆசிரிய
ஆலோசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்புப் பெறாமகன் தற்பர்

என் அருமை பெறாமகன் தற்பரை நான் எனது மூத்த மகன் என்று சொல்வதே பொருத்தமானது. எனது கணவரின் மறைவிற்கு பின் அவர் என் மூத்த மகன் ஸ்தானத்தில் இருந்து எமது குடும்பத்தினருக்கு பற்பல தேவைகளை நிறைவேற்றியுள்ளார். எனது சகோதரி, வயதான எனது தாயார் என அனைவர்க்கும் தேவையான சகல உதவிகளையும் செய்வதில் தயங்கமாட்டார். நேரத்தையும், சிரமத்தையும் பொருட்படுத்தாமல் நான் என்ன உதவி கேட்டாலும் மறுக்காமல், முகம் சுளிக்காது ஓடி வந்து உடனேயே செய்து முடிப்பார்.

இவரது இயல்பான நகைச் சுவை உணர்வினால் எமது கவலைகளை மறக்கச் செய்து விடுவர். நான் எனது கஷ்டங்கள், கவலைகளை அவருடன் பகிர்ந்து கொள்ளும் போதெல்லாம் அதனைச் சிறிய விடயமாக்கி என்னைச் சிரிக்க வைத்து ஆறுதல் கூறி மனதை இலேசாக்குவார். அவர் எமக்குச் செய்த உதவிகள் எழுத்தில் அடங்காது.

நமது வாழ்வில் பலர் வருவார்கள் போவார்கள் ஆனால் ஒரு சிலர் தான் எமது மனதில் நீங்காத இடம் பெறுவார்கள். நாம் வெளிநாடு சென்ற பிறகும் அவருடன் அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொள்வோம். நேரில் பேசுவது போன்ற நகைச்சுவைப் பேச்சில் பல செய்திகள் பகிர்ந்து கொள்வோம்.

தற்பர் எங்களுக்கு மட்டுமல்ல வேறு பலருக்கும் பலவிதமான உதவிகள் செய்த ஒரு நல்ல ஆத்மா. அப்படிப்பட்ட ஒரு புண்ணிய ஆத்மா சாந்தியடைய நானும் எனது நானும் எனது குடும்பத்தினரும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி.ப.சிவகுமாரன்
குஞ்சியாச்சி
அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விளக்கு அணைந்ததோ!

கந்தரோடையில் சைவம், தமிழ், கல்வி பண்பாடு ஒழுக்கம் போன்றவை சிறந்து விளங்கிய குடும்பத்தில் திரு அப்புத்துரை தற்பரானந்தன் உதித்தார். கந்தரோடை மக்களுக்கு கல்வித்தானம் வழங்கிய தமிக்கந்தையா உபாத்தியாயர் பல ஆண்டுகளாக தவமிருந்து பெற்றெடுத்த ஏக புதல்வி சேது நாயகி அம்மையார். இவரே அமரரின் தாயார். திரு.S.M அப்புத்துரை என்று அழைக்கப்படும் அன்னாரின் தகப்பனார் மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவப்பாரம் பரியத்தைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்.

திரு.தற்பரானந்தன் அயலவர்களாலும் உறவினர்களாலும் பெரிய தம்பி என்று அழைக்கப்பட்டார். அவர் பிறந்து அடுத்த நாளிலிருந்து இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன் வரை அவரின் சுக நலன்களைத் தொடர்ச்சியாக அறிவேன்.சிறு வயதிலிருந்தே என் குடும்பத்தவர்கள் எல்லோருக்கும் ஒரு பாசமுள்ள தம்பியாகவே இருந்தார். பேத்திமார் இல்லாததால் எனது தாயை பேத்தியாக மதித்து அம்மம்மா என்றே அழைப்பர்.

பெரிய தம்பி பிறக்கும் போது மிகவும் அருமை பெருமையாகவே இருந்தது. பேரானார் கந்தையா உபாத்தியாயர் பரம்பரை தொடர்வதற்கு குழந்தைச் செல்வங்களுக்காக ஏங்கி நின்றவர் மிகவும் பூரிப்படைந்தார். பேரனைத் தனது அன்பான அரவணைப்பில் வளர்த்தார். சத்துள்ள கீரைவகை இலைகள் போன்றவற்றை ஊரிலும் வயல்களிலும் தேடிக் கொண்டு வந்து தானே நின்று பதத்திற்குச் செய்து ஊட்டுவார். அத்துடன் வீட்டில் பால், தயிர், மோர் வெண்ணெய் அரிசி போன்றவற்றிற்குக் குறைவில்லை. அதனால் சிறுவயதில் மிகவும் ஆரோக்கியமாகவும், புத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்மையுள்ளவராகவும் காணப்பட்டர். தாயார் கையாண்ட உணவுப் பழப்ப வழக்கங்களையே கடைப்பிடித்து வந்தார்.

சிறு பிள்ளையாக இருக்கும் போது கூட சமயத்தில் ஆர்வங்கூடுதலாக இருந்தது. மண்ணால் கோயில் கட்டி சுவாமி வைத்து எல்லோரையும் தேவாரம் பாடிக் கும்பிடச் சொல்வார். தன்னை ஐயா ஏனறு அழைக்குமாறு எங்களைக் கேட்பார். இவரது தகப்பனாரும் இத்தகைய விளையாட்டிற்கு உறுதுணையாக இருந்து கேட்பதெல்லாம் வாங்கிக் கொடுப்பார். நினைத்ததைச் சாதிக்க வேண்டுமென்ற பிடிவாதத்தால் பேரனாருடன் சண்டையும் செய்வார்.

சிறுவயதிலேயே பாடசாலைக்குப் போகவேண்டுமென்ற ஆர்வம் வந்தது. அதனால் இராமநாதன் கல்லூரிக்கு எனது மூத்த சகோதியுடன் மாட்டு வண்டியில் சென்றார். காலையில் மிகவும் ஆர்வத்தோடு ஒரு சேலைப்பையில் உணவுடன் ஆயத்தமானார். இவர் இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் ஆயுள் உறுப்பினராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பக் கல்வியை தமிழ்க் கந்தையாவிலும் உயர் கல்வியை ஸ்கந்தாவிலும் கற்றார். கற்கும் போது தமிழ், சமயம், புவியியல், அரசியல் போன்ற பாடங்களில் கூடிய ஆர்வம் காட்டினார். தமிழ், சயமத்தில் பரந்த அறிவு இருந்தது. உயர்தரக்கல்விக்கு கலைத்துறையை விரும்பிக் கற்றார்.

ஆசிரியத் தொழில் அவர் விரும்பிய தொழிலாகும். அவரின் ஆற்றலுக்கு உகந்த தொழிலாக இருந்தபடியால் அத் தொழிலைத் தேர்ந்தெடுத்தார். சிறுவயதிலேயே கல்விச் சேவையில் புகுந்து இலங்கையில் மலை நாடு, கொழும்பு போன்ற பல இடங்களில் சேவையாற்றியுள்ளார். கடமையுணர்ச்சி, ஆளுமை, நேரந்தவறாமை, நேர்மை போன்றவற்றால் சென்ற இடமெல்லாம் போற்றப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பிள்ளையால் தந்தையும் நோய் வாய்ப் பட்டிருந்தமையால் பெரிய தம்பிக்கு குடும்பப் பொறுப்புணர்வு மேலோங்கி நின்றது. தந்தை இயலாமல் போயிருந்ததை உணர்ந்ததும் தானே குடும்பத் தலைவன் என்ற பதவியை வகித்தார். தாய் உட்பட சகோதர, சகோதரிகள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கினார்கள். நல்ல பாதையிலே சரியாக வழி நடத்தி ஒழுக்கமுள்ள, பண்பான குடும்பம் என்று கூறும் வண்ணம் வழிகாட்டினார்.

ஆசிரியராக இருந்து பின் அதிபராகத் தங்கள் பரம்பரைப் பாடசாலை தமிழ்க்கந்தையாவில் கடமையாற்றினார். அவர் அதிபராக இருந்த காலம் தமிழ்க்கந்தையாவின் "பொற்காலம்" எனக் குறிப்பிடலாம். ஆரம்ப காலங்களில் S.S.C வரை வகுப்புக்கள் இருந்து பல மாணவர்கள் தேர்ச்சியடைந்தார்கள். இடைப்பட்ட காலத்தில் தரம் குறைக்கப்பட்டு ஆரம்பப் பாடசாலையாக இருந்தது. மீண்டும் அந் நிலைக்கு தமிழ்க் கந்தையாவை உயர்த்துவதற்கு விடா முயற்சி எடுத்து சிரேஷ்ட வகுப்புக்களை ஆரம்பித்தார்.

ஒவ்வொரு பாடத்திற்கும் திறமையான ஆசிரியர்களை நியமிக்கச் செய்தார். அவரின் மனைவி திருமதி.ந.தற்பரானந்தன் அவர்களும் விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லாவிட்டாலும் சிறப்பாக விஞ்ஞானம் கற்பித்தார். அன்னாரின் ஆளுமை ஆசிரியர்கள் எல்லோரையும் சிறப்பாகத் தொழிற்பட வைத்தது. மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், வரவு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தார். அதனால் அவரது வழிகாட்டலில் O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் திறமையான பெறுபேறுகளைக் பெற்றார்கள். அவர்கள் இன்று உயர் பதவிகளை வகிக்கின்றார்கள். அதிபரை அவர்கள் நன்றியோடு நினைவுகூருகிறார்கள். அதிபரின் திடீர் மறைவினால் அவர்களும் கலங்கியுள்ளார்கள். என்பது உலகின் பல பகுதிகளிலிருந்தும் எத்தனையோ நாட்கள் வரை அனுதாபச் செய்திகள் Face Book மூலம் குவிந்த வண்ணம் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்திற்கு ஒளியைக்கொடுத்துக் கொண்டிருந்த விளக்கு அணைந்து விட்டது. இது ஒரு சாதாரண இழப்பல்ல. ஓர் ஈடு செய்ய முடியாத இழப்பு. கொடிய நோயினால் பாதிக்கப்பட்டும் ஆரம்ப காலத்தில் நோயோடு போராடி வெல்ல முயன்றார். தனியே கொழும்பில் பஸ் ஏறி இரவு பகல் பாராமல் தனது தேவைகளை நிறைவு செய்தார். இறுதியாக கொழும்பிற்கு வந்து 2 ஆவது மாடிக்கு படி ஏறி தனது சகோதரன் வீட்டிற்குச் சென்றார். அடுத்த நாள் ஆஸ்பத்திரிக்கும் படியிறங்கிச் சென்று வந்தார். மீண்டும் யாழ்ப்பாணம் திரும்ப பஸ்சில் பயணிக்கவே விரும்பிய வேளை அவரது இளைய சகோதரி தனியார் வான் ஒன்றை ஒழுங்கு செய்து அனுப்பி வைத்தார். நான் அவர் கொழும்பிலிருந்து பயணிக்கும் வேளை சென்று பார்த்தேன் நோயின் அகோரப்பிடியில் உள்ளார். என மனம் வருந்தினேன். திரும்ப காண்பேனோ என்ற அச்சம் மனதில் எழுந்தது. விடை பெற்றுச் சென்றேன் அதுவே இறுதிச் சந்திப்பு.

கொழும்பிலிருந்து திருக்கேதீச்சரம் செல்ல ஆரம்பித்தார். அந்த யாத்திரை அவரின் வாழ்க்கையின் இறுதி யாத்திரையாகத் தொடங்கியது. பின் வீட்டிற்குச் சென்றதும் படிப்படியாக அவர் செயலிழந்த வண்ணமே இருந்தார். வாழ்க்கை புண்ணியத் தலமாகிய திருக்கேதீச்சரத்தோடு முடிந்தது. ஒரு பெரும் தவப்பேறு வினைகள் எல்லாம் களையப்பட்டு இப்போ ஆண்டவன் அடியில் தனது அன்னையுடன் அமர்ந்திருப்பார். அங்கிருந்து அன்னாரின் ஒளியும் ஆசியும் மனைவிக்கும் குடும்பத்தினருக்கும் கிட்டும்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி ஓம் சாந்தி

லிங்கவாசா
கந்தரோடை

சின்னக்கா
திருமதி.தி.யோகேஸ்வரன்
ஓய்வு பெற்ற ஆசிரியர்
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமையான மரபுகளைப் பாதுகாத்து மக்களுக்கு சேவையாற்றியவர்

நாம் எல்லோரும் "பெரியதம்பி" என அன்போடு அழைக்கும் திரு.அப்புத்துரை தற்பரானந்தன் அவர்கள் சிவன் பாதம் அடைந்துள்ளார் என்ற செய்தி கேட்டு ஆறாத்துயரில் மூழ்கியுள்ளோம். இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் அவருடன் ஓடியாடி விளையாடித் திரிந்த காலங்களை எண்ணிப்பார்க்கிறேன்.

"விளையும் பயிரை முளையில் தெரியும்" என்ற முதுமொழிக்கிணங்க அமரர். தற்பரானந்தன் அவர்கள் சிறுவயதில. இருந்தே தனது பேரனார் கந்தையா உபாத்தியாரின் கொள்கைகளைப்பின்பற்றி வழமையான மரபுகளைப்பாதுகாத்து சைவத்திலும் தமிழிலும் அளவுகடந்த பற்றுடன் சமூகப்பணியிலும் சமயப்பணியிலும் இறுதி வரை உழைத்து மக்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார்.

மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற அமரர் தனது 18ஆவது வயது நிறைவடைந்ததும் ஆசிரியராகச் சேர்ந்து தனது திறமையினாலும் விடாமுயற்சியினாலும் மிகக் குறுகிய காலத்தில் முதலாம் தர அதிபராகப் பதவியுயர்வு பெற்று கோட்டக்கல்விப் பணிப்பளராக ஓய்வு பெற்ற பின்பும் கல்விப்பணியாற்றிய ஒரு பெரியாரை கல்விச் சமூகம் இழந்துள்ளது. அமரர் தற்பரானந்தன் தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் அதிபராக இருந்த போது பல மாணவர்கள் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார்கள். அந்த நேரம் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர் வழமை போல தமது பிள்ளைகளை தேசிய பாடசாலையில் சேர்க்க விரும்பிய நேரத்தில் அமரர் அப் பெற்றோரிடம் சென்று அவர்களுக்கு முழு நம்பிக்கையைத் தெரிவித்து அம் மாணவர்களைத் தொடர்ந்து தமது பாடசாலையில் கல்வி கற்கச் செய்துள்ளார். அமரரின் நேரடிக்கண்காணிப்பில் இருந்த இம் மாணவர்கள் தமது கல்வியை இப்பாடசாலையில் தொடர்ந்து சிறந்த முறையில் பூர்த்தி செய்து இன்று டாக்டர்களாகவும், பொறியியலாளர்களாகவும் உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியில் இருப்பது அமரர் தற்பரானந்தன் அவர்களுக்கு மனநிறைவை அளித்தது. இம் மாணவர்கள் தூர இடங்களில் இருந்து வந்து அமரரின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றி அஞ்சலி செலுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது.

இன்றைய கால கட்டத்தில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. ஆனால் அமரர் தற்பரானந்தன் தூய வெண்ணிற ஆடை அணிந்து மடித்த சால்வை தோளில் போட்டு ஓர் அசல் தமிழ் ஆசானாக என்றும் காட்சி அளிப்பது அவருக்கு தமிழிலும் தமிழ் மக்கள் மீதும் உள்ள பற்றைக் காட்டுகின்றது அல்லவா?

அமரரின் தந்தையார் காலம் சென்ற திரு. அப்புத்துரை அவர்கள் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்கு ஆற்றிய தொண்டுகளை நாம் நன்கு அறிவோம். அவர் விட்டுச் சென்ற பணிகளை அந்த நிறுவனத்தின் தலைமைப் பதவியை ஏற்று சிறப்பாக கடமைகளை நிறைவேற்றியவர் அமரர்.தற்பரானந்தன் அவர்கள் தனது தந்தையார் காலமாகிய பின்பு குடும்பத்தின் மூத்த உறுப்பினர் என்ற முறையில் தனது உடன்பிறந்த தந்தை போல விளங்கி குடும்பப் பொறுப்புக்களை ஏற்று உடன் பிறந்த சகோதர சகோதரிகள் எல்லோரையும் நல்ல நிலைக்கு ஆக்கிய உத்தமர்.

அமரர் தற்பரானந்தன் கந்தரோடைக் கிராமத்தை தனது உயிரிலும் மேலாக நேசித்தவர், இக் கிராமத்தின் முன்னேற்றத்திற்காக இறுதி வரை உழைத்தவர், கந்தரோடைக் கிராமத்தின் வரலாறு திரிக்கப்படுவதை இட்டு மிகவும் கவலையடைந்துள்ளார். இக்கிராமத்தின் உண்மையான வரலாற்றை தான் நூல் வடிவில் எழுதவுள்ளதாக என்னிடம் பல முறை கூறி அதற்கான முயற்சிகளிலும் இறங்கியிருந்த வேளையில் இறைவன் அவரை தன்வசப்படுத்தியுள்ளார். நல்லவர்களை நாட்டுக்கும் சமூகத்திற்கும் சேவையாற்றுபவர்களை இறைவன் நீண்டகாலம் வாழ விடுவதில்லை என்று கூறுவார்கள் அது இன்று உண்மையாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரோடைக் கிராமம் தமிழிற்கும் சைவத்திற்கும் மக்களுக்கும் முழுநேரமாக சேவையாற்றிய தொண்டனை இழந்து தவிக்கிறது. அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வற்றாக்கை விசாலாட்சி விஸ்வநாதசுவாமியை இரு கரம் கூப்பிப் பிரார்த்திப்போமாக.

வாழ்க அமரர் தற்பரானந்தரின் நாமம்

சாந்தி! சாந்தி !! சாந்தி

**கந்ரோடை**
**சுன்னாகம்**

**ஆ.சி.கணேசவேல்**
**சமாதான நீதவான்**
**முன்னாள் உபதபால் அதிபர் கந்தரோடை**
**உறுப்பினர் பிரதேசசபை**
**வலி தென்மேற்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My dear Mrs Dhatparanandhan and brothers and sisters

It was with deep regret that we heard the heart. rending news of the passing a way of your beloved husband Mr.Dhatparanandhan.

His death has caused a grievous loss not only to your family but also to all of us. Some of his pioneeing work will go a longway to benefit many feature generations. His remarkable achivements would transcend his memory beyond his physical loss. He was a source of strength and inspiration to many of his fellow beings.

He led a very active life and never failed to help anyone when was in need. When I called him in the 2001 to say fare well to him before I left Sri Lanka to Canada he offered me his best wishes with a similing face. I can nevr forget this incident.

Please accept my sicierest condolence of this sad demies of your beloved husband Mr.Dhatparanandhan.

May his soul rest in peace at the feet of "lord shiva" and attain eternal happiness.

**Canada**

**Your loving cousin**
**T.Thanabalasingam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழலாடும் நினைவுகள்

ஊர்பார்க்க நிமிர்ந்த ஆலமரம்
பாறிப் போனது கண்டு உறவென்ன
ஊரே அழுது திங்களொன்று ஆனதே
எம் மனக் கோயிலுக்குள் கோபுரமும் நீர்தான்
அதிலுறையும் தெய்வீகமும் நீர்தான்
பூசலார் மனக்கோயிற் பூசைதனையார் அறிவார்
நிலலாடும் நினைவுகளெனும் பேசாமொழிக்கு
கண்ணீரால் நாம் செய்யும் அபிசேகம் யாருமறியார்

எங்கள் வீட்டு வித்தியாரம்பமெல்லாம்
உங்கள் கைபட்டதால் தானோ
பள்ளிப்பருவம் பல கைதட்டல் பெற்று அங்கே
கிள்ளை மொழியைச் சீர்பெறச் செய்து
மெல்லப் பூமியில் பாதம் பதிகையில் - உம்
சுட்டுவிரலை பிஞ்சுக் கரங்களுக்குள் சிறைப்பிடிக்கவிட்டு
மெல்ல நடத்தி நாம் ஆளாகும் வேளையில்
பாதி வழி பயணம் நிறுத்தி போனகதை நினைக்கையிலே
வார்த்தை மறுக்கின்றது.
கண்ணில் கருமுகில் கருக் கொள்கின்றது
நினைவுகள் இடியாகின்றது
கவலையைக் கண்ணீராக்கி - இக்
கவிதனை உம் ஆத்மாவிற்கு சமர்ப்பிக்கிறோம்.

**மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய மாமா

| | |
|---|---|
| பிறப்பின் | **பெ**றுமதி மரணத்தில் செல்லாக்காசாகும் |
| உறவின் | பி**ரி**வு கண்ணீர் கரிக்கும் உப்பாகும். |
| யாரறிவார் | மா**ய** உலகின் மர்மங்களை |
| அண்ட | **மா**முனிவர் வாழும் இடம் |
| போனீரோ | **மா**ய உலகம் முடிச்சவிழ்க்க |
| எத்தனை | **எ**ண்ணங்களோடு |
| தொடங்கியது | உ**ங்**கள் தல யாத்திரை |
| சங்கீத சபை | நாய**கா** கீதையின் தத்துவம் |
| தான் | உங்க**ள்** வாழ்வோ |
| எம்வாழ்வில் | **தெ**ன்றல் இனி வீசாதோ |
| மெய் என்ற மீதி | பொ**ய்** என்று போனதோ |
| போகும் | **வ**யதோ இது விதியென்று சொல்லியழ |
| மாறும் | உலக**ம்** மரணத்தில் மாறாதோ |

அன்பு மருமகள்
சர்வகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இல்லத் தலைவரான ஐயா அவர்கள் பற்றிய நினைவுகள்

திருமூலர் "சிவபூமி" என அழைத்த இலங்கை எனும் திருநாட்டிலே அகழ்வாராய்ச்சியின் மையமாக விளங்கிய கந்தரோடை எனும் பதியிலே பிறந்த அமரர் அ.தற்பரானந்தன் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுலகிலே தெய்வமாகி விட்டார். இளமையிலே கொண்டிருந்த சைவசமயப் பற்றுதல் காரணமாக சைவத்திற்காகவும், இசைக்காகவும் அரும் பணியாற்றியவர்.

அமரர் அவர்களது இனிய சரீரமும் கம்பீரமான தோற்றமும் பார்ப்பவர்களை பிரமிப்பில் ஆழ்த்தும். அமரர் திரு.அ.தற்பரானந்தன் அவர்களது சமயப்பணிகள் குறிப்பிடத்தக்கவை. இவர் யாழ்ப்பாணத்து திருநெல்வேலி ஆசிரியப் பயிற்சி கலாசாலையிலேயே ஆசிரியராகப் பயிற்சி பெற்றார். "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்" என்பதற்கிணங்க தம்மால் ஆற்றக்கூடிய அறிவு புகட்டும் கருமத்தைச் செய்து வந்தார். கல்வியில் சிறந்து விளங்கிய மானிடராகத் திகழ்ந்தார்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்திலே 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் தலைவராகக் கடமை ஆற்றியதுடன் அதன் பின்னரான காலப்பகுதிகளில் உபதலைவராகவும் கடமையாற்றினார். இல்ல மாணவர்களின் நலனுக்காகத் தன்னையே ஈடுபடுத்திக் கொண்டவர். இவர் தலைவராகக் கடமையாற்றிய இக்காலப்பகுதி மகவும் அரசியல் குழப்பங்களுடன் நிறைந்திருக்க அதனைப் பொருட்படுத்தாது கொழும்பில் இருந்து இல்ல மாணவர்களின் நலன்கருதி அறநெறிப்பாடசாலைக்குரிய பொருட்களைப் பொறுப்பேற்றுக் கொண்டு வந்து சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்கள் தான் ஏற்றுக் கொண்ட கடமைகளை மிகவும் சிறப்புடன் செய்து முடிக்க வேண்டுமென நினைத்துக் கடமை ஆற்றி அதில் நிறைவு கண்டவர். கடமையையே கண்ணாகக் கொண்டவர். இவர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வளர்ச்சிக்கு தன்னுடைய இளமைப்பருவத்தில் இருந்தே பங்களிப்பை வழங்கியவர். இல்ல மாணவர்களது இசையை வளர்த்து இணைப்பாடவிதானச் செயற்பாட்டிற்கும் அடிகோலியவர் அமரர். இவர் மட்டுமன்றி இவரது தந்தையாரும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் எழுது வினைஞராகப் பணியாற்றியவர்.

எந்தவொரு மேடை நிகழ்விலும் 'மரத்தை மறைத்தது மாமத யானை...' என்றே தொடங்கும் வழக்கத்தினை கொண்டதுடன் தனது கருத்துக்களை நகைச்சுவையுடனும் கூறும் பழக்கத்தைக் கொண்டவர். பாரம்பரிய பண்புடன் வளர்ந்த காரணத்தினால் அவரது குடும்பமும் வாழ்வில் அறநெறியைக் கடைப்பிடித்தது. அ.தற்பரானந்தன் ஐயா அவர்களது குடும்பத்தினரும் கல்வியில் சிறந்து விளங்கியதோடு இவரது பேரனாரே கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம் என்ற பாடசாலையையும் நிறுவினார்.

அமரர் அவர்கள் சிறந்த மனப்பக்குவம் கொண்டதுடன் ஆளுமைப்பண்பையும் கொண்டவர். "வீழ்நாள் படாமை நன்றாற்றி வந்தார்க்கும் வாழ்நாள் வழியடைக்கும் காலம் வருமன்றோ! அவ்வகையில் அமரர் அவர்கள் என்ன நினைத்தாரோ எண்ணத் துணிவில்லை எமக்கு. ஆனால் தன் இறுதி நாளை ஞானத்தினால் எண்ணித்துணிந்தது போல் முத்தி தேடி திருக்கேதீஸ்வர நாதரையும், கௌரி அம்பாளையும் நோக்கி திருக்கேதீஸ்வரம் சென்று தரிசித்தார். மறுநாள் இறைவனடி சேர்ந்தார்.

பிறந்தவர் அனைவரும் இறத்தல் உலகநியதி. உலகில் வாழும் வகை தெரிந்து வாழ்பவரே சிறந்த ஆத்மா அவ்வகையில் உலகம் தெரிய சிறப்புடன் வாழ்ந்து மறைந்தவர்களினை இன்னும் வாழ்ந்து கொண்டிருப்போர் அவ்வப்போது நினைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நினைவில் கொள்ளத் தக்க பெருமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்.திரு.அ.தற்பரானந்தன் அவர்கள். அவரின் ஆத்மா சாந்தியடையவும், உற்றார், உறவினர் அமைதி பெறவும் எல்லாம் வல்ல வித்தக விநாயகரின் பாதார விந்தங்களை இறைஞ்சித் தொழுவோமாக.

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

சைவச்சிறுவர் இல்ல மாணவி
வி.விஜயதர்சினி
**A/L (2011)**

**"இந்த உலகிற்கு செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது"**

**"காலத்தினால் செய்த உதவிக்கு சிறிதெனினும் ஞாலத்தில் மாணப் பெரிது"**

**"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலிற் பெரிது"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய சேவை அயரா உழைப்பால் ஏற்றம் பெற்ற ஆன்மீகவான் அப்புத்துரை தற்பரானந்தன்

வடக்கே கீரிமலையும் - நகுலேசர் ஆலயமும் கிழக்கே கன்னியா நீரூற்றும் கோணேசர் ஆலயமும் தென் வரையில் மாணிக்க கங்கையும் - கதிரை மலையும் மேற்பரப்பில் பாலாவியும் திருக்கேதீச்சர நாதர் கோயிலிலும், மாயவனாறும் முன்னை நாதர் கோயிலும் தெற்கில் சந்திர சேகரர் கோயிலும் அதற்கான தீர்த்தமும் நடுவில் சிவனொளிபாதமலையும் இயற்கையாகவே ஈழத்தை அரண் செய்யும் அதி புராதன நிலையங்களாகும். இவை சைவத் தமிழர் வாழ்ந்து வருவதை எடுத்துக் காட்டும் அருள் நிலையங்கள் சின்னங்கள் ஆகும். இவை இந்நாட்டைக்காத்தருளும் வரலாற்றிற்கு முற்பட்ட இடங்களாகும்.

தமிழ் கூறும் தொல் உலகாகிய குமரிக் கண்டத்தைக் கால வெள்ளமாகிய கடல் கொண்டதென்பது கீழைத்தேய நல்லறிஞர் பலரின் தோற்றமாகும். அக்குமரிக்கண்டத்தின் ஒரு கூறே ஈழம் ஆகும். அந்நேரம் இப்பிரதேசம் கடலால் விழுங்கப்படாது விட்டதும் ஒரு சிறு தீவாக விளங்கவைத்ததும் இங்கு காட்டப்பட்டட தீர்த்தங்களின் மகிமையையும் சிவனொளிபாதத்தின் அடிச்சுவட்டையும் பாதுகாத்தற் பொருட்டே என நாம் கருத முடியும்.

இச் சிறப்புப் பெற்ற தீரா நோய் தீர்த்தருளிய கீரிமலைத் தீர்த்தத்தினால் தனது குதிரை முகம் விட்டுக் குமரி முகம் பெற்ற கட்டப்பட்ட திசை உக்கிரசோழ மன்னன் மகள் மாருதப்புரவிகவல்லியால் புதிய திருத்தலமே அருள்மிகு மாவட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவிட்ட புரக்காலம்**

கீரிமலை அடியினின்றும் சுத்த தூயநீர் ஊற்றெடுத்து - கீரிமலைக் குன்றருகே உள்ள கடல் ஊற்றெடுத்து - கீரிமலைக் குன்றருகே உள்ள கடல் உவர் நீர் மத்தியில் நன்னீரும் - அருவி நீரும் கலந்த இடம் ஒன்றிலுள்ள தெய்வீகத்தன்மை நிறைந்த நீர் நிலையே நகுல முனிக்குக் கீரி முகத்தையும் மாருதப் புரவீக வல்லிக்குக் குதிரை முகத்தையும் போக்கியருளி நன்மை பெறச் செய்த அந்தர் வாவி உட்கருவிகளாகிய (மனம் புத்தி சித்தம அலங்காரம்) ஆகியவற்றை அடக்கி எனும் கண்டகி தீர்த்தமாகும். ஆன்மாக்களை ஆட்கொள்ளும் பொருட்டு இறைவன் கொள்ளும் வடிவங்களில் ஒன்று கருணை வடிவமான தீர்த்த வடிவம் இதனாற்றான் அவன் தீர்த்தன் என்று பேசப்படுகின்றார். இறைவன் தீர்த்த வடிவு அவரது "அனுக்கிரகத்தை - அருளைக்" குறிப்பதாகும். கேளிக்கையின்றி மெய்யன்பும் மனப்பக்குவத்துடன் ஆடுந் தீர்த்தத்திற்தான் நன்மையை மேம்பாடடையக் காணலாம். தவமும் தவமுடையார்க்கல்லவா? அல்லாதோர்க்கு

**"கோடி தீர்த்தங்களில் கலந்து குளித்தவை**
**ஆடினாலும் அரனுக்கு அன்பில்லையேல்**
**ஓடு நீரினை ஓட்டைக் குடந்தட்டி**
**மூடி வைத்திட்ட மூர்க்கனோடாக்குமே"**

எனப் பாவநாசத் திருக்குறுந்தொகைத் தேவாரத்தில் அப்பர் பெருமான் கூறுகின்றார். திருமுறை 5.பதி 99 பாடல் 9.

மாருதப்புரவிகவல்லி வரலாறு யாவரும் அறிந்தமையினால் மேற்போக்காக சிலவற்றை இங்கு கூறிக்கொண்டு அப்பாற் செல்வோம்.

நாள்தோறும் மாருதப்புரவிகவல்லி கண்ட தீர்த்தத்தில் நீராடிய பின்னர் தான் வழிபாடாற்றி வந்த கோயில் கதிரையாண்டவர் ஆவார். தனது குதிரை முகத்தை மாற்றிப் பேரிளம் குமரியாக்கி வாழ்வளித்த பெருமைக்குக் கோயில் எடுக்க நினைத்தான். சோழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டரசனாகிய தந்தையாரிடமிருந்து திசை உக்கிர சோழன் அதற்கான ஏவல், மேவல், பொருள் ஏனைய சாதனங்கள் வந்து சேர்ந்தது. திருப்பணி வேலைகள் முட்டின்றி நடைபெற்று வந்த வேளை இந்நாட்டின் வடபகுதியைக் கதிர மலை எனும் இடத்தில் இருந்து அரசாண்டு வந்த உக்கிரசிங்கன் என்னும் அரசிளங்குமரன் மாருதப் புரவிகவல்லியைத் திருமணம் செய்தார். திருப்பணிகளுக்கு அவனும் அனுசரணையாக இருந்து முடித்தவன். இவனுமேயாம். பின்னர் தன் இருக்கையைக் கதிரமலையில் இருந்து வடகிழக்குத் திசையில் உள்ள சிங்கை நகருக்கு (வல்லிபுரக்குறிச்சி) நகர்த்திக் கொண்டான். இவர்கள் திருமணத்தில் சில மாருதப்புரவிகவல்லி வயிற்றில் பிறந்தவன் பாலசிங்கன் மணற்றி என்ற பெயரில் இருந்த யாழ்ப்பாணத்தை இசையிலும் கவிதையிலும் வல்ல வீரனாகிய யாழ்பாடிக்குப் பரிசிலாக வழங்கியவன் இப் பாலசிங்கனேயாம். யாழ்பாடியாகிய வீரராகவனும் அந்தகக்கவி வீரராகவனும் ஒருவரல்லர். வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த இருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கதிரையாண்டவர் கோயில் கோயிற்கடவை என்று இருந்ததாகவும் குதிரை முகம் மனித முகமாக மாற்றப்பட்டபடியால் அவ்விடம் மாவிட்டபுரம் எனப் பெயர் மாறியதாகவும் கூறப்படுகின்றது. (மா.குதிரை, விட்ட - நீங்கிய, புரம் - இடம்) பெரு வழக்கில் இக்காரணப் பெயரே இன்று பேசப்பட்டு வருகின்றது.

## இராசதானி கதிரமலை கந்தரோடையானது

சிங்கை நகருக்கு கதிரமலையில் இருந்த அரசிருக்கையை மாற்றிய உக்கிர சிங்கனோடு கூடிய இடத்தை நெல் வயல்களாக்கி அவற்றை மாருதப் புரவிகவல்லியின் எத்தனத்தால் கட்டப்பட்ட மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் நித்திய நைமித்திய பூஜை ஆராதனைகளின் பொருட்டும் அர்ச்சகர்களுக்காகவும் பிரதாயமாக உருத்தாக்கிச் சென்றனன். கந்தசுவாமி கோயில் கைங்கரியங்களுக்காக இறையிலி நிலமாக விடப்பட்ட இராசதாணி நிலம் கந்தரோடை ஆகியது கந்தர்- கந்தக்கடவுள், ஊடை- குளம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரோடும் வாய்க்காள்- வெளி, இது மாவிட்டபுரம் கந்தக்கடவுளுக்கு விடப்பட்ட இறையிலி நிலம் எனப் பொருள் படும்.

மாருதப்புரவியினால் கட்டப்பட்ட கந்தசாமி திருக்கோயில் இந்நாட்டுக்கு பெருங்கோயிலாக விளங்கி நித்திய நைமித்தியங்கள் நிறைவாக நடந்து வரும் வேளையில் ஐரோப்பியர்கள் இந்தநாட்டு ஆட்சியியைக் கைப்பற்றினர். பறங்கியர் ஆட்சியில் இந்நாட்டு சைவ ஆலயங்கள் இடிக்கப்பமட்டன. அவற்றுள் இவவாலயமும் ஒன்று. டச்சுக்கார ஆட்சியின் பிற்கூறில் கி.பி 1782 இல் கீரிமலைக்கோயில்களை பொறுப்பேற்று சிவஸ்ரீ சபாபதி ஐயர் அவர்களின் தூண்டுதலினாலும்- ஊக்குவிப்பாலும் அக்காலத்தில் இருந்த வள்ம்படைத்த பெரும்மக்களின் பேரார்வத்தினாலும் ஆலயம் பழைய கோயில் இருந்த இடத்தில் இருந்து இப்பொழுது இருக்கும் இடத்தில் அமைக்கப்பட்டு பண்டுபோல் பூசைகள் விழாக்கள் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டன.கிபி 1786ல் தமிழ்நாட்டுச் சிப்பிகளினால் ஆறுமுகசுவாமித்தேர் கட்டுத்தேராக செய்யப்பட்டு பெருமான் திருவிதியுலா வரச்செய்யப்பட்டது அன்றுதொடக்கம் இன்றுதொடக்கம் கந்தரோடையைச் சார்ந்த சீர்வலிமையுடன் வாழ்ந்த தொல் பெருங்குடிச்சைவ வேளாள அடிக்கொனயில் வந்த பரம்பரையினால் தேர்த்திருவழா (எங்கிருந்தாலும்) உபயமாகத் தொன்றுதொட்டு நடந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய கந்தரோடை

இன்றைய கந்தரோடை கிழக்கே சுன்னாகத்தையும் தெற்கே உடுவிலையும் மேற்கே சண்டிலிப்பாயையும் வடக்கே அளவெட்டியையும்,மல்லாகத்தை உள்ளடக்கிய ஊராகும். சுன்னாகத்தைக் கிழக்கெல்லையாகக் கொணடிருக்கும் இவவூர் அதன் நவீன செழிப்புக்குச் சாதகமாக இருக்கும் வசதிகள் இதனையும் வளப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. நீர்வளம், சலவளம்,ஏர்வளம் ,கல்விவளம் படைத்த சீர்வரிசை மிக்க பெருங்குணம் படைத்த சைவத்த தமிழ்ப்பற்றுடைய தொல் குடிப் பெருமக்கள் வாழ்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரோடை யாகும். இவர்கள் சைவ ஆசார அனுட்டான சைவர்களாக வாழ்பவர்கள் இங்கு வாழும் பெரும்பாலானவர்கள் சைவசமயத்தை தழுவியவர்கள். வழிபாட்டுக்குப் போதியளவு கோவில்கள் உள்ளன. அவற்றின் புரோகிதத்திற்குரிய அந்தணர்கான அக்கிரகாரங்களும் உள. அவர்கள் தங்களுக்குரிய குல முறைப் புரோகிதத்திற்குரிய வேதாகமங்களை கற்க அயல் குறிபச்சியான சங்கு வேலியில் சித்தங்கேணியைச் சார்ந்த செல்வந்தரான வைத்தியலிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வடமொழி வேதாகம பாடசாலை நிறுவப்பட்டு இருந்தது. 1920ல் சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோயிலுக்கு அண்மையில் அந்நான் மாவட்டக்கல்வி அதிகாரியாகவிருந்த முகாந்திரம் சிவ ஸ்ரீ சதாசிவ ஐயர் அவர்களால் இதே நோக்குடன் தொடக்கப்பட்ட பிராசீன பாடசாலையின் தோற்றத்திற்கு முக்கால் நூற்றாண்டிற்கு முன்தோற்றம் பெற்ற பாடசாலை இதுவாகும் ஆனால் திண்ணைப் பள்ளிக்கூடக்காலம் மறைந்து பள்ளிக்கூட காலம் வந்தபின்னர் சாதாரண சைவத்தமிழ்ப் பிள்ளைகள் கற்பதற்கான சைவத்தமிழ்ப் பாடசாலை ஒன்றில்லா குறையைத்தீர்துவைத்தார். கந்தரோடை அம்பலவாணர் கந்தையா உபாத்தியாயர் ஆவார் அவர் பிறந்த ஆண்டு 1869-06-16. பாடசாலை நிறுவிய நாள் 1893 தைப்பூசத்திருநாள் கந்தையா உபாத்தியாயர் திருமணமாக முன்னர் நிறுவிய பாடசாலை இதுவாகும். இதே நேரம் இவரது மைத்துநர் இன்னொரு சின்னத்தம்பி கந்தையா (நுபெடளைா முயனெயைா) ஆங்கிலப் பாடசாலையை தொடக்கி தமிழ்க்கந்தையா இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்ற முதுமொழிக்கிணங்க ஆரம்பக்கல்வி இளைஞர்களைத் திறமைசாலிகளாக்கி இடைநிலை உயர் நிலைக்கு வளச்சி பெறவும் ஆங்கிலப் பாடசாலை புகள்பூத்த ஆசிரிய வளத்தினாலும் உலகம் உவக்கும் நல்லறிஞர்களையும் கலாவித்தகர்களையும் அருள்ஞான வள்ளல்களையும் எனைத் திறமைமிக்க நிபுணத்துவம் மிக்க தொழில் வினைஞர்களையும் உருவாக்கிவருவதற்கு படிக்கற்களாக இருந்து வருகின்றன எழுத்தறிவித்தவன் இறைவன் எனப்படும் இவ்விரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளையும் தோற்றிவித்தவர்கள் தெய்வநிலையில் வைத்துப் போற்றப் படவேண்டியவர்கள்.

இப்பெருமக்களது இனபந்துக்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சில மணம் மழும் சாதனங்களாகிய திருக்கோயில் பாடசாலை திருமடங்கள் அன்ன சந்திரங்கள் தீர்த்தக் கேணிகள் முதலான வற்றையும் அவற்றின் பரிபாலனத் திற்கான தர்மசானங்கள் இந்நாட்டில் மட்டுமல்லாது சிதம்பரம் - திருமறைக்காடு போன்ற இடங்களிலும் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது .

புண்ணியநாச்சி அறக்கட்டளை என்று பெரியதொரு சாதனம் இங்கு இருக்கின்றது பல கோடி சொத்துக்களுக்குரியது. அச்சாதனம் சாதனத்துக்'குரிய பெருமனப் பெண்ணாகிய புண்ணிய ாநச்சியாரின் இனபந்துக்களாவர்.

இன்னும் அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணம் கல்வியற் கல்லூரிக்கு பெருநிலப்பரப்புக்காணி தேவைப்பட்டது. அதனை அறிந்த தர்மலிங்கம் சித்தார்த்தன் 240 பரப்பிற்கு மேற்பட்ட கோப்பாய் நல்ல நிலம் ஒன்றை ஈந்து உவத்து மகிழ்ச்சி கண்டவர்.

மேலே கூறப்பட்ட தர்மவான்கள் இப்புண்ணியவதியின் உறவு முறையும் பாரம்பரிய காலத்தில் வந்த தோன்றல்களேயாம்.

கந்தரோடை தமிழ்க்கந்தையா உபாத்தியாயர் சங்கானை ஆதிநிற் சிங்க சேனாதிராசமுதலிவழி (பெயவளவு) சின்னத்தம்பி வழிவந்த அம்பலவாணர் சேதுப்பிள்ளை மகன் ஆவார். அக்காலத்தில் கந்தரோடையில் சிறப்புற்ற விளங்கிய மண்ணோடு கொண்ட முதலி வழி வந்த இருபாலச் சேனாதிராச கவிராசா முதலியார் பரம்பரையைச் சேர்ந்த சின்னத்தம்பி தெய்வானைப்பிள்ளைய 1900 ஆம் ஆண்டு திருமணஞ் செய்தார். இவர்களது இல்லற வாழ்வில் வெகு காலம் பிள்ளைப் பேறில்லாது இருந்தது. இதற்காகப் பர நேர்த்திகள் வைத்தனர். நோன்பிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈற்றில் சேது தீர்த்த மாடி ஆலய வழிபாடு செய்தனர். இவர்கள் பரம்பரையினருக்குச் தேது தீர்த்தம் பலன் தரு என்ற நம்பிக்கை உடையவர்கள். மன நிறைவோடு இக் கைங்கரியங்களை முடிதது ஊர் வந்த கையோடு சிவயோகசுவாமிகளது ஆசியும் இவற்றையடுத்து தெய்வானைப் பிள்ளை கருவுற்ற 1921.10.28 இல் பிள்ளை ஒன்றிற்கு தாயானார். தேது தீர்த்தத்தால் கிட்டியப லன் என்று எண்ணிப் பெரை சேதுநாயகி எனச் சூட்டினர். தேது தந்தையார் பாடசாலையில் தன் கல்வியை ஆரம்பித்தார். வாழ்க்கை நெறிக்கான செலவு கல்லி போதும் என்றளவில் பரியமும் வர திருமணம் ஏற்பாடாகியது. இக்குடும்பத்தவர்கள் கல்வி அறிவு ஒழுங்கங்களில் பண்பட்டவர்கள்.

நன்செய் புன்செய் நிலன்கள் உடையவர்கள் தலைமுறை தலைமுறையாக வழித்தவறியோரை வழிக்கு கொண்டு வந்தவர்கள் மூத்தோர் பெரியார் முதலானோரைக் கனம் பண்ணுவார்கள். நீதி நியாயத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். இருந்தோர்க்க இல்லை. என்னாது ஈபவர்கள் சமய ஆசாரங்களைப் பேணி நடப்பவர்கள். செய்வன திருந்தச் செய்பவர்கள். தமிழ்ப்பற்றும் சைவ பற்றுமுள்ளவர்கள். ஆசாரம் நெகிழ விடாதோர். நெறியல்லா நெறிசேராதவர்கள். நேர்மை நிதானம் தப்பாதவர்கள் தொன்மை மறவாதவர்கள்.

இப்பெருங்குடிப் பிறப்பாளர்கள் தாய் வழி திருமண உறவுகளைத் தங்கள் இனபந்துக்கள் உள்ள மரபுகளையும் பார்த்துச் செய்வதே வழக்கம். இன பந்துக்டகள் வாழும் இடங்கள் தொல்புரம், சுழிபுரம், மூளாய், சங்கானை, நவாலி, அராலி, வண்ணார்பண்னை, நீராவியடி, கோப்பாய், இருபாலை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு , மயிலிட்டி , சுன்னாகம் , இளவாலை, கொல்லங்கலட்டி, கருகம்பனை, உடுப்பிட்டி, புலோலி ஆகிய இடங்களாகும். தமிழ்க்கந்தையா உபாத்தியாயன் மகள் சேதுநாயகிக்கு மூளாயைச் சேர்ந்த அரசகுல குமார சூரிய முதலி வழிவந்த இருமரபும் துய்ய வேளாளகுலத்திலகர்களாகிய வெற்றிவேலு மணியம் அப்புத்துரைக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. அப்புத்துரை அவர்கள் மூளாய் சைவப்பிரகாசா வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வியையும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் ஆங்கிலம் கற்றவர் பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரி பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றிலும் கற்று லண்டன் பல்கலைக்கழக புதுமுகத்திலும் (MATRICULATION) சித்தி பெற்றார்.

188 தமிழ் ஆங்கிலப் பாடசாலைகளையும் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை ஒன்றையும் சைவ அனாதைப் பிள்ளைகள் இல்லம் ஒன்றையும் அரசு பாடசாலைகளைச் சுவீகரிக்கம் (1923-1961 வரை) 1800. உதவி நன்கொடைபெறும் பாடசாலை ஆசிரியராகக் கொண்ட சைவ வித்திய விருத்திச்சங்கத்தின் கணக்காளராக இருந்தவர். இச் சங்கத்தை உயிராக நடத்தி வந்தவர். உயர் திரு.சு. இராசரத்தினம் அவர்கள் ஆவார்.25 ஆண்டுகள் வரை அங்கு பணியாற்றி வந்துள்ளார். எந்த நேரத்திலும் எதனைக் கேட்டாலும்' உடன் சாதகமான பதில் தரக் கூடியவராம் அப்புத்துரை அவர்கள். மனேஜர் உயர்திரு இராசரத்தினம் அவர்கள் எள் எண்ணுமுன் எண்ணெய் ஆக்கிவிடுவாராம். மனேஜர் ஐயா அவர்களது நிழலா நின்று பேருதவி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திற்கு ஆற்றி வந்த பெரியார் இப் பெரியர் சமூகப்பணி, பொதுப்பணி ஆகியவற்றிலும் ஈடுபட்டு வெற்றிசண்டவர் தனது புத்தகமாகிய கந்தரோடைக்கு அஞ்சலகம், கிராமஅபழவிருத்திச் சங்கம், ஐக்கிய நாணய சங்கம் வாசிசசாலை முதலான தாபனங்களை நிறுவ முன்னோடியாக நின்றுழைத்தவர் இவரே. நாளுபரப்புக் காணிடல் இருக்க தமிக்கந்தையா சைவத் வித்தியாலயத்தை உயர்த்தப்பாடு பட்டவர் மாமன்னரின் பின்னர் பாடசாலை முகாமையாளராக இருந்து பாடசாலை விரிவாக்கத்தில் ஐந்தும் ஒன்பதுமாக பதினான்கு பரப்புக் காணிகளை விலைக்கு வாங்கி அதனை ஒரு முழுநிறைவு பெற்ற பாடசாலை ஆக்கிய கரு விரராவார். மேலும், யாழ் இந்துக் கல்லூாயில் பணியாற்றி வந்த வேந்தர் திரு.சுப்பிரமணியம் ஐயா அவர்களை ஸ்கந்தரோதயாக் கல்லூரிக்கு அதிபராகக் கொண்டு வந்தவர் இவரே. இதனை ஐயா அவர்கள் தனது கைப்பட எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமண உறவில்**

அப்புத்துரை- சேதுநாயகி திருமண உறவில் மலர்ந்த நறுமலர்கள் 07 ஆண்டுகள் 04 பெண்கள் 03 தற்பரானந்தன்- நித்தியானந்தன், சர்வானந்தன்- குலகுணேஸ்வரி- குலகுணராணி- குலகுணசக்தி- தேவானந்தன் ஆகியோராவார்.

தலைமகன் தற்பரானந்தன் பாலர்கீழ்ப்பிரிவை இராமநாதன் கல்லூரியிலும்,

பாலர் மேற்பிரிவு தொடக்கம் ஆரம்பக்கல்வியை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையிலும்,

6ஆம் வகுப்புத் தொடக்கம் உயர்தரம் வரை ஸ்கந்தரோதையாக் கல்லூரியிலும் கற்றுள்ளார்.

G.A.Q- பேராதனைப் பல்கலைக்கழகம் - சித்தி

HNDC 1ம் வருடம் சித்தி

**திருமணம்**

மயிலிட்டி நரசிங்க தேவமுதலி மரபில் வந்த கருகம்பனை கீரிமலையை வதிவிடமாக (கங்கைக் கரையில் காசி விசாலாட்சி சமேத விஸ்வநாதர் எப்படியோ, அப்படியே கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் கோயில் கொண்டிருக்கும் தெய்வீகச் சூழலில் அமைந்த இல்லமாகவும் கொண்ட கணக்காய்வு திணைக்களத்தில் பதவி நிலை அலுவலர் ஆக பணியாற்றி ஓய்வு பெற்று இயற்கை எய்திய உயர்திரு.சோதி நாகரத்தினம். மாமங்கம் தம்பதியின் மூத்தமகள் நகுலாம்பிகா தேவியே தற்பரானந்தன் கைகோர்த்த மணமகள் ஆவார். இவர் கந்தரோடை தமிழக்கந்தையா வித்தியாசலையில் 23 வருடங்கள் விஞ்ஞான ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2ஆம் மகன் நித்தியானந்தன்**

ஆரம்பம் தமிழ்க்கந்தையா வித்தியாசாலை உயர்தரம் ஸ்கந்தரோதயாக் கல்லூரி மின்பொறியியலாளரும் நில அளவையாளரும் கட்டு பெத்த தொழில் நுட்பக் கல்லூரியும், நிலஅளவையியல் பயிற்சிக்கல்லூரியும் கரம்பிடித்த பெண் மயிட்டி ஆசிரியர் இலங்கை நாயகம் தம்பதியின் மகள் ோமாங்கனி- மழலை- அச்சுதன்.

**3ஆம் மகன் சர்வானந்தன்**

காங்கேசன்துறைச் சீமெந்துக் கட்டிடத்தாபன எரியூட்டுனர். கரம் பற்றிய பெண்-ஆசிரியர் அம்மை அப்பர் தம்பதியர் மகள் சித்திரா குழந்தைகள் . சிவகரன் சிவஜீவன் சிந்துஜா

**4வது பிள்ளை குலகுணேஸ்வரி**

யாழ்ப்பாணம் பொதுநூலக மேற்பார்வையாளராக விருந்து ஓய்வு நிலையில் இயற்கை எய்திய சண்முகம் கந்தையாவைத் துணைவராகக் கொண்டவர். குழந்தைகள் குமுதினி , ஜபாலினி, துவாரகன், மாதினி, மைதினி பேரப்பிள்ளைகளுள் மூத்த பேத்தியாகிய குமுதினி கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை ஆசிரியர் கந்தரோடை வைத்திய நாதன் தெய்வநாயகி தம்பதியரின் மகன் விஸ்வநாதனை துணையாகக் கொண்டார் அடுத்த பேத்தி ஜபாலினி கருகம்பனை நந்தீஸ்வரன் ஜகரட்சணி தம்பதியின் மகன் பிரணவனைக் கணவராகக் கொண்டு அட்சயா, அகரன் என்னும் குழந்தைகளைப் பெற்றனர்.

**5வது பிள்ளை குலகுணராணி**

சுன்னாகம் மயிலணியைச் சார்ந்த ஆசிரியர் கனகசபை சேதுநாயகி தம்பதியின் மகன் செல்வக்குமரனைத் திருமணஞ் செய்தார் இவர் விவசாய சிறப்புப் பயிற்சி பெற்றவர் இவர் கந்தரோடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் அதிபராக இருந்து ஓய்வு நிலையில் உள்ளார், கஜானன், சாம்பவி, சர்வக இவர்களது பிள்ளைகள் 6வது பிள்ளை குலகுணசக்தி தற் பொழுது கணடாவில் வாழ்ந்து வருகிறார்

**7வது மகன் தேவானந்தன்**

இவர் ஆரம்பக் கல்வியை தமிழ்கந்தையா வித்தியாசாலையிலும், இடைநிலைக்கல்வியை ஸ்கந்தரோதயா கல்லூரியிலும், யாழ் இந்துக்கல்லூரியிலும் கற்று பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட அதேசமயம் ரூசிய நாட்டு பற்றிஸ் லுமும்பா பல்கலைக்கழகத்திற்கும் தெரிவு செய்யப்பட்டிருந்தபடியால், அங்கேயே செல்ல விரும்பி, அங்கு சென்று முழுமையான படிப்பை முடித்து முதற்பிரிவில் சித்திபெற்றதனால் லண்டன் சென்று கலாநிதிப்பட்டம் பெற எண்ணி அங்கு செல்லவிருந்தபோது நோய்வாய்ப்பட்டு மரணத்தைத் தழுவிக்கொண்டார் குடும்பத்தினர்க்கு மட்டுமல்ல அவரைத்தெரிந்த யாவர்க்கும் பெருங்கவலைதான். எழுதிய எழுத்தை எவராலும் மாற்ற முடியாத ஒன்றல்லவோ குடும்பத்திற்கோ நாட்டிற்கோ எட்டாக்கனியாய் முடிந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்பரானந்தன் பற்றிய மேலோட்டமான கண்ணோட்டம்

பிறப்பு 3-01-1943 தந்தையார் அப்புத்துரை தாயார் சேதுநாயகி, குடும்பம் கனதியானது இருமரபுந்துய்ய மன்னாடு கொண்ட குல திலகர்கள் பரம்பரை சைவ ஆசார அனுட்டான சைவர்கள் இனபந்துக்கள் கூடியவர்கள் கல்வியறிவு ஒழுக்கங்களில் மேம்பாடு ஆனவர்கள் இவைகள் குடும்பத்தோடு ஒட்டியவை.

ஊர் கந்தரோடை : வரலாற்றுச்சிறப்பு மிக்க பூர்வீகம். இந்நாட்டுத் தமிழர், சக்தி உறைபதி என பேசப்படுவது தேசிய சேவையில் அந்நாள் சட்டசபை உறுப்பினராக இருந்த உடுப்பிட்டி பால சிங்கம், பின்னர் வந்த பாராளுமன்ற உறுப்பினர்களாகிய வி.தர்மலிங்கம், சி.கதிரவேற்பிள்ளை ஆகியோர் இவர்கள் பரம்பரையில் வந்த உறவினர்களே.

மாவட்ட நீதி பதியாக இருந்தவரும் தமிழ்ச்சொல் அகராதி செய்தவருமான வைமன் கு.கதிரவேற்பிள்ளையும் (1829-1904) இக்குடும்பத்தவரேயாம். யாழ் சைவவித்தியா விருத்திச்சங்கம் (உயர் திரு.சு.இராசஇரத்தினம்) ஆகியவற்றின் தோற்றங்களுக்கு அரும் பாடுபட்டு அயராது உழைத்த பெருமக்களும் இக்குடும்பங்களைச் சார்ந்தோர் ஆவார்.

மேற்காட்டிய குடும்பப் பெருமை இருந்தாலும் தன்னை வெளிக்காட்டாது சாதாரன மனிதநேயமுடையவராக வாழ்ந்த வரே தற்பர்.

உயர்தர கல்விகற்கும் போது 1960 இல் எழுது வினைஞர் சேவைக்கான போட்டித் தேர்வுக்குத் தோற்றி தெரிவானார் கட்டப்பகுதிக்கு (P.W.D) நியமனக் கடிதம் முதல் வந்து விட்டது, ஆயின் அதனை ஏற்கவில்லை. "பிச்சைபுகினும் கற்கை நன்றே கல்விகரையில கற்பவர் நாட் சில என்ற மகாவாக்கியங்களைச் சிரமேற்கொண்டு மேலும் கற்பதற்கும் அதற்கு அடிப்படையான கற்பித்தல் தொழிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 02.01.1962. இல் யா / கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
2. 15.03.1962 - 31.12.1963 திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலை கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி.
3. 01.01.1964 - 31.08.1966 வது / பண்டாரவளை தமிழ் மகா .வித்
4. 15.06.1966 - 31.12.1966 கொ/ தெ கதீட்றல் கல்லூரி கொ.13
5. 01.07.1967 - 31.08.1969 கொ/ தெற்கு வெள்ளவத்தை சீ.சீ.த.க பாடசாலை கொ.06
6. 01.09.1969 - 03.05.1974 கொ/தெ பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி (அதிபர் தரம் iV)
7. 04.05.1974 - 14.01.1975 கோ/புலத் கொகுப்பிட்டிய த.ம.வித்
8. 15.05.1975 - 05.02.1975 கொ/61த.நுகே கொடத.ம.வித்
9. 06.02.1976 - 14.09.1978 யா/ஸ்கந்தவரோதயாக் கலலூரி
10. 15.09.1978 - 31.05.1982 யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித் அதிபர் தரம் I
11. 01.06.1982 - 20.10.1991 யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை
12. 21.10.1991 - 30.09.1993 யா/ஸ்கந்த வரோதயாக் கல்லூரி பிரதி அதிபர்

## ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை

1) 09.11.2002 இல் நடை பெற்ற மேற்படி பரீட்சை க்குத் தோற்றிச் சித்தியடைந்து SLEAS III தர சேவைக்கு தெரிவு செய்யப்பட்டார்
2) 01.10.1993 – 31.12.1993 பதில் உ.க.ப கடமை தெல்லிப்பளை கோட்டக்கல்வி அலுவலகம்
3) 01.01.1993 – 28.01.1997 கோ. க. அலுலகம் சங்கானை கோட்டக்கல்வி பதில் பணிப்பாளர்.
4) 09.01.1997 – 30.06.1997 சங்கானை கோட்டக் கல்விப்பணிப்பாளர்
5) 01.07.1997 - 2003 உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) 09.02.2002 இல் தரம் III இ.க.நி வேை தரம் உயர்வு
07) 02.01.2003 இல் ஓய்வு பெற்றார்.

ஆசிரிய சேவையில் கல்விநிர்வாக சேவைக் காலங்களில் சிறப்பாகப் பல சமய சமூக பொதுப் பணிகளிலும் ஈடுபட்டு உழைத்து வந்தார் கொ/பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் அதிபர்கள் திருவாளர்கள் நல்லையா, சங்கரலிங்கம் ஆகியோர் காலத்தில் பணி புரிந்த அவர், அக்கல்லூரியின் ஆரம்ப உயர் படியேற்ற காலம் அதுவாகும் அக்காலத்தில் அக்கல்லூரிச் சாரண மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வந்த ஆசிரியர் இவராவார்.

கொழும்பில் இந்தக்காலத்தில் விவேகானந்த சபை, கொழும்பு இந்து வாலிபர் சங்கம், அகிலஇலங்கை இந்துமாமன்றம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் திருக் கேதீச்சரம் திருப்பணிச்சபை போன்றவை எடுக்கும் கைங்கரியங்களில் துடிப்பாக நின்றுதவிப் நன்மதிப்பைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியராக இருந்த காலத்தில் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் உறுப்பினராக இருந்ததுடன் அச் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினராக இருந்தும் தொழிற்சங்க நடைமுறை ஒழுங்குகளையும் அமுல்படுத்தினார். இது தொடர்பாக இங்கு நடக்கும் சர்வதேச கருத்தரங்குகளிலும் கலந்து அனுபவங்களையும் பெற்றுள்ளார்.

## தொண்டு படு செயற்பாடுகள்.

இவர் நிர்வாக சேவையில் இருக்கும்போது மாணணவர்களிடம் சைவத்தமிழ் பண்பாட்டை வளர்க்கும் நோக்கில் தமிழ்த்தினப்போட்டி, சைவத் திருமுறைவிழா, தோரணம் பின்னல், கோலம் போடுதல், மாலை கட்டுதல், திருமுறை ஓதல், புராண படணஞ் செய்தல் போன்றவற்றை செய்வித்தும் பரிசில்களை வழங்கி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட இலங்கை சங்கீதசபை

மேற்படிச்சபையின் கல்வித்திணைக்கள பதவி வழிச் செயலாளராகப் பத்து ஆண்டுகள் வரை கடமையாற்றினார். அச்சபைக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு காணி கொள்வனவிலும், பின் கட்டடம் அமைப்பதிலும் பெரும்பங்காற்றினார். சபைப்பரீட்சையை வெளிநாடுகளிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளார். இப்பரீட்சைகளின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைவோர்க்கு கலாவித்தகர் என்ற பட்டத்தையும் சான்றிதழ்களையும் வழங்கிவந்தனர்.

## சைவவித்தியா விருத்திச் சங்கம்

சைவவித்தியா விருத்திச் சங்கம் சிறிது காலம் முடங்கி இருந்தது. ஆனால் இப்போ முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றது. இது இயற்கை எய்திய இந்து போட்டின் புனித ஆத்மாவின் அருட் செயலாகும். இவர் அதன் தலைவராக 2004 – 2010 வரை இருந்தார். இக்காலத்தில் இந்து போட் இராசஇரத்தினம் காலமும் வாழ்வும் சைவவித்தியா என்னும் இரு வெளியீடுகள் வெளிவந்தவை குறிப்பிடத்தக்கது ஆகும். இருந்தும் இவர் உடுவில் மத்தியஸ்தர் குழுவின் தலைவராகப் பணியாற்றினார்.

சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபை ஒன்றமைக்கப்பட்டது. அதன் வேலையாக சுன்னாகம் அஞ்சல் அலுவலகக் காணி கொள்வனவு செய்யப்பட்டது. இச்சபையின் தலைவராக இருக்கும் இவரும் பாடுபட்ட தன் பயனாக கனடா வாழ் சுன்னாகம் மக்கள் மற்றும் வலி தெற்கு மக்களின் முயற்சியினால் அக்காணி கொள்வனவு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவப் பட்டங்கள

1. 1998ல் அகில இலங்கைச் சமதான நீதவான் பட்டம் நீதி அமைச்சு வழங்கிக் கொளரவித்தது.
2. 09.09.2005 இல் நடந்த அகில உலக சேக்கிழார் மன்னறம் நடத்திய சேக்கிழார் மாநாட்டில் சித்தாந்த வித்தகர் பட்டமும் நடராசர் சிலை விருதும் வழங்கப்பட்டது.
3. 2008 இல் தருமை ஆதினம் மதுரைக்கிளையில் நடத்திய சித்தாந்த மாநாட்டில் நினைவுப் பரிசையும் பெற்றார்.

இவர் அரச சேவை ஓய்வுதியர் சங்கத்தின் தலைவராவாரகவும் பணியற்றியுள்ளார். கந்தரோடை கிராமத்திற்கு இவர் தந்தையார் செய்து விட்ட கைங்கரியங்களைக் குறைவில்லாது செய்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. என்னும் பல ஆயிரம் சேவைகளைக் குறிப்பிடலாம். நேர அவகாசமின்மையால் அவற்றை நிறுத்தி நிறைவிற்கு வருகின்றேன்.

திரு.சி.கந்தசாமி
முன்னாள் விவேகானந்தசபை
பரீட்சைச் செயலாளர்
திருக்கேதீச்சரம் அறங்காவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிய அனைத்து உள்ளங்கட்கும், அன்னாரின் ஈமக் கிரியைகளிலும் மயானத்தில் நடைபெற்ற அந்தியேட்டி தகனக் கிரியைகளிலும் கலந்து கொண்டவர்க்கும் ஆறுதல் கூறிய உற்றார் உறவினர்கள், நண்பர்கள், பழைய மாணவர்கள், கல்வித்துறை மற்றும் ஏனைய துறை சார்ந்தவர்களுக்கும், பத்திரகை மூலமாகவும், பதாகைகள் மூலமாகவும் அஞ்சலிகளை பிரசுரித்த பாடசாலைகள், நிறுவனங்கள், ஸ்தாபனங்களுக்கும் தனிப்பட்ட முறையில் பிரசுரித்த அன்புள்ளங்களுக்கும் இரங்கல் உரையாற்றிய பெரியோர்க்கும் மலர் மாலை அணிந்து, மலர் வளையம் வைத்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தூர தேசத்திலிருந்து தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் face book தந்தி, கடிதங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நினைவு ஏட்டில் விடயதானம் வழங்கியவர்களுக்கும் பெருந்திரளாக வந்து அஞ்சலி செலுத்திய யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் சைவ வித்தியா விருத்திச் சங்க உறுப்பினர்கள், நிர்வாகிகள், இல்லச் சிறுவர்களுக்கும். வட இலங்கைச் சங்கீதசபை உறுப்பினர்களுக்கும்

இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட மேலைத் தேய வாத்திய அணிவகுப்பு, மாணவ அணிவகுப்பு செய்த கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மாணவர்களுக்கும் அன்னார் நோயுற்றிருந்த வேளை உதவிய அனைத்து வைத்தியர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும், அனைத்து வழிகளிலும் உதவியவர்களுக்கும் இன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றி.

நன்றி

ஆனந்தகம்
கந்தரேடை

மனைவி
மற்றும் குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முயற்சி திருவினையாக்கும்

அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது

எல்லாம் சிவன் செயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org